# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

சுடர் 32 கதிர் 315 புரட்டாதி 21ஆம் நாள் சனிக்கிழமை 07 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20
பக்கங்கள்: 28


# தீர்வு பற்றி அறிவதிலேயே அமெரிக்கா கடும் அக்கறை

## அங்கு சென்றிருந்த இலங்கைக் குழுவினரிடம் அந்த நாட்டு அதிகாரிகள் சரமாரியாகக் கேள்விகள்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 7

இலங்கையின் புதிய அரசமைப்பு முயற்சிகள் தொடர்பாக அறிந்து கொள்வதில் அமெரிக்க அதிகாரிகள் ஆர்வம் கொண்டிருந்ததாகத் தெரியவருகின்றது. இந்த முயற்சியின் ஊடாக தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்குமா? என்பதைத் தெரிந்து கொள்வதே அவர்களின் நோக்கமாக இருந்துள்ளது.

அமெரிக்காவுக்கு கடந்த மாத இறுதியில் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் அமைச்சர்கள் நிமல் சிறிபால டி சில்வா, சந்திராணி பண்டார, இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார, நாடாளுமன்ற உறுப்பினர்கள் விஜித ஹேரத், குமார வெல்கம, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அடங்கிய குழு சென்றிருந்தது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட 15 இற்கும் மேற்பட்ட தரப்புக்களுடன் இலங்கைக் குழுவினர் சந்திப்புக்களை நடத்தினர்.

இந்தச் சந்திப்புக்கள் ஒவ்வொன்றிலும் இலங்கையின் நல்லிணக்க முயற்சி, சுயாதீன ஆணைக்குழுக்களின், உருவாக்கம், தகவலுக்கான உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை உள்ளிட்ட விடயங்களை சபாநாயகர் கரு ஜெயசூரிய அமெரிக்க அதிகாரிகளுக்கு எடுத்துரைத்துள்ளார்.

சந்திப்பின் இறுதியில் அமெரிக்க அதிகாரிகள், புதிய அரச » 23

## சரத் என். சில்வாவின் மனுவுக்கு எதிராக கூட்டமைப்பு மனு

யாழ்ப்பாணம், ஒக். 7

சரத் என். சில்வா தலைமை நீதியரசராக இருந்தபோது வழங்கிய தீர்ப்பை வைத்தே, அவர் தற்போது தாக்கல் செய்துள்ள மாகாண தேர்தல் திருத்தச் சட்டத்துக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் மனுவுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று மனுத் தாக்கல் செய்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டத்துக்கு எதிராக முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என். சில்வா உயர் நீதிமன்றில், அடிப்படை உரிமை மீறல் மனுத் » 25

## மின்சாரம் தாக்கி குடும்பத்தலைவர் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ்ப்பாணம், தாவடியில் மின்சாரம் தாக்கி குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்தார். தாவடி பத்திரகாளி கோவிலடியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் உதயகுமார் (வயது 54) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தார்.

வீட்டு வேலி தகரத்தால் அடைக்கும் பணி இடம்பெற்றது. அந்த வேலியருகே மின் வயர் சென்றுள்ளது. அந்த வயரை வேலித் தகரம் அறுத்துள்ளது. தகரத்தை ஏந்தி நின்ற வீட்டின் உரிமையாளருக்கு மின்சாரம் தாக்கியது. அதனால் அவர் உயிரி » 25

## காணி விடுவிப்பை விரைவுபடுத்த பிரிட்டன் அழுத்தம்

(விரிவு பக். 2)

## ஆசிரியர்களை சமச்சீராகப் பங்கீடு செய்வதிலுள்ள சிக்கலுக்குத் தீர்வாக

# வடக்கு விவசாய அமைச்சரின் அதிர்ச்சியளிக்கும் யோசனை

யாழ்ப்பாணம்,ஒக்.7

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை சமச்சீராக நியமிப்பதிலுள்ள பிரச்சினைக்குத் தீர்வாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் அதிர்ச்சி தரும் யோசனையை முன்வைத்துள்ளார்.

"வடக்கு மாகாணத்தில் பின்தங்கிய கிராமப் புற பாடசாலைகள் அனைத்தையும் மூடிவிட்டு. அந்த பகுதி மாணவர்களை நகரப்புற பாடசாலைகளில் கற்க ஏதுவான வழிகளை மாகாண கல்வி அமைச்சு செய்ய வேண்டும்" என்று அவர் வலியுறுத்தினார்.

அவரின் இந்த யோசனையின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் தற்போது இயங்கும் 967 » 24

# 12 ஆவது நாள்

## உணவு ஒறுப்பில் உள்ளோருக்கு உடன் தீர்வை வழங்கவேண்டும்

### கொழும்பு அரசிடம் வலியுறுத்தி வடமாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம் ஒக் 7

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் மூவர் கடந்த 12 நாள்களாக தொடர்உணவுஒறுப்புப்போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் ஆகியோர் உடனடியாக ஆராய்ந்து தீர்வை வழங்க வேண்டும் என வடக்கு மாகாண சபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர் » 25



## நுண் நிதிக் கடன்களை வடக்கில் நிறுத்தவேண்டும்

### மத்திய வங்கி ஆளுநரிடம் நேற்று பொது அமைப்புக்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 7

வடக்கு மாகாணத்தில் நுண் கடன் வழங்கல் செயற்பாடுகளில் ஈடுபடும் நிதி நிறுவனங்களின் அனுமதிகள் நிறுத்தப்படவேண்டும் என மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசாமியிடம் யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்று நேரில் வலியுறுத்தினர். » 25

## நீதி அமைச்சர், சட்டமா அதிபருடன் கூட்டமைப்பு இன்று அவசர பேச்சு

யாழ்ப்பாணம், ஒக். 7

அநுராதபுரத்தில் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கை தொடர்பில், நீதி அமைச்சருடனும், சட்டமா அதிபருடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று அவசர சந்திப்பை மேற்கொள்ளவுள்ளது. » 23

## மகிந்த அணியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் களேபரம்

### 4 பொலிஸார் காயம்; 28 பேர் கைது

கொழும்பு, ஒக். 7

மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்ய அரசு எடுத்திருக்கும் தீர்மானத் துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மகிந்த அணியினர் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது அதில் பங்கேற்ற இரு தரப்புகளுக்கு இடையே களேபரம் ஏற்பட்டது. அதனால் ஏற்பட்ட அமைதியின்மையால் பொலிஸ் அதிகாரிகள் நான்கு பேர் காயமடைந்தனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு » 25

## அமைதிக்கான நோபல் பரிசு ஐகான் தொண்டு அமைப்புக்கு

ஜெனிவா, ஒக். 7

2017ஆம் ஆண்டின் 'அமைதிக்கான நோபல் பரிசு' பன்னாட்டு அளவில் அணு ஆயுதங்களுக்கு எதிராகப் போராடி வந்த அணு ஆயுதங்களை அகற்றுவதற்கான பன்னாட்டுப் பரப்புரை (ஐகான்) என்ற அமைப்புக்கு வழங்கப்பட உள்ளதாக அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட 300பேர் இந்த » 25

## 10 இலட்சம் குரங்குகளால் தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி

### மைத்திரி விசனம்

கொழும்பு, ஒக். 7

"தேங்காய் உற்பத்தி வீழ்ச்சிக்கு குரங்குகளின் சேட்டையும் காரணமாகும். நாடு முழுவதிலும் உள்ள 10 லட்சம் குரங்குகளால் 1 லட்சம் ஏக்கர் விளை நிலங்களின் தெங்கு உற்பத்திக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பௌத்த நாடானாலும் மிருகங்களைப் பார்க்கிலும் மனித குலத்தைப் பாதுகாக்க வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சினைக்குக் காத்திரமான முடிவு எடுக்க நேரிடும்"

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். தேசிய உணவு உற்பத்திச் செயற்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (விரிவு பக்.3)



## இளவாலை சென். ஹென்றிஸ் கால்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 7

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையேயான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில், 20 வயது ஆண்கள் பிரிவில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி தேசியச் சம்பியனானது.

சாளிக கல்லூரியில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நீர்கொழும்பு மேரிஸ்ரெலாக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் சென். ஹென்றிஸின் » 23

## 182 தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் இடைநிறுத்தம்

### வடக்கு மாகாண சபை நேற்றுத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக். 7

வடக்கு மாகாணத்தில் 182 தொண்டர் ஆசிரியர்களை மட்டும் ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்பதற்கு கொழும்பு கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட அனுமதி தொடர்பில் வடக்கு மாகாண சபை சீராய்வு செய்த பின்னரே அவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 107 ஆவது » 25

## உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பணிகளில் அதிகாரிகள் மும்முரம்

» 25

## கஞ்சா கடத்தியதாக தம்பதியர் மாங்குளத்தில் நேற்றிரவு கைது

முல்லைத்தீவு, செப்.7

கிளிநொச்சியிலிருந்து அநுராதபுரத்துக்கு காரில் கடத்திச் செல்லப்பட்ட ஒரு கிலோ கிராம் கஞ்சா நேற்று இரவு மாங்குளத்தில் கைப்பற்றப்பட்டது. அதனைக் கடத்திச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் சிறப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மாங்கு » 25

### வடக்கில் இராணுவம் வசமுள்ள

# காணிகள் விடுவிப்பை விரைவாக்கவேண்டும்

### ஆளுநர் குரேயிடம் வலியுறுத்தினார் பிரிட்டன் அமைச்சர் மார்க் பீல்ட்

கொழும்பு, ஒக்.7
வடக்கில் போரின் பின்னரும் இராணுவத்தின் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். துரிதமாக இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தினார் பிரிட்டனின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான அமைச்சர் மார்க் பீல்ட்.

இலங்கை வந்துள்ள மார்க் பீல்ட் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள், நல்லிணத்துக்காகத் தற்போதைய அரசு முன்னெடுத்துள்ள நகர்வுகள், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நகர்வுகள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் பேசப்பட்டுள்ளது. வடக்கின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத்தாம்முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவோம் என்று மார்க் பீல்ட் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகளைப்பாதுகாக்கும் நகர்வில் வாழ்விட உரிமை முக்கியமானது என்று சுட்டிக்காட்டியுள்ள, மார்க் பீல்ட் இராணுவத்தின் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். பிரிட்டன் பிரதிநிதிகள் விரைவில் பொதுமக்களின் காணிகளை ஒப்படைக்கும் வேலைத் திட்டங்களை எதிர்பார்க்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கில் முதலீடுகளை அதிகரிப்பதன் ஊடாக வடக்கு இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க முடியும். அதற்கான முயற்சிகளுக்குப் பிரிட்டன் உதவ வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் குரே சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்கம் உருவாகுவதற்கு வசதியாக மூவின மாணவர்களும் கற்கும் தேசிய பாடசாலை ஒன்றை உருவாக்கும் தனது முயற்சி குறித்தும் குரே சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவத்தின் வசமுள்ள மக்களின் காணிகளை விடுவிப்பது அரசின் பொறுப்பு. தற்போதைய அரசு பல ஆயிரம் ஏக்கர் பொதுமக்களின் காணிகளை விடுவித்துள்ளது. பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்கின்றன. படிப்படியாக அதற்கான முன்னகர்வுகள் இடம்பெறுகின்றன் என்று வடக்கு ஆளுநர் சந்திப்பின்போது தெரிவித்துள்ளார்.

வெகு விரைவில் இந்த வேலைத் திட்டம் நிறைவடையும். பொதுமக்கள் தமது நிலங்களில் பூரண சுதந்திரத்துடன் வாழ ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ற-31)



### முகமாலைப் பிரதேசத்தில்

# மந்தகதியில் நடக்கிறது வெடிபொருள் அகற்றல்

### விரைவுபடுத்த பிரிட்டன் உதவவேண்டும் எனக் கோரிக்கை

கிளிநொச்சி, ஒக்.7
கிளிநொச்சி, முகமாலைப்பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் வெடிபொருள் அகற்றல் செயற்பாடு மிகவும் மந்த கதியில் நடக்கின்றது. அதை விரைவுபடுத்த பிரிட்டன் உதவ வேண்டும்.

இவ்வாறு பிரிட்டன் ஆசிய பசுபிக் விவகார அமைச்சர் மார்க் பீல்ட்டிடம் கோரிக்கை விடுத்தார் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.அருமைநாயகம்.

இலங்கை வந்துள்ள மார்க் பீல்ட் தனது குழுவினருடன் இன்று வடக்குக்குப் பயணம் மேற்கொண்டார். அவர்கள் நேற்று முகமாலை மற்றும் அதை அண்டிய பகுதிகளை நேரில் பார்வையிட்டனர். மாவட்டச் செயலருடனும், அந்தப் பகுதிகாணி உரிமையாளர்களுடனும் கலந்துரையாடினர். அதன்போதே மாவட்டச் செயலர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார். "முகமாலையை அண்டிய பகுதியில் அதிகளவான வெடிபொருள்கள் புதைக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் நடக்கும் வெடிபொருள் அகற்றல் செயற்பாடு மிக மந்தகதியில் நடக்கின்றது. குறைந்தளவு ஆளணியுடன் இரு தொண்டு நிறுவனங்கள் மூலம் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது. அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் மீள்குடியமர முடியாத நிலைமை காணப்படுகின்றது.

வெடிபொருள் அகற்றும் செயற்பாட்டை விரைவுபடுத்தினால் மக்கள் மீள்குடியமர முடியும். அதற்கு பிரிட்டன் உதவி புரிய வேண்டும். மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்ப வெடிபொருள் அகற்றும் பணிகள் விரைவுபடுத்தப்பட வேண்டும்." என்று மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டினார்.

"இவ்வாறான பணிகள் மற்றும் தேவைகளை நேரில் பர்வையிடுவதுடன், அது தொடர்பாக ஆராய்வது எமது கடமை. அதற்காகவே இங்கு வந்துள்ளோம்." என்று மார்க் பீல்ட் பதிலளித்தார். அங்குள்ள நில உரிமையாளர்களின் தற்போதைய வாழ்வாதார நிலைமைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

(ற-101)



## ஆசிரியர்கள், அதிபர்களின் தேவைகளில் புறக்கணிப்பு

### கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக்.7
அரசும், அதிகாரிகளும் ஆசிரியர்கள், அதிபர்களின் தேவைகளை நடைமுறைப்படுத்துவதில்லை என்று தெரிவித்து கொழும்பு வலயக் கல்விப் பணிமனைக்கு அருகில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் தொழிற் சங்கங்கள் இணைந்து ஆசிரியர் தினமான நேற்று இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

"2014ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வெளியிடப்பட்ட புதிய ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பிலும், புதிய அதிபர் சேவை பிரமாணக் குறிப்பிலும் குறிப்பிட்டுள்ள உரிமைகள் தொடர்ந்தும் தாமதப்படுத்தப்பட்டு வருகின்றன. 16/2017 சுற்றறிக்கையின் படி அதிபர்களின் சம்பளம் 6 ஆயிரத்து 500 ரூபா வரை உயர்த்தப்பட்ட நிலையில் ஆறு மாதங்களுக்கு மேலாகியும் அதிகாரிகள் அதை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகளை வழங்காமை, வருடாந்த சம்பள ஏற்றங்களை உரிய நேரத்தில் செயற்படுத்தாமை, ஆசிரியர்களின் சேவைக்கால செயலமர்வுகளை முறைப்படி திட்டமிடாமல் நடத்துதல், ஆசிரியர்களின் 10 மாத கடன்தொகையை வழங்குவதில் இழுத்தடிப்புச் செய்தல் , பரீட்சைப் பெறுபேறை அதிகரித்தல் எனும் பெயரில் நடைமுறைசாத்தியமற்ற நிபந்தனைகளை திணித்தல். போன்றவற்றுடன் ஆசிரியர்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகளை மதிக்காது நசுக்கத்துடிக்கும் அதிகாரத்தரப்பு ஆசிரியர் தினத்தை கொண்டாடுகின்றது.

இவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதுடன் ஆசிரியர்களின் உரிமைகள் கிடைக்க அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்தக் கவனவீர்ப்பு நடைபெற்றது." என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

(ற)

### தேசிய நல்லிணக்கச் செயலணியின்

# வேலைத் திட்டங்கள் தொடர்பில் யாழ். வந்து சந்திரிகா ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக்.7
தேசிய நல்லிணக்கச் செயலணியின் தலைவியும்முன்னாள் அரசதலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டார். தேசிய நல்லிணக்க செயலணி மூலம் வழங்கப்பட்ட நிதி ஊடாக முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தொடர்பில் அவர் வடக்கு அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இது தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் உள்ள விடுதி ஒன்றில் நடைபெற்றது.

நல்லிணக்க செயலணியால் வடக்கு மாகாண திறைசேரிக்கு வழங்கப்பட்ட 150 மில்லியன் ரூபா நிதியில் மேற்கொள்ளப்படும் திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடினார். குருநகர் தொடர்மாடிக்கு முன்னுள்ள வலை உற்பத்தி நிலையத்தையும் நேரில் சென்று பார்வையிட்டார். அந்த உற்பத்தி நிலையத்துக்கு 5 லட்சம் ரூபா நிதி அவரால் வழங்கப்பட்டது.

அதன்பின்னர் நல்லூர், கச்சேரி வீதியில் உள்ள சாந்தியகத்துக்கும் சென்றார். நேற்றே அவர் கொழும்பு திரும்பினார். (ற-101)

## பூவரசங்குளம் ம.வியில் ஆசிரியர் தின நிகழ்வு

வவுனியா, ஒக்.7
வவுனியா பூவரசங்குளம் மகா வித்தியாலயத்தில் நேற்று ஆசிரியர் தின நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன. பாடசாலையின் அதிபர் த.தர்மகடாட்சம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.



சிறப்பு நிகழ்வாக வவுனியா மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் மாணவரின் மனப்பாங்கு விருத்தியில் பெரிதும் மாற்றத்தை ஏற்படுத்துவோர் ஆசிரியர்களா? பெற்றோர்களா? என்ற தலைப்பில் கல்லூரி ஆசிரியர்கள் பங்கு கொண்ட பட்டிமன்றமும் இடம்பெற்றது.

நிகழ்வில் வவுனியா தெற்கு கல்வி வலய ஆசிரியர் வளநிலைய முகாமையாளர் வீ.பரஞ்சோதி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். (ற-ரி4)

ரோஹிங்யருக்கு எதிரான ஆர்ப்பாட்டம்

## தேடப்பட்டு வந்த ஒருவர் நேற்று பொலிஸில் சரண்

கொழும்பு, ஒக்.7

கல்கிசையில் ரோஹிங்ய முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் தொடர்புடைய குற்றச்சாட்டில் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வாதுவையைச் சேர்ந்த பிரகீத் சாணக குணதிலக (வயது 40) என்பவரே கைது செய்யப்பட்டார். இவர் தேடப்பட்டு வந்த நிலையில்நேற்றுகொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவில் சரணடைந்தார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

இந்த விடயத்தில் தொடர்புடைய குற்றச்சாட்டில் அரம்பேபொல ரத்னசார தேரரையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

கைது செய்யப்பட்டுள்ள பிரகீத் சாணக குணதிலக ஏற்கனவே பாணந்துறை நீதிமன்றால் 3 வழக்குகளில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர். அவற்றில் இரண்டுமுஸ்லிம்பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் என்றும், மற்றையது மகளிர் பாடசாலை ஒன்றின் அதிபரை அச்சுறுத்தியமை தொடர்பானது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டுள்ள அவர் கல்கிசை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை ஒரு தேரர் மற்றும் பெண் உட்பட 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவருக்குப் பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளது. தேரர், பெண் உட்பட 8 பேர் எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் - என்றார்.

கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி 30 ரோஹிங்ய முஸ்லிம்கள் காங்கேசன்துறைக் கடற்பரப்பில் தத்தளித்துக்கொண்டிருந்த நிலையில் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப் பட்டு மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

பின்னர் கல்கிசையில் ஒரு வீட்டில் அவர்கள் தங்க வைக்கப்பட்டனர். அவர்களை தீவிரவாதிகளாக சித்திரித்து சிங்ஹலே அபி எனும் தேசிய அமைப்பு சார்பில் அக்மீமன தயாரத்ன தேரர் தலைமையில் முற்றுகை ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர்.

(ற-31)

## முதியோர் விழிப்புணர்வு செயற்றிட்டம்

வவுனியா, ஒக்.7



வவுனியா எல்லைக் கிராமங்களில் ஒன்றான கோவில்புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயத்தில் முதியோர் விழிப்புணர்வு செயற்றிட்டம் நேற்று நடைபெற்றது.

பாடசாலை அதிபர் கே.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் மூத்தோர் பற்றிய விழுமியங்கள் பற்றி விரிவாக மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்

நிகழ்வில் கனடா புன்னகை அமைப்பின் உதவியூடாக மின்சாரம் இல்லாத கிராமத்தில் இருந்து கற்க வரும் மாணவர்களுக்கு கற்க வசதியாக சூரிய சக்தியில் இயங்கும் மின்விளக்குகள் வழங்கப்பட்டன.

(ற)



# விவசாயம் சார் உபகரணங்களுக்கு வரி விலக்கு

### அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.7

தேசிய உணவு உற்பத்திப் புரட்சியை வெற்றிபெறச் செய்வதற்காக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து விவசாய தொழிற்றுறைப் பொருள்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

தேசிய உணவு உற்பத்திப் புரட்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று கெக்கிராவ, திப்படுவெள நீர்த் தேக்கத்துக்கு அருகே நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அரசதலைவர் இவ்வாறு தெரிவித்தார் என அவரது ஊடகப் பிரிவு தெரிவித்தது.

ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

வறுமையை ஒழித்து நாட்டை மீண்டும் தன்னிறைவுப் பொருளாதாரத்தை நோக்கிக் கொண்டு செல்லும் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு அரசியல், இனம், சமயம் மற்றும் கலாசார பேதங்களின்றி நாட்டின் அனைத்துக் குடிமக்களும் ஒன்றுபட வேண்டும்.

தென்னை முக்கோண வலயம் உட்பட ஏக்கர் கணக்கான தென்னங்காணிகள் வீடமைப்புத் திட்டங்களாக மாற்றப்பட்டுள்ளன. தென்னை உற்பத்தி வீழ்ச்சியடைந்திருப்பதால் பிரச்சினைகள் எழுந்துள்ளன. எதிர்காலத்தில் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு வீடமைப்பு தேசிய கொள்கையொன்றை அறிமுகப்படுத்த வேண்டும்

விவசாயிகளை கடன் சுமையிலிருந்து விடுவித்து அவர்களது பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியையும் சமூக அங்கீகாரத்துடன்கூடிய சிறந்த வாழ்க்கைத் தரத்தையும் ஏற்படுத்திக் கொடுப்போம்.

இதற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதோடு நாட்டின் விவசாயத் துறைக்குத் தேவையான வசதிகள் மற்றும் வளங்களைப் பெற்றுக்கொடுத்து உற்பத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு அரசு என்ற வகையில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

அரசுக்கெதிராக ஊர்வலம் செல்லும் அனைவரும் அந்த நடவடிக்கைகளைக் கைவிட்டு நாட்டை விரும்பும் உண்மையான குடிமக்களாக இந்த தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன்இணைந்து கொள்ளுங்கள்.

தேசிய உணவு உற்பத்திப் புரட்சி இந்த வாரத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சித் திட்டம் அல்ல. இது மூன்று வருட திட்டத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ள விரிவான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்பமாகும். அனைத்து அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களும் இதனை தமது முக்கிய பொறுப்பாகக் கருதி பங்களிக்க வேண்டும்.

2018 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் விவசாயத்தொழில் துறையையும் விவசாயப் பொருளாதாரத்தையும் பலப்படுத்தும் பல்வேறு யோசனைகளை உள்ளடக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அரச தலைவர் தெரிவித்தார். என்றுள்ளது.

(ற-ரி2)

## பொலிஸ் அதிகாரிக்கு விளக்க மறியல்

கொழும்பு, ஒக்.7

திவுலப்பிட்டிய பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபரொருவர் நீர்கொழும்பு சிறைச்சாலையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் திவுலப்பிட்டிய பொலிஸ் குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி நேற்றுக் கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 10 ஆம் திகதிவரை நீதிமன்று விளக்கமறியலில் வைத்தது.

நீர்க்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் சந்தேகநபர் நேற்று முற்படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதே வேளை, சம்பவம் தொடர்பில் திவுலப்பிடிய பொலிஸ் நிலைய மூன்று பொலிஸ் அதிகாரிகள் இட மாற்றம் செய்யப்பட்டனர்.

(ற)

## ஆறு வீடுகளில் திருடர்கள் கைவரிசை

புத்தளம், ஒக்.7

புத்தளம், விருதோடை, நல்லாந்தழுவை பகுதிகளில் உள்ள ஆறு வீடுகளில் நேற்று தங்கச் சங்கிலி மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன என்று புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதிகளில் உள்ள வீடுகளின் ஜன்னல் கதவுகளை கழற்றிக்கொண்டு உள்நுழைந்து இந்தத் திருட்டு நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

விருதோடை பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்து 2 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடியுள்ளனர். நல்லாந்தழுவை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் உள்ளநுழைந்த கொள்ளையர்கள் அங்கு உறங்கிக்கொண்டிருந்த பெண்ணின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுக்கள் தொடர்பாகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி2)



# இந்தியாவை எதிர்க்கிறது மகிந்த அணி

## சமல் ராஜபக்ச நேரடியாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 7

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனா கால்பதித்ததனால் ஏற்பட்ட அச்சத்தாலேயே மத்தள வானூர்தி நிலையத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இந்தியா துடிக்கின்றது. தேசிய பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்கு வழங்கக் கூடாது. இவ்வாறு மகிந்த ராஜபக்சவின் சகோதரரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய வளங்களை பாதுகாக்க வேண்டிய நிலையில் அவற்றை அந்நிய நாடுகளுக்கு கூட்டு அரசு விற்பணை செய்து வருகின்றது. இலங்கையின் தெற்குப் பகுதி என்பது பூகோள ரீதியாக பல்வேறு சிறப்புகளை கொண்டுள்ளது. குறிப்பாக அம்பாந்தோட்டை நகரம் துறைமுகம் மற்றும் வானூர்தி நிலைய சிறப்புகளை கொண்டுள்ளதால் பல நாடுகளும் அந்த பகுதியை குறிவைத்துத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

கபடத்தனமான நோக்கங்களுடன் தற்போதைய கூட்டு அரசுடன் அந்நிய நாடுகள் பல செயற்பட்டு வருகின்றன. மகிந்த ராஜபக்ச ஆட்சி காலத்தில் பன்னாட்டுச் சமூகத்துடன் செயற்படும் போது தேசிய பாதுகாப்பு மற்றும் நாட்டு மக்களின் எதிர்கால நலன்களை கருத்திற் கொண்டே தீர்மானங்களை எடுத்தோம். ஆனால் தற்போதைய அரசு முற்றிலும் நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளிலேயே உள்ளது.

கடந்த இரண்டரை வருட காலமாக அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள வானூர்தி நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அந்நிய நாடுகளுக்கு விற்பனை செய்யும் நோக்கத்துடனேயே செயற்பட்டது. மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்கு ஏன் கொடுக்கவேண்டும் என்ற கேள்விக்கு அரசால் பதில் கூற முடியாதுள்ளது.

இலங்கையால் பயன்பெற முடியாது என்றால் இந்தியா எவ்வாறு மத்தள வானூர்தி நிலையத்தில் பயன்பெற போகின்றது என்ற கேள்விற்கு அரசு பதில் கூற வேண்டும். இயலாமையின் வெளிப்பாடே தற்போதைய அரசின் நடவடிக்கைகளாக அமைந்துள்ளது. தேசிய வளங்கள் என்பது மக்களின் சொத்துக்கள். இவற்றை அந்நிய நாடுகளுக்கு கொடுக்கும் முயற்சிகளை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனா அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. சீனத் திட்டத்தால் இந்தியாவுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவே இந்தியா மத்தள வானூர்தி நிலையத்தை பெற்றுக் கொள்வதற்க முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

இதுவரையில் மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பில் எவ்விதமான வர்த்தமானி அறிவித்தலையும் அரசு முன்வைக்கவில்லை. அரசின் உள் மட்டத்தில் இதற்கான முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மத்தள வானூர்தி நிலையத்தை பெற்றுக் கொள்வதற்கு இந்தியா பெரிய நெருக்கடிகளைக் கொடுத்தும் வருகின்றது.

நாட்டு மக்களுக்கு உண்மை நிலைமைகளை வெளிப்படுத்த வேண்டியது எமது கடமையாகும். பொறுமைக்கும் ஒரு எல்லை உள்ளது. மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்கு கொடுக்கும் திட்டத்தை நிறுத்த வேண்டும் - என்றார்.

(5,31)



# வங்கிகளுக்கு ரவி கருணாநாயக்க வழங்கிய ஆலோசனைகள் எதுவும் எனக்குத் தெரியாது

## விசாரணைக் குழு முன்னிலையில் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 7

குறைந்த விலையில் விலை மனுவைத் தாக்கல் செய்யுமாறு அரச வங்கிகளுக்கு முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆலோசனை வழங்கியமை தொடர்பில் நான் எதுவும் அறிந்திருக்கவில்லை. இவ்வாறு மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் பிணை முறிகள் மோசடி தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான உயர் நீதிமன்ற நீதியரசர் கே.டி.சித்ரசிறியின் தலைமையில், நீதியரசர் பிரசன்ன ஜயவர்தன மற்றும் ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் நாயகம் வேலுப்பிள்ளை கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சிரேஷ்ட சொலிஸிட்டர் ஜெனரல் தலைமையிலான குழுவின் குறுக்கு விசாரணைக் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அர்ஜுன் மகேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க குறைந்த விலையில் மனுவைத் தாக்கல் செய்ய அரச வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கிய இரு சந்தர்ப்பங்களிலும், இருமடங்கு அதிகமான தொகையை விலைமனுவாக தாக்கல் செய்த பேப்பர்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்துக்கு 50சதவீதத்துக்கும் அதிகமான பிணைமுறி விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை விசாரணைக்குழுவின் கவனத்துக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணிகள் கொண்டு வந்தனர். இதனையடுத்து அர்ஜுன் மகேந்திரனைச் சாட்சியமளிக்க முன்னிலையாகுமாறு ஆணைக்குழு அழைப்பு விடுத்திருந்தது.

மூன்று அரச வங்கிகளின் தலைவர்கள் அப்போதிருந்த நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் ஆலோசனைக்கு அமையவே குறைந்த விலைமனுக்கோரலை மேற்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். இது அசாதாரண செயற்பாடாகும். இந்த விடயத்தை மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த நீங்கள் அறிந்திருக்கவில்லையா என்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணி குறுக்குக் கேள்வி எழுப்பினார்.

இதன்போது சாட்சியமளித்த அர்ஜுன் மகேந்திரன் அவ்வாறு நிதி அமைச்சர் ஆலோசனை வழங்கினாரா என்பது தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது. நான் ஊடகங்களில் வெளிவந்த தகவல்களின் அடிப்படையிலேயே அதனை அறிந்து கொண்டேன். இவ்வாறு ஆலோசனை வழங்கப்பட்டு பேப்பர்சுவல் நிறுவனம் அசாதாரண முறையில் இலாபமீட்டியிருந்தால் அது குறித்து தனியானதொரு விசாரணை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

நீங்கள் அவ்வாறு கூறமுடியாது. அந்தக் காலப் பகுதியில் மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தீர்கள். இந்த விடயத்துக்கு முழுமையான பொறுப்பையும் கூறவேண்டும். இலங்கையின் நிதிச்சட்டத்தின் பிரகாரம் மத்திய வங்கிக்கு பொறுப்பாக இருக்கும் அமைச்சர் மத்தியவங்கியின் உள்ளக செயற்பாடுகளில் தலையீடுகளையோ அல்லது ஆலோசனையையோ வழங்க முடியாது என்று சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

இந்த விடயம் குறித்து நான் முழுமையாக அறிந்திருக்கில்லை. அது தொடர்பாக ஆராய்ந்து பதிலளிக்கின்றேன் என்று முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தெரிவித்தார்.

(5,31)

# 3 அரசியல் கைதிகளையும் வடமாகாண சபையினர் இன்று நேரில் சந்திப்பர்

யாழ்ப்பாணம், ஒக். 7

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் மூவர் கடந்த 12 நாள்களாக உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

அவர்களை நேரில் சென்று பார்வையிடுவதற்காக வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் தலைமையில் உறுப்பினர்கள் இன்று அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் செல்கின்றனர்.

அரசியல் கைதிகள் மூவரையும் உணவு ஒறுப்புப் போராட்டத்தை இடைநிறுத்துமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் கோரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

செங்கன் எனப்படும் இராசதுரை திருவரன், மதியழகன் சுலக்சன், கணேசன் தர்சனன் மூவரும் அநுராதபுரம் சிறைச்சாலையில் 8 ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 2013ஆம் ஆண்டு வவுனியா மேல்நீதிமன்றில் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கடந்த 4 ஆண்டுகளாக வவுனியா மேல் நீதிமன்றில் விசாரணைகள் நடைபெற்று வந்தன.

வவுனியா மேல் நீதிமன்றிலிருந்து அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு அவர்களுக்கு எதிரான வழக்கு மாற்றப்பட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே தமிழ் அரசியல் கைதிகள் மூவரும் கடந்த 25ஆம் திகதி தொடக்கம் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (வ-8)

# ஹெரோயின் வர்த்தகருக்கு ஆயுள் தண்டனை

கொழும்பு, ஒக். 7

ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

களனிப் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட நபருக்கே இந்த ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30ஆம் திகதி பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார். இவரிடமிருந்து 10.43 கிலோ கிராம் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருந்தது.

மேல் நீதிமன்றில் சட்டமா அதிபர் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்திருந்தார். இந்தநிலையில் சம்பந்தப்பட்ட நபருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கியது. (5)

# ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் செவ்வாயன்று இலங்கை வருகிறார்

கொழும்பு, ஒக். 7

உண்மையை ஊக்குவித்தல், நீதி, இழப்பீடு, மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் தொடர்பாக ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம் நேற்று அறிவித்துள்ளது.

இதுவரை இடம்பெற்றுள்ள முன்னேற்றங்கள் குறித்து மீளாய்வு செய்வதும், நிலைமாறுகால நீதி மற்றும் மறுசீரமைப்பு செயல்முறைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தடைகள் மற்றும் சிக்கல்களை அடையாளம் காண்பதும், இதனைச் சமாளிப்பதற்கான வாய்ப்புகள் குறித்து இலங்கை அரசு மற்றும் சிவில் சமூகத்துடன் கலந்துரையாடுவதுமே தமது பயணத்தின் நோக்கம் என்று ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயணத்தின் போது, மத்திய மற்றும் மாகாண மட்டத்திலான அரச அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நீதித்துறை உறுப்பினர்கள், ஆயுதப்படைகள், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள், சமயத் தலைவர்கள், அரசியல் கட்சிகள், மனித உரிமைகள் ஆணையம், சிவில் சமூகம், பாதிக்கப்பட்ட குழுக்கள், கல்வியாளர்கள், சமூகப் பிரதிநிதிகளை அவர் சந்திக்கவுள்ளார்.

இவர் தனது பயணம் தொடர்பான அறிக்கையை 2018ஆம் செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிப்பார்.

(5,31)

# முன்பிருந்தவர்களின் தவறினால் நான் பாவத்தைச் சுமக்கின்றேன்

## அமைச்சர் பைசர் முஸ்தபா கவலை

கொழும்பு, ஒக். 7

நாம் தேர்தலை ஒத்தி வைப்பதாகக் குற்றம் சுமத்துபவர்கள் அவர்களது காலத்தில் எல்லை நிர்ணயப் பணிகளை சரியான முறையில் மேற்கொண்டிருந்தால் இந்தப் பாவத்தை நான் சுமக்கவேண்டியிருந்திருக்காது. இவ்வாறு மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

உள்ளூராட்சி அமைச்சில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல்களை பிற்போடுவதாகத் தெரிவித்து என்மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. அந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அடிப்படையற்றவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. குற்றம் சுமத்துபவர்கள் தொடர்ந்து ஒரே விடயத்தையே தெரிவித்து வருகின்றனர். அவர்களின் குறுகிய அரசியல் நோக்கத்துக்காவே இவ்வாறு செயற்படுகின்றனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் ஜனவரி மாதத்திலும் கலைக்கப்பட்டிருக்கும் 3 மாகாண சபைகளுக்குமான தேர்தலை மார்ச் மாதத்திலும் நடத்துவோம். எமது அர்ப்பணிப்பு தொடர்பாக அரசியல்வாதிகள் கதைப்பதில்லை.

தேர்தல் ஒத்திவைக்கப்படுவதாக குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டு சிலர் சிறிலங்கா சுதந்திர கட்சியை பிளவுபடுத்த திட்டமிட்டு வருகின்றனர். மகிந்த ராஜபக்ச தெரிவித்ததுபோல், எமது கட்சி சலூன் கதவைப் போன்றது. யார் வேண்டுமானாலும் வரலாம், செல்லலாம். யாராலும் கட்சியை வீழ்த்த முடியாது. இதனை மகிந்த ராஜபக்சவை சுற்றி இருப்பவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

என்மீது யார் குற்றச்சாட்டு தெரிவித்தாலும் அதற்கு நான் பயப்படப்போவதில்லை. அரச தலைவர் என்மீது நம்பிக்கை வைத்திருக்கும் வரைக்கும் இந்த அமைச்சுப் பதவியிலிருந்து விலகவும் மாட்டேன் - என்றார்.

(5,31)

# பரிசு விழுந்ததாகக் கூறி ரூ. 42,000 பணம் மோசடி

யாழ்ப்பாணம், ஒக். 7
பிரபல அலைபேசி நிறுவனத்தின் வாராந்தச் சீட்டிழுப்பில் பரிசுத் தொகை வீழ்ந்துள்ளதாகக் கூறி ஒரு குடும்பத்திடம் மோசடியாக 42,000 ரூபா பணம் அறவிடப்பட்ட சம்பவம் ஒன்று மிருசுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
இந்தப் பணம் கட்டம் கட்டமாக மீள்நிரப்பு அட்டைமூலம் அறவிடப்பட்டுள்ளது. நான்கு கட்டங்களாக பணம் அனுப்பியும் பரிசுத் தொகை கிடைக்காததால் சம்பந்தப்பட்டவர்கள் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் இதுதொடர்பாக முறைப்பாடு செய்துள்ளனர்.
இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
மிருசுவில் விடத்தற்பளையைச் சேர்ந்த குடும்பத்துக்கு அலைபேசி மூலம் அழைப்பு வந்தது. தொடர்புகொண்டவர் குறிப்பிட்ட தொலைபேசி நிறுவனம் ஒன்றின் பெயரைக் கூறி அதன் வாராந்த சீட்டிழுப்பில் பரிசுத் தொகை கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளர்.
பரிசுத் தொகையை அனுப்புவதற்கு 7 ஆயிரம் ரூபாவும், 50 ரூபாவுக்கு மீள் நிரப்பு அட்டையும் குறித்த இலக்கத்துக்கு அனுப்பி வைக்குமாறு அறிவித்துள்ளார்.
பெருந்தொகை கிடைக்கவுள்ள மகிழ்ச்சியில் 7,050 ரூபாவை நபரின் அலைபேசிக்கு வரவிட்டுள்ளனர். இவ்வாறு கட்டம் கட்டமாக 42000 ரூபாவரை வரவிட்டுள்ளனர். பரிசுத்தொகை கிட்டவில்லை. அவரது அலைபேசி தொடர்பும் நிறுத்தப்பட்டது. சந்தேகம் கொண்ட குடும்பத்தினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.
இவ்வாறான மோசடிகள் தொடர்பில் அலைபேசி நிறுவனங்கள் வாடிக்கையாளர்களை அடிக்கடி அறிவுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ய-9)

## சாவகச்சேரி விருந்தகத்தில் பொலிஸார் அடாவடி

*மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு*

யாழ்ப்பாணம், ஒக்.7
சாவகச்சேரிப் பகுதியில் உள்ள தனியார் விருந்தகத்துக்குள் சிவில் உடையில் புகுந்த பொலிஸார் அங்கு பணியில் இருந்தவரைத் தாக்கினர் என மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.
விருந்தகத்தின் படியில் இருந்த முதியவரை காரணமின்றி பொலிஸார் தாக்கினர் என அதன் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.
முறைப்பாட்டை அடுத்து ஆணைக்குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.
எனினும், முறைப்பாட்டை மீளப் பெறுமாறு விருந்தக உரிமையாளருக்கு பொலிஸார் தற்போது அச்சுறுத்தல் விடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
இதுதொடர்பில் மனித உரிமைகள் ஆணைக குழுவினருடன் தொடர்புகொண்டு கேட்டபோது, சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டதை உறுதி செய்தனர். (ய-101)

## வரணி பகுதியில் உரமானியப் பதிவு

யாழ்ப்பாணம்.ஒக்.7
வரணி வடக்கு விவசாயிகளுக்கான உரமானியப் பதிவுகள் எதிர்வரும் 1ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு விநாயகர் சனசமூக நிலையத்தில் இடம்பெறும் என்று கமக்கார அமைப்பின் செயலாளர் தெரிவித்தார்.
2016, 2017ஆம் ஆண்டுகளில் உரமானியம் பெற்றவர்கள் தேசிய அடையாள அட்டை மற்றும் வங்கிப் புத்தகம் என்பவற்றுடன் வருகைதரவேண்டும்.
புதிதாக உரமானியத்துக்கு விண்ணப்பிப்பவர்கள் தேசிய அடையாள அட்டை,தேசிய அடையாள அட்டை பிரதி 2, பாவனையில் உள்ள அரச வங்கிப் புத்தகம், வங்கிப் புத்த கத்தின் பிரதி 2, சிறிய புகைப்படம் ஆகியவற்றைக் கொண்டுவரவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ய-ரி)

## தரம்5 புலமைப்பரிசில் பரீட்சை: வடமராட்சியில் 268 பேர் சித்தி

யாழ்ப்பாணம், ஒக்.7
ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வடமராட்சிக் கல்வி வலயத்தில் 268 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். சென்ற வருடத்தை விட இந்தவருடம் 55 மாணவர்கள் கூடுதலாக சித்தியடைந்துள்ளார்கள்.
பருத்தித்துறைக் கோட்டத்தைச் சேர்ந்த புற்றளை மகாவித்தியாலய மாணவன் ஒருவர் 190 புள்ளிகளைப் பெற்று மாவட்ட நிலையில் 5 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.
கரவெட்டிக் கோட்டத்தில் 127 மாணவர்களும், பருத்தித்துறைக் கோட்டத்தில் 96 மாணவர்களும், மருதங்கேணிக் கோட்டத்தில் 45 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.
பின்தங்கிய பிரதேசமாகக் கருதப்படும் மருதங்கேணிக் கோட்டத்தில் அதிகமாணவர்கள் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளனர்.
வலயத்தில் 73 பாடசாலைகள் உள்ளன. எனினும், 53 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களே சித்தியடைந்துள்ளனர்.
20 பாடசாலைகளில் எந்த ஒரு மாணவரும் சித்தியடையவில்லை. குறித்த 20 பாடசாலைகள் மீதும் அடுத்த ஆண்டில் கூடுதல் கரிசனை எடுக்கப்படும் என வலயத்தின் பணிப்பாளர் இ.நந்தகுமார் தெரிவித்தார். (ய-173)



## ஈ-சிற்றி கல்லூரியின் விருது வழங்கும் விழா

யாழ்ப்பாணம், ஒக்.7
யாழ்ப்பாணம் ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் விருது வழங்கும் விழா அண்மையில் யாழ்ப்பாணம் சரஸ்வதிமண்டபத்தில் நடைபெற்றது. முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின்துறைத் தலைவர் கலாநிதி சுப்பிரமணியம் சிவகுமார் கலந்துகொண்டார். கல்லூரியின் தலைவர் லயன்ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. (ய)

## தவறான சாரத்தியம் 9000 ரூபா தண்டம்

கிளிநொச்சி.ஒக.7
தவறான பக்கம் ஆபத்தான முறையில் வாகனம் செலுத்திய நான்கு சாரதிகளுக்கு 9000 ரூபா தண்டம் விதித்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்று தீர்ப்பளித்தது.
தவறான முறையில் வாகனம் செலுத்திய இருவரை கிளிநொச்சிப் பொலிஸார் நேற்றையதினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.
சந்தேகநபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இருவருக்கும் மொத்தம் 9,000 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ய-6)

## சிறப்புத் தேவையுடையோரை நெகிழவைத்த பரோபகாரி

யாழ்ப்பாணம், ஒக்.7
கொளுத்தும் வெயிலில் தாகத்துடன் ஊர்வலம் சென்ற சிறப்புத் தேவையுடையவர்களின் தாகம் தீர்ப்பதற்காக பரோபகாரி ஒருவர் தனது சொந்தப்பணம் 4000 ரூபாவை செலவு செய்துள்ளார்.
இச்சம்பவம் அண்மையில் யாழ்ப்பாணம் நகரத்தில் இடம்பெற்றது.
பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் தினத்தை முன்னிட்டுநல்லூர் ஆலய முன்றிலிலிருந்து ஊர்வலம் ஆரம்பமானது.
ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் யாழ். மருத்துவமனை சாலை ஊடாக முற்ற வெளியை சென்றடைந்தனர்.
அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வருகைதந்த பல நூற்றுக்கணக்கானவர்கள் இதில் கலந்துகொண்டனர்.
கொளுத்தும் வெயிலில் ஊர்வலம் இடம்பெற்றது. ஊர்வலத்தில் கலந்து கொண்ட சிறப்புத் தேவையுடையவர்கள் தாகத்தில் துடித்தனர். தண்ணீர் வழங்குமாறு சைகை மூலம் காட்டினர்.
அவ்விடத்தில் நின்ற மேற்படி நபர் நிலையைப் புரிந்து கொண்டார்.
அவ்விடத்திலிருந்த வர்த்தக நிலையங்களிலிருந்து சுமார் 4ஆயிரம் ரூபாவுக்கு தண்ணீர்ப் போத்தல்களை வாங்கிக் கொடுத்து அவர்களின் தாகத்தைத் தீர்த்து வைத்தார்.
இவரது செயல் அங்கு நின்றவர்களை நெகிழ வைத்தது. (ய)

## வீட்டுக்குள் புகுந்து கும்பல் அட்டகாசம்

*யாழ். பிறவுண் வீதியில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஒக். 7
யாழ்ப்பாணம் பிறவுண் வீதியிலுள்ள வீட்டுக்குள் புகுந்த நால்வர் கொண்ட கும்பல் வீட்டின் உடைமைகளை அடித்து நொறுக்கிவிட்டுத் தப்பிச் சென்றது என்று கோப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்றுப் பி.ப. 3 மணியளவில் இடம்பெற்றது.
2 மோட்டார் சைக்கிளில் வந்த 4 பேர் கொண்ட கும்பல் வீட்டுக்குள் புகுந்து அடாவடியில் ஈடுபட்டது. அவர்கள் முகத்தைத் துணியால் மறைத்திருந்ததால் அடையாளம் காணமுடியவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (வ-101)

## புத்தூரில் வயல் காணிகள் பதிவு

அச்சுவேலி,ஒக்.7
புத்தூர் பிரதேசத்தில் வயல் காணிகள் பதிவுசெய்யப்படுகின்றன.
நெற்பயிர் செய்வோரின் பெயர், விவரம், காணி சொந்தமா? குத்தகையா என்பதுடன் காலபோகத்தையடுத்து மேற்கொள்ளப்படும் பயிர் வகைகளின் விவரங்கள் பதியப்படுகின்றன.
உரமானியக் கொடுப்பனவுகளுக்கு வசதியாகப் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
காணி உரிமையாளர்கள் உறுதியையும், குத்தகைதாரர்கள் குத்தகைச் சீட்டையையும் சமர்ப்பித்து கமநலசேவை நிலை யத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
பதிவுகளின் பின்னர் கமநல திணைக்கள பெரும்பாக அலுவலர் குழு நேரில் சென்று காணிகளைப் பார்வையிட்டு உறுதிப்படுத்தும் என புத்தூர் கமநலசேவை நிலைய பொறுப்பதிகாரி இ.சுகந்தராஜ் தெரிவித்தார். (ய-11)

## சாலை சமிக்ஞைகளால் விபத்து பாதசாரிக் கடவைகளை மாற்றுக

*யாழ்ப்பாண மக்கள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஒக்.7
யாழ்ப்பாணத்தில் சாலை சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள பகுதிகளில் பாதசாரிகடவைகளை மாற்றியமைக்காத காரணத்தால் விபத்துகள் ஏற்படுகின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:
யாழ்ப்பாணத்தில் உள்ள முதன்மைச் சாலைகளில் வீதிச் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால் அந்தப் பணி முழுமையடையவில்லை. நாளாந்தம் சமிக்ஞைகள் உள்ள சாலைகளில் விபத்துகள் ஏற்படுகின்றன.
சிவப்பு விளக்கு அணைந்து வாகனம் புறப்படுவதற்கான சமிக்ஞை விழும்போது ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள பாதசாரிக் கடவைகளில் மக்கள் கடக்கின்றனர். வேகமாகப் புறப்படும் வாகனங்கள் அவர்களை மோதித்தள்ளுகின்றன. இதனால் வாகனச்சாரதிகளும் சிக்கலை எதிர்கொள்கின்றனர்.
எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து பாதசாரிக் கடவைகளை மாற்றி அமைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.
வீதிச்சமிக்ஞை பொருத்தப்பட்டுள்ள வேம்படிச் சந்தியில் உள்ள பாதசாரிக்கடவையைத் திருத்தி அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய கடவைகளும் விரைவில் மாற்றியமைக்கப்படும். இதனால் விபத்துகளைத் தவிர்க்க முடியும் என சாலை அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவித்தனர். (ய-8)

## இந்துமகளிர் கல்லூரி சாலையில் தடையை மீறி கனரக வாகனங்கள்

### பொலிஸார் பாராமுகம்

யாழ்ப்பாணம், ஒக்.7
யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி சாலையில் பாடசாலை நேரங்களில் கனகரக வாகனங்கள் பயணிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.
எனினும் தடையைமீறி வாகனங்கள் பயணிக்கின்றன. பொலிஸாரும் இதனைக் கண்டும் காணாமல் இருக்கின்றனர் என வடக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவினால் மாவட்டச் செயலகத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இந்துமகளிர் கல்லூரி சாலையானது கந்தர்மடம் சந்தியையும், தட்டாதெருச் சந்தியையும் இணைக்கின்றது. இந்தச் சாலையில் காலை 6.30 மணிமுதல் 8மணி வரையும் மதியம் 1.30மணிமுல் 2.30மணிவரையும் கனரக வாகனங்கள் பயணிக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.
அறிவித்தல் பலகைகளும் நடப்பட்டுள்ளன. ஆனால் பொலிஸார் கடமையில் உள்ளநிலையில் கனரக வாகனங்கள் பயணிக்கின்றன. பொலிஸார் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்வதில்லை. இந்தச் சாலையில் பாடசாலை நேரத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயணிக்கின்றனர். கனரக வாகனங்கள் செல்வதால் பாரியநெரிசலும் அச்சமும் ஏற்படுகின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ய-101)

## சைவப்புலவர் சங்க செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 7
அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் ,இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை கூட்டத் துக்குத் தலைமை தாங்குவார். கூட்டத்தில் 2017ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழா நடத்துதல், சைவநாதம் மலர்வெளியீடு தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

எனவே, அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார். (ய)

# டெங்குக் கட்டுப்பாட்டு அலுவலர்கள் நியமனத்துக்கு எம்.பிக்கள் துணை

### வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சாடல்

யாழ்ப்பாணம், ஒக் .7
"வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் நீண்டநாள்களாகப் போராடி வரும்நிலையில் அவர்களை புறந்தள்ளிவிட்டு எமது தமிழ் நாடாளுமன்றஉறுப்பினர்கள்தமக்குத் தெரிந்தவர்களை கொழும்பு சுகாதார அமைச்சின் ஊடாக ஒப்பந்த அடிப்படையில் டெங்குகட்டுப்பாட்டுஅலுவலர்களாக நியமித்துள்ளளனர்"

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் குணசீலன்நேற்றுகுற்றஞ்சாட்டினார். வடக்கு மாகாண சபையின் 107ஆவது அமர்வு அவைத்தலைவர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

"வடக்கு மாகாணத்தில் டெங்குகட்டுப்பாட்டுஅலுவலர்களாகஒப்பந்தஅடிப்படையில் ஆளணியினர்நியமிக்கப்பட்டதன் ஊடாக மாகாண சபையின் அதிகாரங்களை கொழும்பு அரசுக்கு விட்டுக் கொடுத்துவிட்டீர்களா?" என வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மாகாண சுகாதார அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வடக்கு மாகாணத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு அலுவலர்களாக ஒப்பந்த அடிப்படையில் 50 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியமனங்கள் அனைத்தும் கொழும்பு சுகாதார அமைச்சின் ஊடாகவே வழங்கப்பட்டன. இந்த நியமனம் தொடர்பில் நான் ஆராய்ந்தபோது, எமது மாகாணத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் தமக்கு வேண்டியவர்களை நியமித்துள்ளதாக அறியமுடிகின்றது. எமது பிரதிநிதிகளே இவ்வாறு நடப்பது கவலை அளிக்கின்றது. நாம் இன்றும் போராடிக்கொண்டிருக்கும் சுகாதார தொண்டர்களுக்கே குரல் கொடுத்து வருகின்றோம்" என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (வ-8)

# புதிய கணக்காய்வுச் சட்டவரைவு நாடாளுமன்றுக்கு விரைவில் வரும்

### சு.க. கூட்டத்தில் மைத்திரி தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 7
அடுத்த மாதம் வரவு செலவுத் திட்ட விவாதம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக, புதிய கணக்காய்வு சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

தேசிய கணக்காய்வு சட்ட வரைவை விரைவில் நாடாளு மன்றத்தில் முன்வைக்கவும் இந்தச் சந்திப்பில் அரச தலைவர் தீர்மானித்துள்ளார்.

மோசடிகளைத் தவிர்ப்பதற்காக புதிய தேசிய கணக்காய்வு சட்ட வரைவைக் கொண்டு வருவதாக அரசு தேர்தல் காலத்தில் வாக்குறுதி வழங்கியிருந்த போதிலும் இரண்டு ஆண்டுகளாகியும் கணக்காய்வு சட்டவரைவு நாடாளுமன்றத்துக்குக்கொண்டு வரப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றமை இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

கணக்காய்வு சட்டவரைவை விரைவில் கொண்டுவர வேண்டும் என்று அரச தலைவர் இதன்போது தெரிவித்துள்ளார். இந்த ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முன்னர் கணக்காய்வு சட்டவரைவு நாடா ளுமன்றத்தில் கொண்டுவரப் படும் எனவும் அவர் தெரிவித்துள் ளார்.

அடுத்தவாரம் அமைச்சரவையில் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் நாடாளுமன்றுக்கு இந்தச் சட்ட வரைவு கொண்டுவரப்படும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (5.31)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 60 | 60 | 80 | 60 |
| கத்தரி | 170 | 140 | 160 | 160 | 140 |
| மரவள்ளி | 80 | 80 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 100 | 120 | 140 | 100 | 140 |
| பாகல் | 340 | 200 | 220 | 300 | 240 |
| க.கிழங்கு | 100 | 80 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 130 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 250 | 280 | 150 | 300 | 260 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 40 |
| தக்காளி | 160 | 160 | 200 | 200 | 180 |
| வாழைக்காய் | 80 | 100 | 100 | 80 | 70 |
| கீரை | 40 | 40 | 35 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 35 | 30 | 30 |
| ப.மிளகாய் | 380 | 500 | 300 | 400 | 340 |
| புடோல் | 80 | 100 | 100 | 120 | 100 |
| கோவா | 140 | 120 | 120 | 120 | 140 |
| வெண்டி | 80 | 100 | 160 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 170 | 180 | 200 |
| லீக்ஸ் | 180 | 200 | 120 | 160 | 200 |
| தேங்காய் | 80 | 90 | 80 | 90 | 70 |
| உ.கிழங்கு | 100 | 120 | 120 | 110 | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 250 | 250 | 300 |
| வல்லாரை | 20 | 20 | 25 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 200 | 250 | 200 | 260 |
| கரட் | 120 | 160 | 80 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 120 | 200 | 200 | 140 | 160 |

## புலமைப் பரிசில் பெறுபேறுகள்

**ஆனைப்பந்தி**
**மெ.மி.வித்தியாலயம்**
ச.லாவனியன் 188 (மாவட்ட நிலை 7),ஞா.சங்கவி 185,ஹி.அபிஷா சாம்னி 177,ந.தேனுஷாந் 172,ப.கலைச்சுரபி 172,சி.லின்சியா 172,து.ரிஷிகேசன் 169,ஜெ.ஜெயதுவாரகா 164,சி.டில்சாந் 161,த.யதுஷா 161,சு.மதுஷியா 160.

**கோப்பாய் நாவலர்**
**தமிழ் வித்தியாலயம்**
அ.பாமகன்183, எஸ்.அபிலாஸ் 180, க.தேனுப்பிரியன் 177
இ.சாருஜா 176, வி.வரணியா 174, ய.யசிந்தன் 173, அ.மேல்வன் 173, சு.ஹஸ்ரவர்த்த னன்172, ம.அபிலாசினி173, ந.நித்திலன் 169, கோ.நாவிலியன் 167, க.அனுரேகா 166, பி.பிரியந்தன் 165, சு.டினோஜா164, அ.சரண்யா 163, சு.தருண்கா163, ஜெ.ஆர்த்திகா 162, பு.வித்தியா பாரதி 160, த.மகீசன்157

## யாழ். தபாலகத்தில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஒக்.7
பன்னாட்டு தபால்தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் முதன்மை தபாலகத்தில் அண்மையில் குருதிக்கொடை நிகழ்வு இடம்பெற்றது. வடக்கு மாகாண பிரதி தபால் அதிபர் கே.கனகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஐம்பதுக்கும் மேற்பட்ட தபால் பணியாளர்கள் குருதி வழங்கினர்.

இங்கு சேகரிக்கப்பட்ட குருதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இரத்தவங்கிப் பிரிவுக்கு வழங்கப்பட்டது. மாவட்ட தபால் அத்தியட்சகர் கே.புஷ்பநாதன் உட்பட்ட தபாலக அதிகாரிகள்,பணியாளர்கள் கலந்து கொண்டனர். (ய-17)

### யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்பாக

# 11 கோரிக்கைகளை முன்வைத்து நாளைய போராட்டத்துக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 7
11 கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்பாக நாளை முற்பகல் 10 மணியளவில் போராட்டம் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசிய பண்பாட்டு பேரவை போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. இது தொடர்பில் பேரவை அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தொற்று நோய்கள் மூலமான இறப்புகளைத் தடுப்பதற்கு அதியுச்ச தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பொதுக் கட்டடத்தில் உள்ள பிரசவ விடுதி மற்றும் குழந்தைகள் விடுதி என்பன தனியான கட்டடத் தொகுதிக்கு மாற்றப்படவேண்டும். சிறப்புக் கவனிப்புத் தேவைப்படும் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்துக்கு (பேபி றூம்) அருகே உள்ள சுவாச நோய் சிகிச்சை நிலையம் உடனடியாக வேறு இடத்துக்கு மாற்றப்பட வேண்டும். அதிதீவிர சிகிச்சை மற்றும் தொற்றா நோய்களுக்குத் தனியான அலகு ஏற்படுத்த வேண்டும். தீவிபத்து மற்றும் தீக்காயம் பட்ட நோயாளர்களுக்குத் தனியான நோய்த் தொற்று ஏற்படாத வகையில் முழுமையான பாதுகாப்பான தனியான ஒரு அலகு ஏற்படுத்தப்படவேண்டும். தொற்றும் மற்றும் தொற்றா நோய்களுக்கான சிகிச்சை விடுதிகளைத் தனித்தனிக் கட்டடங்களில் அமைக்க வேண்டும். நோயாளர்களை மருத்துவமனை ஊழியர்கள் அன்போடும், கனிவோடும் நடத்த வேண்டும். நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்கள் தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் வெளிப்படைத் தன்மையுடன் நடைபெற வேண்டும். மருத்துவமனையில் நிகழும் இறப்புகள் தொடர்பாக உரிய விசாரணை மேற்கொண்டு அதற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படவேண்டும். நோயாளிகளைத் தனியார் மருத்துவமனைகளின் பக்கம் இழுக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் மருத்துவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். நீதித்துறை விசாரணைகள் காலதாமதம் இன்றி மேற்கொள்ளப்பட்டுக் குற்றம் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். அதன்மூலமாக சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்க வேண்டும். இந்தப் போராட்டத்துக்கு வடக்கு மாகாணத்தில்உள்ள சகல அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், மாதர் சங்கங்கள், வர்த்தக அமைப்புகள், பல்கலைக் கழக மாணவர் அமைப்புகள் அனைவரையும் கலந்து முழுமையான ஆதரவைத் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். அரச மருத்துவமனைகள் தரமிழந்து போவதென்றால் அவற்றை நம்பியிருக்கும் ஏழைகளின் நிலை என்ன? என்றுள்ளது. (4)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 800 | 900 |
| நண்டு | 400 | 400 | 500 | 400 |
| கணவாய் | 800 | 600 | 800 | 1000 |
| பாரை | 500 | 500 | 600 | – |
| சுறா | 600 | 700 | 400 | 800 |
| சீலா | 500 | 400 | 450 | 600 |
| விளை | 400 | 400 | 450 | 400 |
| முரல் | 300 | 350 | 400 | – |
| கும்பிளா | 300 | 300 | 400 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 300 | 300 | 450 | 300 |
| திரளி | 200 | 200 | 300 | 200 |
| நகரை | 200 | 150 | 400 | – |
| சூடை | 100 | 100 | 200 | 150 |
| ஓட்டி | 150 | 200 | 300 | 300 |
| திருக்கை | 300 | 200 | 400 | – |
| மதனம் | 200 | 200 | 250 | – |
| கொய் | 100 | 70 | 50 | 80 |
| பாலை | 100 | 300 | 500 | 400 |
| வாளை | 100 | 200 | 400 | 300 |



## முதியோருக்கான மருத்துவ முகாம்

சாவகச்சேரி, ஒக்.7
பன்னாட்டு முதியோர் வாரத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கிச் சாவகச்சேரிக் கிளையினரால் மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டது. ஓய்வூதிய தினமான நேற்று ஓய்வூதியம் பெற வந்த முதியவர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.
மருத்துவர் எஸ்.எஸ்.அருளானந்தம் நீரிழிவு மற்றும் குருதி அழுத்தம் தொடர்பாக மருத்துவ சோதனைகளை மேற்கொண்டார். (ற-9)

## மாம்பழக் கிராமத்துக்காக மாங்கன்றுகள் கையளிப்பு

சாவகச்சேரி, ஒக்.7
தேசிய ஒருமைப்பாட்டுக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தால் தென்மராட்சியில் மாங்கன்றுகளை வளர்க்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அவற்றுக்கான மாங்கன்றுகள் நேற்றுக் கையளிக்கப்பட்டன.



அரை ஏக்கருக்கு மேல் காணிகள் உடைய 31 பேருக்கு அவை வழங்கப்பட்டன.
சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலகக் கணக்காளர் திருமதி ம.மனோகரன் பயனாளிகளுக்கு அவற்றை வழங்கினார். (ற-ரி2,9)

## வாகன வாடகை நிறுவனத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக்.7
தனியார் வாடகை வாகன நிறுவனம் ஒன்றுக்கு எதிராக முச்சக்கரவண்டி சாரதிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இவர்கள் நுகேகொடையில் அமைந்துள்ள அந்த நிறுவனத்தின் முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
அந்த நிறுவனமானது தற்போது வாடகை சேவையில் ஈடுபடுத்தி வரும் முச்சக்கர வண்டிகளுக்கு பதிலாக சிறிய ரக டாடா மற்றும் நெனோ வாகனங்களை சேவையில் ஈடுபடுத்தவுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

# ஊடகங்களுக்கு சுதந்திரம் வழங்கியுள்ளது கூட்டு அரசு

## ஊடகத்துறை பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.7
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஊடக நிறுவனங்களுக்கு எதிராகவோ அல்லது ஊடகவியலாளருக்கு எதிராகவோ அழுத்தங்களை மேற்கொள்வதில்லை. முழுமையான ஊடக சுதந்திரத்தை கூட்டரசு வழங்கியுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் நிதி மற்றும் ஊடகத்துறை பிரதி அமைச்சர் லசந்த அழகியவண்ண.
இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கூட்டரசு ஊடக நிறுவனங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் இன்று முழுமையான சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இந்த சுதந்திரத்தை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்வது ஊடக நிறுவனங்களினதும் ஊடகவியலாளர்களதும் பொறுப்பாகும்.
ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளே ஒரு நாட்டினது நிலைப்பாடுகளை தெளிவாக முன்னெடுத்துச் செல்லும். இதுவே மொத்த அரசின் கொள்கையாகும். அதே போன்று அரசின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளாத சிலரும் நாட்டில் இருக்கின்றனர். என்றார். (ற-ரி4)

## யானை தாக்கி ஒருவர் சாவு

அம்பாறை, ஒக்.7
அம்பாறை , சம்மாந்துறை, பெரியசாளம்பைக்கேணி வட்டையில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது. வயல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே யானை தாக்கியது என்று கூறப்படுகின்றது.
இது தொடர்பில் சம்மாந்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

## வவு. தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் கோரி கவனவீர்ப்பு

வவுனியா, ஒக்.7
நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து வவுனியாவில் நேற்று தொண்டர் ஆசிரியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர். வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்களே கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.
மு.ப. 8.30 மணியளவில் வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு முன்பாக 20க்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.
"வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் 676க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் 10 ஆண்டுகளுக்கும் மேலாகக் கடமையாற்றியுள்ளனர். 182 தொண்டர் ஆசிரியர்களுக்கு அண்மையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. அவர்களுக்கு உள்ள தகுதிகள் எமக்கும் உள்ளன. எமக்கு ஏன் நியமனம் வழங்கவில்லை. விரைவில் எமக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று ஆர்ப்பாட்டம் நடத்திய தொண்டர் ஆசிரியர்கள் தெரிவித்தனர். (ற-402)

## மகிந்தவிடம் கத்தியுடன் சென்றவருக்கு மீள மறியல்

கொழும்பு, ஒக்.7
முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவின் வீட்டுக்குள் கத்தியுடன் நுழைய முயற்சித்தவரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
சந்தேகநபர் நேற்று கொழும்பு மேலதிக நீதவான் மன்ற நீதவான் சாமினி விஜேபண்டாரவிடம் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். சந்தேகநபரை அங்கொடை மனநோய் வைத்தியசாலையில் சேர்ப்பித்து பரிசோதனைக்குட்படுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டார்.
கடந்த மாதம் 21ஆம் திகதி அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் இல்லத்துக்கு சந்தேக நபர் சென்றிருந்தார். மகிந்தவை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிகளிடம் அவர் கோரியுள்ளார். அவர்கள் அனுமதியளிக்க மறுத்ததால் ஆத்திரமடைந்த சந்தேக நபர் தன்னிடம் இருந்த கத்தியால் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளார். அதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார். (ற-ரி4)



மட்டக்களப்பு, வாகரையில் உரிய அனுமதி இன்றிக் கொண்டு செல்லப்பட்ட வேப்ப மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவை ஓட்டமாவடிக்குக் கொண்டு செல்லப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். வேப்பமரக் குற்றிகளை ஏற்றிச் சென்ற வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி4)

## கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் வயோதிபர் கைது

திருகோணமலை, ஒக்.7
கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் திருகோணமலை, கோணேசபுரியில் வயோதிபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



திருகோணமலை பிராந்திய போதைத் தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் வீடொன்றில் சோதனை நடத்தியபோது 63 வயதுடைய வயோதிபரிடம் இருந்து 60 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
கைது செய்யப்பட்டவரை திருகோணமலை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நிலாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-45)

## பாணந்துறை மருத்துவமனையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

### அமைச்சர் ராஜித தகவல்

கொழும்பு, ஒக்.7
பாணந்துறை ஆதார வைத்தியசாலை நாட்டின் இரண்டாவது தேசிய மருத்துவமனையாக அபிவிருத்தி செய்யப்படும் என சுகாதார போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
மருத்துவமனையின் அபிவிருத்திக்கென ஆயிரத்து 853 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து அத்தியாவசியத் துறைகளை உள்ளடக்கும் வகையில் நோயாளர்களுக்கான சிகிச்சை பாணந்துறை மருத்துவமனையில் வழங்கப்படவுள்ளது. களுத்துறை மாவட்டத்திலுள்ள ஏனைய மருத்துவமனைகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அவற்றில் காணப்படும் வளப் பற்றாக்குறைகளும் நிவர்த்தி செய்யப்படும் - என்றார். (ற-ரி4)

## சாரதிகள், நடத்துநர்கள் கைகலப்பு: 4 பேர் கைது

கொழும்பு, ஒக்.7
சாரதிகள், நடத்துநர்களிடையே ஏற்பட்ட கைகலப்பை அடுத்து நால்வர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
நேற்று தலவாக்கலை, டயகமவில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ஹற்றன் டிப்போவுக்குச் சொந்தமான பேருந்தின் சாரதி நடத்துநருக்கும், டயகமவில் இருந்து நுவரேலியா நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தின் சாரதி, நடந்துநருக்கும் இடையிலேயே கைகலப்பு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
கைகலப்பில் ஈடுபட்டுள்ளவர்களைக் கைது செய்த அக்கரைப்பத்தனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி2)

# அரச ஊழியர்களின் போக்குவரத்துக்காக 2013இல் ரூபா 11 மில்லியன் செலவு

## ஆராய்கிறது நாடாளுமன்றக் குழு

யாழ்ப்பாணம், ஒக்.7

வடக்கு மாகாணத்தில் அரச பணியாளர்களை ஏற்றி இறக்கும் சேவைக்காக 2013ஆம் ஆண்டில் மட்டும் 11 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் செலவுகள் தொடர்பாக நாடாளுமன்றக் கணக்கியல்குழு கவனம் செலுத்தியுள்ளது.

இதுபற்றித் தெரிவிக்கப்பட்டதாவது:

2009ஆம் ஆண்டு போக்குவரத்தில் உள்ள நெருக்கடியைக் கருத்திற்கொண்டு வடக்கு மாகாண அரசு ஊழியர்களின் போக்குவரத்துச் சேவைக்காக தனியான போக்குவரத்துச் சேவை உருவாக்கப்பட்டது.

இதற்காக 7 பேருந்துகள் சேவையில் இணைக்கப்பட்டன. இந்தச் சேவைக்காக ஒரே ஆண்டில் 11 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

ஊழியர் சம்பளம், எரிபொருள், வாகனத் திருத்தம் போன்றவற்றுக்காக இந்தத் தொகை செலவு செய்யப்பட்டுள்ளததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும் இதன்மூலம் 117 பணியாளர்களே நன்மை அடைந்துள்ளனர் என கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போது அது நாடாளுமன்றக் கணக்கியல் குழுவின் நடவடிக்கைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சர்ச்சை காரணமாக சேவை இடைநிறுத்தப்பட்டு, தனியார்பேருந்துகள் ஊடாக சேவைகளை வழங்குவது எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும், அதுதொடர்பிலும் தற்போது சர்ச்சை எழுப்பப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ய-101)

# இளநீர் பறித்த சிறுவர்களுக்கு மின்சார வயர்களால் தாக்குதல்

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

கிளிநொச்சி, ஒக்.7

கிளிநொச்சியில் சிறுவர் இல்லம் ஒன்றில் பராமரிக்கப்பட்டுவரும் சிறுவர்கள் மின்சார வயர்களால் தாக்கப்பட்டுள்ளனர் என மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இல்லத்தின் மேற்பார்வையாளர்களே இவ்வாறு சிறுவர்களைத் தாக்கினர் என அந்த முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் தெரியவருவதாவது:

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் வசிக்கும் வசதிகுறைந்த பெற்றோர் தமது 16 வயது மகனை சிறுவர் இல்லத்தில் இணைத்துள்ளனர். அவர் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கல்விகற்று வருகிறார்.

இந்தநிலையில் கடந்த 21ஆம் திகதி இல்ல வளாகத்தில் உள்ள தென்னை மரத்தில் இளநீர் பறிப்பதற்காக 5 சிறுவர்கள் மரத்தில் ஏறியுள்ளனர். இதனைக்கண்ட இல்ல மேற்பார்வையாளர் மின் இணைப்பு வயர்களால் அவர்களைத் தாக்கியுள்ளார். இதனால் சிறுவர்களின் உடலில் அடிகாயங்கள் ஏற்பட்டுள்ளன. காயம் வெளியில் தெரிந்துவிடும் என்பதற்காக சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

காயம் மறைந்ததும் பெற்றோரை அழைத்து சிறுவர்களை வீட்டுக்கு அழைத்துச் செல்லுமாறு கூறப்பட்டுள்ளது என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டது.

இது தொடர்பில் இல்லத்தின் தலைவருடன் தொடர்புகொண்டு கேட்டபோது "குறித்த சிறுவர்களால் பல பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டமையால் இவர்களை தொடர்ந்தும் இல்லத்தில் வைத்திருக்க முடியாதென நாம் ஏற்கனவே 3 தடவைகள் திணைக்களத்துக்கு எழுத்தில் அறிவித்துள்ளோம்" - என்றார்.

(ய-101)

# வடக்கு தேசிய உற்பத்தி நிகழ்வில் விவசாயத்துக்கு முன்னுரிமை

## அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன்

யாழ்ப்பாணம், ஒக்.7

வடக்கு மாகாணத்தின் தேசிய உற்பத்திவார நிகழ்வில் கிராம மட்டத்தில் விவசாயத்தை உயர்த்தும் செயற்றிட்டங்கள் அதிகளவில் முன்வைக்கப்படும் என்று மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தின் தேசிய உற்பத்தி வார நிகழ்வு ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமம் தெரிவு செய்யப்பட்டு மரம் நடுதல், சிறப்பான உற்பத்திகளை காட்சிப்படுத்தல் போன்ற செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அனைத்து மாகாணங்களிலும் விவசாயம் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என்ற நோக்கில் அரச தலைவர் முனைப்பாக உள்ளார். எனவே இதில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்ளவுள்ளார். இந்த நிகழ்வில் தொடர்ச்சியாக பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு மானியமுறையில் விவசாய உபகரணங்களை வழங்குவதற்கு 25 இலட்சம் ரூபா நிதியை அரச தலைவர் செயலகம் ஒதுக்கியுள்ளது.

இதன்மூலம் சிறிய உபகரணத் தொகுதிகளைக் கொள்வனவு செய்து பயனாளிகளுக்கு வழங்கவுள்ளோம். அத்துடன் நவீன இயந்திரங்களின் பாவனை தொடர்பான விளக்கக் காட்சிகளையும் வழங்கவுள்ளோம் - என்றார்.

(ய-ரி)

# வெளிக்கள உத்தியோகத்தர்களின் மோ.சைக்கிள்களின் உரிமையை மாற்றுவதற்கு நீண்டகாலம் தேவை

யாழ்ப்பாணம்.ஒக்.7

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை உரிமை மாற்றம் செய்வதற்கு நீண்டகாலம் தேவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மாகாண சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்ததாவது:

வடக்குமாகாண வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு செயற்றிட்ட நிதிகள் மூலம் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் போது அவர்களுக்கே சொந்தமாக வழங்குவது தொடர்பாக 53ஆவது அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பிட்ட நிதியை மாத்திரம் பெற்றுக் கொண்டு அவற்றை அவர்களுக்கே வழங்கும் திட்டம் முன்வைக்கப்பட்டது.

அவ்வாறு மோட்டார் சைக்கிள்களை வழங்கும் போது உரிமை மாற்றம் செய்தல் அவசியமாகும். அதற்கு, அவர்களின் விவரங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் ஊடாகப் பெற்று அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் அந்தத் தரவுகளைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் உள்ளன. பிராந்திய மருத்துவப் பணிமனைகளில் சரியான பதிவுகள் இல்லை.

இருந்தாலும் ,அது ஒருங்கிணைக்கப்பட்ட பட்டியல்களாகத் தயாரிக்கப்படவில்லை.

எனவே, இந்தச் செயற்றிட்டத்தில், எத்தனை மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டன, பயன்பாட்டில் உள்ள சைக்கிள்களின் எண்ணிக்கை என்பன போன்ற விடயங்களை சேகரித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இதற்கு நீண்டகாலம் தேவையாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ய-ரி)

# பி.எச்.ஐக்களின் இடமாற்றம் இன்று முக்கிய பேச்சு

யாழ்ப்பாணம். ஒக்.7

சுகாதாரப் பரிசோதகர்களின் இடமாற்றம் தொடர்பாக ஆராய்வதற்கு இன்று தொழிற்சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வடக்கு பொதுச் சுகாதார பரிசோதகர் ஊழியர் சங்கம் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாநகரசபையின் 5 பொதுச் சுகாதாரப் பரிசோதர்களுக்கான இடமாற்றம் முறையற்றது. இதற்கான சரியான முடிவைப் பெற்றுத் தருமாறு வலியுறுத்தி 3 வாரங்களுக்கு மேலாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டோம். பொது மக்களின் சேவைகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக நாம் போராட்டத்தைக் கைவிட்டு பணிக்குத் திரும்பியுள்ளோம்.

இடமாற்றத்துக்கு எமது ஊழியர்கள் மறுப்புக் கூறவில்லை. உள்ளூராட்சி சபையின் கீழ் உள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்களை உள்ளூராட்சி சபைகளில் உள்ள நிலையங்களுக்கு மாற்றம்செய்வதே முறை. இதற்காகவே நாம் போராடினோம்.

இதுதொடர்பான இறுதிமுடிவுகளை எடுப்பதற்காக எமது கொழும்பு தொழிற்சங்கப் பிரதிநிதிகள் வருகின்றனர். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் உட்பட துணை மருத்துவ சேவை, இணைந்தமருத்துவசேவை உள்ளிட்ட 16 சங்கங்களின் பிரதிநிதிகளுக்கிடையிலான சந்திப்பு இடம் பெறவுள்ளது. இன்று இதற்கான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ய-ரி)

# நீதிமன்றம் முன் ஒலி எழுப்பிய சாரதிக்கு ரூ.3,000 தண்டம்

கிளிநொச்சி, ஒக 7

நீதிமன்றத்திற்கு முன்பாக ஒலி எழுப்பிய சாரதிக்கு 3ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி நீதிவான் நீதிமன்று. ஒலி எழுப்பத் தடை எனக் குறிப்பிடப்பட்டிருந்த பகுதிக்குள் வாகனத்தில் சென்றவர் ஒலி எழுப்பினார்.

இதனையடுத்து சாரதி நேற்றையதினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவருக்கு 3ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நீதிவான் உத்தரவிட்டார்.

(ய-6)

# யாழ். பல்கலையில் திசைமுகப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஒக்.7

யாழ்ப்பாண பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் கலைமாணி பகுதி 2இன் 2014ஆம் ஆண்டு பழைய பாடத்திட்டத்துக்குரிய திசைமுகப்படுத்தல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும்.

நவம்பர் 4ஆம் திகதிவரை திசைமுகப்படுத்தல் நிகழ்வு நடைபெறும் என்று பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் தெரிவித்தார்.

பரீட்சைகள் நவம்பர் மாத நடுப்பகுதியில் நடைபெறும். திசைமுகப்படுத்தல் தொடர்பான நேர அட்டவணையை திறந்த மற்றும் தொலைக் கல்விநிலையத்திலும், www.codl.jfn.ac.lk என்ற இணையத்தள முகவரியிலும் பெற்றுக்கொள்ளளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

(ய-ரி)

# வடக்கு சிறுவர் இல்லங்களுக்கு சான்றிதழ் வழங்குவதில் சிக்கல்

யாழ்ப்பாணம், ஒக்.7

வடக்கு மாகாண சிறுவர் இல்லங்களுக்குப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்குவதில் சிக்கல்கள் உள்ளன என மாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் சிறுவர் இல்லங்கள் கொழும்பு அரசின்கீழ் பதியப்பட்டன. நடப்பு ஆண்டில் இருந்து மாகாண சபையின் நியதிச் சட்டத்தின் கீழ் பதியப்படவேண்டும்.

அதன் அடிப்படையில் கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி சிறுவர் இல்லங்களைப் பதிவு செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

அதன்பின்னர் ஆறுமாத காலத்துக்குள் உரிய ஆவணங்கள் அனைத்தையும் சமர்ப்பித்து வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து சிறுவர் இல்லங்களும் பதியப் படவேண்டும் என நாம் உரிய தரப்பினருக்குத் தெரிவித்திருந்தோம். ஆனால் பதிவுச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு சிறுவர் இல்லங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற ஆவணங்கள் முழுமையாக இல்லை. இதுவரை காலமும் ஒரு குறித்த வரைமுறையின்றியே இவை செயற்பட்டு வந்துள்ளன.

ஆனால் இவை தற்போது ஒழுங்காக்கப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையின் மூலம் சிறுவர் இல்லங்கள் சார்ந்த அனைத்து செயற்பாடுகளும் ஒரு வரையறைக்குள் கொண்டு வரப்படும். அதன்பின்னர் பதிவுச் சான்றிதல்கள் தொடர்பான ஆவணங்கள் பரிசீலனை செய்யப்படும் - என்றார்.

வடக்கு மாகாணத்தில் 41 சிறுவர் இல்லங்கள் உள்ளன. 1941ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ் 9 சிறுவர் இல்லங்கள் இன்னமும் பதியப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது .

(ய-ரி)

# தமிழர்களின் தியாகங்களை மதிக்கின்றோம் வட-கிழக்கு இணைப்புக்கு இணங்கோம்

## முரண்நிலை கருத்து வெளியிடுகிறார் ரிசாட் பதியுதீன்

கொழும்பு, ஒக். 7



> தமிழர்களின் தாயகக் கோட்பாட்டுக்கான தியாகங்கள் விலை மதிக்க முடியாதவை. இந்தத் தியாகங்களை முஸ்லிம்கள் மலினப்படுத்தவில்லை. ஆனால் வடக்கு- கிழக்கு இணைப்பில் முஸ்லிம் சமூகத்தின் வேணவாக்கள் அமுங்கிப்போகும் அபாய முள்ளது.

தமிழர்களின் தாயகக் கோட்பாட்டுக்கான தியாகங்கள் விலைமதிக்க முடியாதவை. இந்தத் தியாகங்களை முஸ்லிம்கள் மலினப்படுத்தவில்லை. வடக்கு - கிழக்கு இணைப்பில் முஸ்லிம் சமூகத்தின் வேணவாக்கள் அமுங்கிப்போகும் அபாய முள்ளது. வடக்கு - கிழக்கை இணைக்க நாம் இணங்க மாட்டோம். இவ்வாறு அமைச்சரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் முஸ்லிம் சமூகத்துடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தரப்புக்கள் வடக்கு- கிழக்கு மாகாணங்களை இணைக்கக் கோருவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், இவ்விரு மாகாணங்களும் இணைவதை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கடுமையாக எதிர்க்கும்.

தமிழர்களின் தாயகக் கோட்பாட்டுக்கான தியாகங்கள் விலைமதிக்க முடியாதவை. இந்தத் தியாகங்களை முஸ்லிம்கள் மலினப்படுத்தவில்லை. ஆனால் வடக்கு- கிழக்கு இணைப்பில் முஸ்லிம் சமூகத்தின் வேணவாக்கள் அமுங்கிப்போகும் அபாய முள்ளது. இந்த நிலையில் இவ்விரு மாகாணங்களும் இணைக்கப்பட்டுக் காணிப் பொலிஸ் அதிகாரங்களும் வழங்கப்பட்டால் நிலமைகள் இன்னும் மோசமாகும்.

முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள் இன்னும் தீர்ந்தபாடில்லை. புலிகளின் சிந்தனையில் வளரும் அரசியல்வாதிகள் சிலரின் போக்குகள் வடக்கு முஸ்லிம்களை மேலும் அச்சத்துக்குள்ளாக்கியுள்ளது. இணைப்புக்கு ஆதரவளித்தால் பேரினவாதிகளின் நெருக்குதலுக்கு தென், மேல் மாகாணங்களிலுள்ள முஸ்லிம்கள் அகப்படும் அபாயமுள்ளது.

நிலமைகளை நேரில் உணர்பவர்கள் என்பதால் வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்க்கிறோம். கிழக்கில் மூவின மக்களின் பிரதிநிதிகளும் இணைந்து மாகாண நிர்வாகத்தைக் கொண்டு செல்கின்றனர். வடக்கு கிழக்கை இணைத்தால் இவ்வொற்றுமை இல்லாது போகும். தமிழ்ப் பெரும்பான்மை வாதத்தைப் பலப்படுத்தும் பின்னணியிலே இந்தக் கோரிக்கை எழுகிறது.

பிரதேச காணிப் பிரச்சினைகளைக் கொழும்பு அரசின் காணி அமைச்சரிடம் சென்று தீர்த்துக் கொள்வதனூடாக மாகாண நிர்வாகங்களின் மோதல்களைத் தவிர்க்க முடியும்.

மாகாண சபைகள் திருத்தச் சட்டவரைவுக்கு வாக்களிப்பதில்லை என்ற எமது நிலைப்பாடு, தலைமை அமைச்சருக்குக் காட்டிக் கொடுக்கப்பட்டது.

அரசிடம் எம்மைத் துரோகிகளாகக் காட்டி அரசிலிருந்து தனிமைப்படுத்த எமக்கெதிராக எடுக்கப்பட்ட முயற்சிகளைப் புத்திசாதுர்யமாக முறியடித்தோம். பசில் ராஜபக்சவுடன் இரகசிய பேரம் பேசி அரசைக் கவிழ்க்க நாம் சதிசெய்துள்ளதாகப் புரளிகள் பரப்பப்பட்டன. பல திருத்தங்களைச் செய்வதென்ற தலைமை அமைச்சரின் இணக்கப்பாட்டில் மாகாண சபைத் திருத்தச் சட்டவரைவுக்கு வாக்களிக்க நேர்ந்தது.

எமது ஆதரவு இல்லாமலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறும் பலம் அரசுக்கு இருந்ததால், காட்டிக் கொடுப்பிலிருந்து தப்பிக்க இந்தச் சட்டவரைவை ஆதரித்தோம். அரசமைப்பின் வழி நடத்தல் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள எமது யோசனைகளில் முஸ்லிம் சமூகத்துக்குத் தேவையான பலவிடயங்களும் உள்ளடங்கியுள்ளன. இவ்வாறான ஒரு யோசனையை முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்காதமை பெரும் கவலையளிக்கின்றது - என்றார். (5)



## இடைக்கால அறிக்கையும் மகிந்தவும்

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச வாசிக்கின்றார். (5)

# தமிழ் மக்களின் விட்டுக்கொடுப்புக்களை நாம் கைப்பற்றிக் கொள்ளவேண்டும்

## சந்தர்ப்பத்தை தவறவிட்டால் நாட்டில் மீண்டும் குருதி ஆறுதான் என்கிறார் டிலான்

கொழும்பு, ஒக். 7

"சிங்களத்தில் ஏக்கியவையும் தமிழில் ஒருமித்த நாட்டையும் ஏற்று ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ளத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முன்வந்துள்ளமை மிகப்பெரிய திருப்பு முனையாகும். தமது அரசியல் தீர்வுப்பயணத்தில் கடும் வடுக்களையும் இழப்புக்களையும் சந்தித்த மக்கள் இந்தளவு தூரம் இறங்கி வந்துள்ளமை மிகப்பெரியதொரு நிலமையாகும். தமிழ் மக்கள் இதனைவிட கீழே இறங்கி வருவார்கள் என்று நாம் எதிர்பார்ப்பது ஆரோக்கியமாகாது". இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்களத்தில் ஏக்கிய என்ற சொற்பிரயோகத்தையும், தமிழில் ஒருமித்த நாடு என்ற சொற்பிரயோகத்தையும் பயன்படுத்துவதற்கு இடைக்கால அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதில் எவ்விதமான தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. ஒருமித்த என்பது சிங்கள மொழியில் ஏக்கிய என்பதற்கான சரியான தமிழ்ச்சொல் என்று நம்புகின்றேன். ஒரு என்று வரும்போது அங்கு ஒரு நாடு என்ற பொருள் கிடைக்கிறது. சிங்களத்தில் ஏக்கிய என்பதற்கு தமிழில் ஒருமித்தநாடு என்ற சொற்பிரயோகத்தை ஏற்றுக்கொள்ளலாம்.

இலங்கையின் சட்டத்தில் ஒரு முக்கிய விடயம் இருக்கின்றது. ஏதாவது ஒரு பிரச்சினை வரும்போது அல்லது சிக்கல்கள் வரும்போது சிங்கள மொழில் இருக்கின்ற சொற்பிரயோகமே ஏற்றுக்கொள்ளப்படும். இங்கு ஏக்கிய என்ற வசனம் சிங்கள மொழியில் இருப்பதால் எந்தப் பிரச்சினையும் இல்லை. 1995ஆம் ஆண்டு மற்றும் 2000ஆம் ஆண்டுகளில் ஏக்கிய என்ற வசனத்தை எடுத்துவிட்டு ஐக்கிய என்ற சொற்பதத்தை வைத்து தீர்வுத் திட்டங்களை முன்வைத்த பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இன்று இடைக்கால அறிக்கையை எதிர்த்து பேசிக்கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாக அமைந்திருக்கின்றது.

சிங்களத்தில் ஏக்கிய என்ற வசனத்தையும் தமிழில் ஒருமித்த நாடு என்ற வசனத்தையும் ஏற்று ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ளத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முன்வந்துள்ளமை ஒருமிகப் பெரிய திருப்புமுனையாகும். அரசியல் தீர்வுப்பயணத்தில் கடும் வடுக்களையும் இழப்புக்களையும் சந்தித்த மக்கள் இந்தளவு தூரம் இறங்கிவந்துள்ளமை மிகப்பெரியதொரு நிலமையாகும். இந்த மக்கள் இதனைவிட கீழே இறங்கி வருவார்கள் என்று நாம் எதிர்பார்ப்பது ஆரோக்கியமாகாது.

தமிழ்த் தலைவர்கள் இந்தளவு தூரம் இறங்கிவந்த பின்னரும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாவிடின் ஒருபோதும் விடிவு கிடைக்காது. அதுமட்டுமன்றி இந்த நாட்டில் குருதி ஆறு ஓடும் அபாயம் ஏற்படும்.

ஏக்கிய மற்றும் ஒருமித்த என்ற சொற்பதங்களை ஏற்றுத் தீர்வைக்காண முன்வந்துள்ளமை தொடர்பில் தமிழ் மக்களுக்கு நாங்கள் நன்றிகூறவேண்டும். அவர்களுக்கு நன்றியைக் கூறிக் கொண்டு இந்தப் பிரச்சினைகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிடின் ஒருபோதும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இதனையும் குழப்பித் தடையை ஏற்படுத்துவதற்கு வடக்கு மற்றும் தெற்கில் இனவாதிகள் முயற்சித்து வருகின்றனர். தெற்கில் விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்த்தன போன்றவர்களும், வடக்கில் சிவாஜிலிங்கம், விக்கினேஸ்வரன் போன்றவர்களும் அனைத்தையும் குழப்பித் தீர்வைக் காணவிடாமல் தடையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் - என்றார். (5)

# வடக்கிலிருந்து விரட்டியடித்த சிங்களவர்களை குடியமர்த்திவிட்டு ரோஹிங்யர்களைப் பற்றிப் பேசுங்கள்

## மேல் மாகாணசபை உறுப்பினர் நிசாந்த வர்ணசிங்க

வடக்கில் இருந்து விரட்டப்பட்ட 40 ஆயிரம் சிங்களவர்கள் அங்கு மீளக் குடியமர்வதற்கு அனுமதியளித்துவிட்டு ரோஹிங்ய முஸ்லிம்களுக்கு ஆதரவாகச் செயற்படுங்கள் என்று ஜாதிக ஹெல உறுமய வட மாகாண சபையிடம் கோரியுள்ளது. இது தொடர்பில் அந்தக் கட்சியின் மேல்மாகாண சபை உறுப்பினர் நிசாந்த வர்ணசிங்க மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இப்போது பரவலாகப் பேசப்பட்டுக்கொண்டிருப்பது இலங்கையில் தங்கியுள்ள மியன்மார் நாட்டின் ரோஹிங்ய ஏதிலிகளுக்கு எதிராகத் தேரர்கள் சிலர் மேற்கொண்ட நடவடிக்கை பற்றியதுதான். மியன்மாரைப் பொறுத்தவரை அது இலங்கையுடன் மிக நெருங்கிய உறவைக்கொண்ட நாடாகும். இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள மூன்று பௌத்த பீடங்களுள் இரண்டு பீடங்கள் மியன்மாரின் உதவியுடன் அமைக்கப்பட்டவைதான். ரோஹிங்ய விவகாரம் இரண்டு நாடுகளுக்கு மிடையில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏதிலிகளுக்கு எதிராக எமது தேரர்கள் நடந்துகொண்ட விதத்தை ஒருபோதும் ஏற்க முடியாது. ரோஹிங்ய ஏதிலிகளுக்கு இலங்கை அரசு இடம்கொடுக்க வேண்டும் என்று வட மாகாண சபை பிரேரணை நிறைவேற்றியுள்ளது. இது வேடிக்கையாக உள்ளது. வடக்கில் இருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்களும் சிங்களவர்களும் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்காத வடமாகாண சபை ரோஹிங்ய அகதிகள் பற்றிப் பேசுவதற்குத் தகுதியற்றது - என்றார். (5.3)

# முஸ்லிம்களை அவமானப்படுத்துகிறார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்

## ஆதங்கப்படுகிறார் கிழக்கின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, ஒக். 7

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தில் படித்த முஸ்லிம் முதலமைச்சரை ஏற்றுக் கொள்ளத் தயார் என்று ஆர். சம்பந்தன் சொல்வது கிழக்கு முஸ்லிம்களை அவமானப்படுத்தும் செயலாகும். இவ்வாறு உலமா கட்சித் தலைவரும், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கையும் கிழக்கையும் இணைத்து விட்டு எந்தக் காலமும் முஸ்லிம் முதலமைச்சரைத் தமிழ் மக்கள் நியமிப்பார்களா? இல்லையே. குறிப்பிட்ட சில வருடங்களில் அல்லது ஐந்து வருடங்களின் பின் முஸ்லிம் முதலமைச்சர் நியமிக்கப்படமாட்டார். அப்படியாயின் இந்த ஐந்து வருடத்துக்கு மட்டும் வாழும் முஸ்லிம்கள், முதலமைச்சரைப் பார்த்து ரசிக்க அடுத்த தலைமுறை கிழக்கு முஸ்லிம்கள், இணைந்த வடக்கு - கிழக்கில் அடிமைகளாக இருக்க நாம் விட வேண்டுமா?.

சம்பந்தனுடன் உறவாடும் முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் தம்மை மட்டுமே பார்க்கும் சுயநலவாதிகளாக இருப்பதைக்கண்ட சம்பந்தன், இப்படித்தான் எல்லா முஸ்லிம்களும் பதவி வெறிபிடித்தவர்களாக இருப்பார்கள் என்ற கற்பனையில் சிறுபிள்ளைத்தனமான கருத்தைக் கூறி முஸ்லிம்களை ஏமாற்ற முனைவதை உலமா கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

உலமா கட்சியைப் பொறுத்தவரை முஸ்லிம் முதலமைச்சர், தமிழ் முதலமைச்சர், சிங்கள முதலமைச்சர் என்ற கோசத்தை மறுக்கிறது. இனவாதம் இல்லாத, சகல மக்களையும் சமமாகப் பார்க்கும் ஒரு கிழக்கு மகன் கிழக்கின் முதலமைச்சராக வரவேண்டுமென்பதையே அன்று முதல் இன்று வரை சொல்லி வருகிறோம்.

இது வரை நாம் கிழக்கில் முஸ்லிம் முதலமைச்சர்களைக் கண்டு விட்டோம். அவர்களால் சமூகம் கண்ட நன்மைகளை விட சோரம் போனதே மிக அதிகம். இந்த நிலையில் வடக்கும் கிழக்கும் இணைந்து 17 வீதமாக்கப்பட்ட முஸ்லிம்களின் முதலமைச்சர் தமிழ் கூட்டமைப்பின் விளையாட்டுப் பிள்ளையாகவே இருப்பார் என்பது யதார்த்தம்.

முஸ்லிம் முதலமைச்சர் பதவி கொடுத்தால் வடக்கு- கிழக்கு இணைப்புக்கு கிழக்கு முஸ்லிம்கள் உடன்படுவர் என நினைத்து ஆர்.சம்பந்தன் சொல்வது கிழக்கு முஸ்லிம்களை அவமானப்படுத்தும் செயலாகக் கருதுகின்றோம். வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

வடக்கும் கிழக்கும் பிரிந்திருக்கும் நிலையில் தமிழ் முஸ்லிம் உறவைக் கட்டியெழுப்புவது எப்படி என்பதைத் தமிழ் முஸ்லிம் நிரந்தர உறவில் அக்கறையுள்ள, வடக்கு - கிழக்கை எந்தக்காரணம் கொண்டும் இணைக்கக் கூடாது என்ற கொள்கை கொண்ட உலமா கட்சி போன்ற கட்சிகளுடன் பேச சம்பந்தன் போன்றோர் முன்வர வேண்டும் - என்றார். (5)

# மாகாண சபைத் தேர்தலில் படைத்தளபதிகள் குதிப்பு

## களமிறக்குகின்றது மகிந்த அணி

கொழும்பு, ஒக். 7

இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றுள்ள தளபதிகளை ஓரணியில் திரட்டிப் புதிய அமைப்பொன்றை உருவாக்கும் முயற்சியில் மகிந்த அணி தீவிரம் காட்டி வருகின்றது.

இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கும் பொறுப்பு மேஜர் ஜெனரல் கமால் குணரட்னவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது.

இறுதிக்கட்டப்போரின்போது 53ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்ட கமால் குணரட்ன, இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் மகிந்த அணியில் இணைந்துள்ளார். அரசின் திட்டங்களையும் கடுமையாகச் சாடி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

2018ஆம் ஆண்டு மார்ச்சில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை இலக்கு வைத்தே இந்த அமைப்பு உதயமாகின்றது என்றும், அதில் அங்கம் வகிக்கும் முன்னாள்த் தளபதிகள் தேர்தலில் களமிறங்கும் என்றும் மகிந்த அணி உறுப்பினர் குறிப்பிட்டார்.

உள்நாட்டுப்போர் நடைபெற்ற காலப்பகுதியில் இராணுவத்தினரைச் சிங்கள மக்கள் தமது பாதுகாவலர்களாகவும், கடவுளாகவுமே பார்த்தனர். இன்றளவிலும் அதே செல்வாக்கு இருந்து வருகின்றது. வாக்குவேட்டையாடுவதற்காகப் படைத்தளபதிகளைக் களமிறக்கும் திட்டத்தை மகிந்த அணி வகுத்துள்ளது எனக் கூறப்படுகின்றது. (5)

# ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்துகிறார் ரணில்

## சம்பிக்க, ஹிருணிக்காவுக்கு உயர்பதவி அடுத்தவாரம் வழங்கி வைப்பு



கொழும்பு, ஒக். 7

ஐக்கிய தேசியக் கட்சியை மேலும் பலப்படுத்தி வாக்கு வங்கியை அதிகரித்துக் கொள்வதற்குரிய வியூகங்களை வகுப்பதில் கட்சித் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க் தீவிரம் காட்டி வருகின்றார்.

அரசியலில் பிரபல்யமான மற்றும் வாக்கு வேட்டையாடுவதற்குரிய வல்லமைகொண்டவர்களுக்குத் தொகுதி அமைப்பாளர் பதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியிலுள்ள பங்காளிக் கட்சிகளையும் தமது பக்கம் வளைத்துப் போடுவதற்கு முயற்சிக்கின்றார்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க, நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர ஆகியோருக்குத் தொகுதி அமைப்பாளர் பதவியுடன், ஐக்கிய தேசியக் கட்சியில் உயர் பதவி வழங்கப்படவுள்ளது. இதற்கான நிகழ்வு அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது.

அடுத்து நடைபெறவுள்ள தேர்தல்களை இலக்குவைத்தும், தனது தலைமைத்துவத்துக்குப் பிறகும் கட்சி பலமாகவே இருக்கவேண்டும் என்ற நோக்கிலுமே இந்த நகர்வுகளைத் தலைமை அமைச்சர் முன்னெடுத்து வருகின்றார்.

ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளராகப் பதவி வகிக்கும் சம்பிக்க ரணவக்க, சிங்கள, பௌத்த மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற அரசியல்வாதியாவார். கல்வித்துறையிலும் அவர் பட்டம் பெற்றுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ள அவருக்கு உயர் பதவி வழங்கினால் அது சிங்கள, பௌத்த மக்களின் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சிக்கான வரவேற்பாக இருக்கும் என்று நம்பப்படுகின்றது.

கொலன்னாவைத் தேர்தல்த் தொகுதியானது ஐக்கிய தேசியக் கட்சியான கோட்டைகளுள் ஒன்றாகவே விளங்கியது. பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவால் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அந்தத் தொகுதியில் பெரும் செல்வாக்கு இருந்தது.

இந்த நிலையில், அவரின் மகளான ஹிருணிக்கா பிரேமச்சந்திரவை இணைத் தால் கொலன்னாவையில் முழுமையாகக் காலூன்றலாம் என்பதால் அவருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் பதவி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (5)




### நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வி.ஜெயந்தி
T.P: 077 9733 183
021 221 6071

### விற்பனைக்குண்டு

நல்ல இன யமுனாபாரி சணல் கிடாய் மறி ஆடுகள், குளிர்சாதனப் பெட்டிகள் விற்பனைக்குண்டு.

076 840 4112, 077 526 7844

### விற்பனைக்குண்டு

பாவித்த நல்லநிலையிலுள்ள முதிரை மரத்திலான 2 கட்டில்கள், ஒரு சாப்பாட்டு மேசை, ஒரு படிக்கும்மேசை என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு : 076 678 7387 (உரும்பிராய்)

### சிறுநீரகம் தேவை

20 வயதுடைய மாணவர் ஒருவருக்கு சிறுநீரகம் செயலிழந்தமையால் $O^{+}$ அல்லது $O^{-}$ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

021 222 7263, 077 979 7403, 077 391 1406


### மன அழுத்தத்தைக் குறைக்க நம்மிடம் இருக்க வேண்டிய வாழ்க்கைத் திறன்கள்

- தீர்மானம் எடுத்தல்
- பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்
- ஆக்கபூர்வமான (புதிய) சிந்தனை
- விமர்சன ரீதியான சிந்தனை
- பயன்மிக்க தொடர்பாடல்
- சிறந்த ஆளிடைத் தொடர்பு
- பரிவுணர்வு
- சரியான சுய மதிப்பீடு
- உணர்வுகளைக் கையாளல்
- மன அழுத்தத்தைக் கையாளல்

– சாந்திகம்.


### நாகபூஷணி திருமணசேவை

மணமகள்மாருக்கு பதிவுக் கட்டணங்கள் - இலவசம்
(07.10.2017 இலிருந்து 11.10.2017 வரை) ஏராளமான மணமக்கள் எம்மிடம் உள்ளனர்.நீங்கள் விரும்பும் மணமகனை/மணமகளை உடன் மிகப் பொருத்தமாக தெரிவுசெய்து தரப்படும்.

T.P:. 021 222 9306/ 021 320 9397/ 077 138 7596
383/14B கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோயில் வடக்குப் பக்கம்)

## றோயல் மெடிக்கல் சென்ரர்

யாழ். போதனா வைத்தியசாலை பழைய OPD முன்பாக விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனையை பெற அழையுங்கள்

### றோயல் வைத்திய ஆலோசனைகள் ...



- காது, மூக்கு தொண்டை [ENT] சத்திரசிகிச்சை நிபுணர்
- நீரிழிவு (சலரோகம்) கோமோர்ன்ஸ் வைத்தியநிபுணர்
- சத்திரசிகிச்சை நிபுணர்
- மூட்டுவாத வைத்திய நிபுணர்
- தோல் வைத்திய நிபுணர்
- பொது வைத்திய நிபுணர்
- குழந்தை வைத்திய நிபுணர்
- மகப்பேற்று வைத்திய நிபுணர்
- நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்
- சிறுநீரக வைத்திய நிபுணர்
- மார்புநோய் வைத்திய நிபுணர்
- இதய வைத்திய நிபுணர்
- பிளாஸ்ரிக் [Plastic] சத்திரசிகிச்சை நிபுணர்
- பேச்சு மற்றும் மொழி சிகிச்சையாளர்
- பல், முக சீராக்கல் வைத்திய நிபுணர்
- பல், தாடை சீராக்கல் சத்திரசிகிச்சை நிபுணர்
- பற்சிகிச்சை நிபுணர்

தொடர்புகளுக்கு...
021 720 1587, 021 320 2300, 021 221 3668, 077 045 7976
royalmedicalcentre458@gmail.com
458, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ABI Fashion World

## அபி பஷன் வேல்ட்இன் தீபாவளி சிறப்புத் தள்ளுபடி

ரெடிமெற் ஆடைகளின் சங்கமம்

தீபத்திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பும் ஆடைகள் ஒரே இடத்தில்...

தீபத் திருநாளை முன்னிட்டு
10% to 60%



சல்வார் 1500/= முதல்

சல்வார் துணிகள் 800/= முதல் (றொப் 01 இலவசம்)

சேட் 600/= முதல் (01 வாங்கினால் 01 இலவசம்)

ஹொட்டன் சாறி 800/= முதல்

பட்டுப்புடவை 2000/= முதல்

ரீசேட் 250/= முதல்

பான்சி சாறி 1000/= முதல் (01 வாங்கினால் 02 இலவசம்)

இச்சலுகை 18.10.2017 வரை

(விலைக் கழிவுகள் நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

112, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கும் பிரதம தபாலகத்திற்கும் இடையில்)

021 222 3738
077 324 6503
abifashionworld

# கறுப்பு ஆடுகளைக் கூண்டோடு களையெடுக்கின்றார் மைத்திரி

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்துகொண்டு மகிந்த அணிக்குச் சார்பாகச் செயற்பட்டு வரும் தொகுதி அமைப்பாளர்கள் அனைவரினதும் பதவியை ஒரேயடியாகப் பறிப்பதற்குச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது என்று அறியமுடிகின்றது.

கட்சியின் தலைவரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்குச் சார்பாகச் செயற்பட்டுவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களைக் கட்டம் கட்டமாகவே அரச தலைவர் மைத்திரி பதவி நீக்கி வந்தார். ஏனைய உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையிலேயே அவரின் வியூகம் அமைந்தது. எனினும், மகிந்தவின் விசுவாசிகள் கட்டுப்படுவதாகத் தெரியவில்லை.

இந்த நிலையிலேயே கறுப்பு ஆடுகளை ஒரேயடியாகத் தூக்கும் முடிவுக்கு கட்சித் தலைவர் என்ற ரீதியில் அரச தலைவர் மைத்திரி வந்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருப்பவர்கள் கட்சியை விமர்சித்து, மகிந்தவுக்குச் சார்பாக செயற்பட்டால், தேர்தல் அறிவிப்பு வந்த பின்னர் சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறினால் அது கட்சிக்குப் பாதிப்பாக அமையும் எனச் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே, கட்சியின் நலனைக் கருத்திற்கொண்டு இந்த முடிவுக்கு மைத்திரி வந்துள்ளார் எனத் தெரியவருகின்றது. (5)

## ஜப்பானில் அசிங்கப்பட்டார் முன்னாள் அரச தலைவர்



கொழும்பு, ஒக். 7

ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்ட முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அங்கு அவமானத்தைச் சந்தித்துள்ளதாகச் சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பத்து நாள்கள் பயணமாக ஜப்பான் சென்றுள்ளார். அவரது ஆதரவாளர்களின் அழைப்பின் அடிப்படையிலும், தொண்டையில் ஏற்பட்டுள்ள நோய்க்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்குமே மகிந்த ராஜபக்ச இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

மகிந்த ராஜபக்சவுடன், நாடாளுமன்ற உறுப்பினர்களான லொஹான் ரத்வத்த மற்றும் ரொசான் ரணசிங்க ஆகியோரும் சென்றுள்ளனர்.

ஜப்பானுக்குச் சென்றுள்ள அவர்களை வரவேற்பதற்கு யாரும் வானூர்தி நிலையத்திற்குச் செல்லவில்லை.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு அரசியலில் மூத்த தலைவர்கள் செல்லும்போது அங்கிருக்கும் தூதரகத்தினால் வரவேற்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது வழமை. ஆனால் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான குழுவினருக்கு வரவேற்புக்களை மேற்கொள்ள வேண்டாம் என்று தூதரகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5)

## இலங்கைப் படைகளுடனான பயிற்சி தொடரும் என்கிறது அமெரிக்கா

கொழும்பு, ஒக். 7

அமெரிக்க - இலங்கைப் படைகளுக்கு இடையிலான கூட்டுப் பயிற்சி போன்ற வாய்ப்புகள் இன்னும் அதிகரிக்கும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் கடந்த 2ஆம் திகதி தொடங்கி நேற்றுடன் முடிவடைந்த, அமெரிக்க - இலங்கைக் கடற்படைகளுக்கு இடையிலான முதலாவது ஐந்து நாள் கூட்டுப் பயிற்சி தொடர்பாக அமெரிக்கத் தூதரகத்தினால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதில் இலங்கைக்கான அமெரிக்கத் துணைத் தூதுவர் ரொபேர்ட் ஹில்டன், இலங்கை அரசு நல்லிணக்கம், நீதி மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றில் தொடர்ந்து முன்னேற்றத்தைக் காட்டி வருகிறது.

இதுபோன்ற வாய்ப்புகளை உள்ளடக்கிய எமது படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்புத் தொடர்ந்து வளர்ச்சியடையும், என்று கூறியுள்ளார். (5)

## பிறந்த சிசுவைக் கைவிட்ட
## மருத்துவபீட மாணவியான தாய் கைதாகிப் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஒக். 7

அநுராதபுரத்தில், பிறந்து 12 நாள்களேயான சிசுவைக் கைவிட்டுச் சென்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மருத்துவீட மாணவியான தாய் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். அநுராதபுரம் பிரதான நீதிவான் அவருக்குப் பிணை அனுமதி வழங்கினார்.

தாய் மற்றும் சிசு தொடர்பில் மரபணுபரி சோதனை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் நீதிவான உத்தரவிட்டுள்ளார்.

அநுராதபுரம் பகுதியில் உள்ள மருந்தகத்துக்கு அருகில் சிசு கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மருத்துவ பீட மாணவியான தாய், சிசுவைவைக் கைவிட்டுச் சென்றமை கண்டறியப்பட்டுள்ளது.

அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் மகளிர் விவகாரப் பிரிவு இது தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (5,33)

நினைவஞ்சலிகள்

முதலாம் ஆண்டு



காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி
பத்மாவதி தம்பதிகளின்
சிரேஷ்ட புதல்வி

திருமதி புவனேந்திரன் அம்பிகை

பிறப்பு 06.02.1937 இறப்பு 18.09.2016

திதி: (07.10.2017)

4 ஆம் ஆண்டு



காலஞ்சென்றவர்களான
பொன்னம்பலம் இராசம்மா தம்பதியரின்
புதல்வன்

பொன்னம்பலம் புவனேந்திரன்

பிறப்பு 14.11.1932 இறப்பு 05.08.2013

திதி: (22.07.2017)

காலங்கள் கடந்து கோலங்கள் மாறினாலும் என்றும் உங்கள் நினைவுடன்

சோதிவேம்படி,
மானிப்பாய்.

பிள்ளைகள்:
நிரஞ்சன், நிர்மலன், நிருபன் (சின்ராசா - சின்னராசா)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

மரண அறிவித்தல்



திருமதி அன்னபூரணம் ஐயாத்துரை

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூரணம் ஐயாத்துரை 05.10.2017 வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் வீரவாகு - சின்னம்மா தம்பதியின்ரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் அருணாசலம் காலஞ்சென்ற இராசையா மற்றும் வள்ளியம்மை, காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான முருகையா , குமாரசாமி மற்றும் செல்லத்துரை காலஞ்சென்ற பூரணம் மற்றும் பூமணி காலஞ்சென்றவர்களான ஈஸ்வரி, இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் யோகேஸ்வரன், விக்னேஸ்வரன், ஜெகதீஸ்வரன், யோகேஸ்வரி, ஜெகதீஸ்வரி, இலங்கேஸ்வரி, பிரதீஸ்வரி, இலங்கேஸ்வரன், அன்பரசி ஆகியோரின் அன்புத் தாயாரும் நவரஞ்சினி, அனுஷியா, இதயராணி, கோணேஸ்வரன், சற்குணராசா, காலஞ்சென்ற பத்மதேவன் மற்றும் விஜயராசா, யாழினி, சுகந்தன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.10.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி, ஆசாரி ஒழுங்கை,
தாவடி வடக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்



சவிரியாம் செபமாலையம்மா

யாழ்.குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சவிரியாம் செபமாலையம்மா 05.10.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.10.2017 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9/3, மத்தியகிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 35 ஆவது பிறந்த நாளும் நீங்காத நினைவில் ஆண்டுகள் எட்டும்

மண்ணில்
07 . 10 . 1981



விண்ணில்
19 . 09 . 2009

### இரவி பிரசாத் (றாயு)



நீ வளர்ந்ததை மறக்கவா கண்ணா!
நீ வருவாய் என்று நினைக்கவா கண்ணா!
அம்மா என்று அழைக்கமாட்டாயா கண்ணா!
ஏங்கித் தவிக்குது ஆண்டெட்டாய் கண்ணா!
மருமக்கள் மாமா எங்கே என்று
கேட்கிறார்கள் கண்ணா!
நீ இல்லை என்று சொல்ல முடியவில்லை கண்ணா!
எத்தனையோ கனவுகள் காண்கின்றோம் கண்ணா!

உன் துயரில் தவிக்கும்
அம்மா, அப்பா,
சகோதரிகள்.

இ.இரவி
புகையிரத வீதி, கொடிகாமம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
18 . 04 . 1952



விண்ணில்
18 . 09 . 2016

அமரர்
### சுந்தரம்பிள்ளை கனகலிங்கம் (தெய்வம்)

(முன்னாள் துர்க்கா - தெல்லிப்பழை, நியூ இந்திரா - வவுனியா திரையரங்கு, அஸ்வினா லொட்ஜ் உரிமையாளர்)
திதி : திருதியை (07.10.2017)

"எத்தனையோ சரிவுகளுக்குப் பின்னும்
தைரியமாக சிரித்துக் கொண்டிருக்கின்ற
அப்பாவிற்கு நிகரான நம்பிக்கையூட்டும்
புத்தகம் பிரபஞ்சத்தில் எங்குமில்லை ..."

109/2, அம்மன் கோயில் வீதி,
பண்டாரிக்குளம், வவுனியா.

குடும்பத்தினர்.

## 12 ஆம் நெஞ்சம் நெகிழும் ஆண்டு நினைவலைகள்

எழுகதிராய்
04 . 08 . 1984



உதிர்மலராய்
07 . 10 . 2005

### செல்வி தனுஷா மாதவராஜா

(2 ஆம் வருட கலைப்பீட மாணவி யாழ். பல்கலைக்கழகம் பழைய மாணவி - மகளிர் மகாவித்தியாலயம் இறம்பைக்குளம், வவுனியா)
திதி: சதுர்த்தி

வீட்டின் விளக்காக விளங்கி ஒளி செய்தாய்
நாட்டுகின்ற அன்பால் கருணையினால் நீ சிறந்தாய்
எந்த குறையும் இன்றி இருக்கையிலே
எம்மைப் பிரிந்தனையே எவ்வாறு தாங்கிடுவோம்.

பொ.மாதவராஜா
அண்ணாவி வளவு,
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

பிரிவுத்துயரால் வாடும்
அப்பா, அம்மா, தம்பி.

## பிணைமுறி விசாரணை அடுத்த வாரம் நிறைவு

கொழும்பு, ஒக். 7
மத்திய வங்கியின் பிணை முறி வழங்களின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட அரச தலைவர் ஆணைக் குழு, அடுத்த வாரத்துக்குள் சாட்சிப் பதிவுகளை முடிவுறுத்தத் தீர்மானித்துள்ளது.


இவ்வாறு. ஆணைக் குழுவுக்குத் தலைமை தாங்கும் நீதியரசர் கே.டி. சித்ரசிறி தெரிவித்தார்.

ஆணைக் குழு முன்னிலையில் முக்கியமான பல சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சாட்சிப் பதிவுகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனிடம் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. ஒரு வாரத்துக்குள் சாட்சிப் பதிவுகளை நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (5,31)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### தர்மலிங்கம் தர்மராஜா

உரிமையாளர் - சரண்யா மோட்டோர்ஸ்)

பிறப்பு
15.03.1958

இறப்பு
18.09.2016

எங்களை வாழவைத்த ஒப்பிலாத் தலைவரே
உங்களை இழந்து நாம் ஓராண்டு ஓடியதே
என்றென்றும் எங்கள் இதயத்துள் வாழ்வீர்கள்
உங்கள் நினைவே துணையாக வாழ்கின்றோம்

"பன்னாலை வாசம்"
தாவடி தெற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06 . 09 . 1990



மறைவு
07 . 10 . 2014

### அமரர் டோமினிக் தனுசன்

எங்கள் குல விளக்காய் உதித்த எம் செல்ல மகனே
உனது மழலை வார்த்தைகளும் மங்காத புன்சிரிப்பும் எங்கள்
மனதில் நின்று உருக்குதையா ஆண்டு மூன்று சென்றாலும்
ஆறாது எம் துயரம்

27/1, A.V. றோட்,
கொழும்புத்துறை.

குடும்பத்தினர்.

# அரச, வங்கி நடைமுறைகளில் தமிழ்மொழிப் பயன்பாடு கட்டாயம்

## கொழும்பிடம் வடக்கு மாகாணசபை வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 7

"இலங்கையில் தமிழ்மொழிக்கு சமஉரிமை வழங்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவிக்கின்றது. எனினும், அது பல இடங்களில் புறக்கணிக்கப்பட்டே வருகின்றது. மக்கள் அன்றாடம் நாடிச்செல்லும் வங்கிகளில் கூட சிங்கள மொழியே ஆதிக்கம் செலுத்தி நிற்கின்றது.

வங்கிகள் தமது விதி முறைகளை சகலருக்கும் எவ்வித பாரபட்சமும் இன்றி நடைமுறைப்படுத்துகின்றன. சலுகைகளையும் வழங்குகின்றன. இதில் மாற்றுக்கருத்துகளுக்கு இடமில்லை.

ஆனால் ஒரு சமூகத்தின் மொழி உரிமையை மட்டும் மீறுவது எந்தவகையில் நியாயமாகும்? கணக்கு வகைகள், பரிசு விவரங்கள், சலுகைகள் உள்ளிட்ட பல விடயங்கள் சிங்கள மொழி மூலமே காணப்படுகின்றன. இந்நிலையில், தமிழ் மொழி தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிறது.

அரசகரும மொழிகள் அமைச்சு இதுதொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசதலைவர் கூட மொழி உரிமை விடயத்தில் தவறிழைக்கிறார்" என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் பல குற்றச்சாட்டுகளை நேற்று முன்வைத்தனர்.

இலங்கையில் உள்ள அனைத்து வங்கிகள் மற்றும் அரசின் திட்டங்கள் அனைத்தினதும் பெயர்களும் தமிழிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தேசிய சுகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் பிரேரணை ஒன்றை மாகாணசபையில் நேற்று முன்மொழிந்தார்.

அரச திணைக்களங்களில் உள்ள மொழிப் பிரச்சினைகளைத் தீர்க்க மாகாண சபை மற்றும் கொழும்பு கரும மொழி அமைச்சு தீர்க்கமான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் கோரிக்கை விடுத்தார்.

திணைக்களங்களில் இருந்து கிடைக்கின்ற கடிதங்களில் இன்றும் மொழிப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. பெரும்பாலான கடிதங்கள் தனிச்சிங்கள மொழியிலேயே கிடைக்கின்றன. இதனால் அனைவரும் பல பிரச்சினைகளைச் சந்திக்கவேண்டியுள்ளது. எனவே இதுதொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார்.

எனது அமைச்சுக்கு கொழும்பு அரசிடமிருந்து வருகின்ற கடிதங்களில் சில சிங்கள மொழியிலேயே கிடைக்கின்றன. அரசதலைவர் கூட தனிச்சிங்கள மொழியிலேயே கடிதத்தை அனுப்புகின்றார். அவ்வாறான சந்தர்ப்பத்தில் அவற்றை நாம் மீளவும் அவருக்கு திருப்பி அனுப்புவோம். தமிழில் அல்லது ஆங்கிலத்தில் கடிதத்தை அனுப்புமாறு கோரிவருகின்றேன் - என்று மாகாண கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

வங்கிகளில் கடனைப் பெறும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் படிவங்கள் கூட சிங்களம் அல்லது ஆங்கிலத்தில் கொடுக்கப்படுகின்றன. இதனால் மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் மொழிக் கொள்கையை யார் கையாளுகின்றனர் எனத் தெரியவில்லை. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என சபை உறுப்பினர் ஜெயசேகரம் தெரிவித்தார்.

அரசு கொண்டுவரக்கூடிய பல்வேறு திட்டங்கள், வங்கிகள் அறிமுகப்படுத்தக் கூடிய பல்வேறு வைப்புத் திட்டங்கள் அனைத்தும் தமிழ் மக்களுக்கு அர்த்தம் புரியாத சிங்களப் பெயர்களிலேயே அறிமுகப்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் சிங்களமும், தமிழும் தேசிய மொழிகளாகவும் உத்தியோகபூர்வ மொழிகளாகவும் உள்ளன. எனவே இரண்டுக்கும் சம உரிமை வழங்கப்படுதல் உறுதிசெய்யப்பட வேண்டும். அரசு அறிமுகப்படுத்தக் கூடிய எந்தவொரு திட்டங்களிலும் அதற்குரிய பெயர்கள் தமிழில் கருத்து மாறாமல் செயற்படுத்தப்பட வேண்டும். மேலும் வங்கிகள் அறிமுகப்படுத்துகின்ற வைப்புக் கணக்குகளின் பெயர்கள் மற்றும் பரிசுத் திட்டங்களின் பெயர்களும் அதேகருத்தில் தமிழில் பின்பற்றப்பட வேண்டும்.

எனவே, அரசும், வங்கிகளும் இந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு கொழும்பு அமைச்சரான மனோகணேசன் ஆவனசெய்ய வேண்டும்" என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் பிரேரணையை முன்மொழிந்திருந்தார்.

இந்தப் பிரேரணை வடக்கு மாகாண சபையில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ய-8)

---

## அக்கராயன் கரும்புத்தோட்டக் காணியை முதலமைச்சர் தாரை வார்த்துவிட்டார்

### பசுபதிப்பிள்ளை குற்றச்சாட்டு சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக் 7

அக்கராயன் கரும்புத் தோட்டக்காணியான 210 ஏக்கர் நிலத்தை வடக்கு முதல்வர் முறையற்ற விதத்தில் குத்தகைக்கு விட்டுள்ளார். அதனை அவர் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என வடக்கு மாகாண சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான கவனவீர்ப்பை மாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை நேற்றைய அமர்வில் கொண்டு வந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அக்கராயன் பகுதி கரும்புத் தோட்டக்காணியை முதல்வர் சண்டியர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் தாரை வார்த்துள்ளார். எமது மாகாணத்தின் பலபகுதிகளை தென்னிலங்கை ஆக்கிரமித்துவருகின்றது. இந்தநிலையில் முதல்வரின் இந்த செயற்பாடு எமது மக்களை அதிருப்திக்கு உள்ளாக்கியுள்ளது.

முதலமைச்சர் நிலத்தை வழங்கியமை தொடர்பில் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் - என்றார்.

அக்கராயன் கரும்புத் தோட்டத்தின் 210 ஏக்கர் நிலத்தையும் அந்தப் பகுதியிலேயே வாழும் விவசாயிகளுக்கும், முன்னாள் போராளிகளுக்கும் வழங்கவேண்டும் என்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் அந்தக் காணியை அதன் நீண்டகால குத்தகைதாரரான நிறுவனத்திற்கு வழங்குமாறு முதலமைச்சர் பணித்திருந்தார். (ய-8)

---

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரிப்கான் பதவி துறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.7

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் மாகாணசபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் தனது உறுப்பினர் பதவியைத் துறப்பதாக நேற்று அறிவித்தார்.

தமது கட்சியின் மூத்த உறுப்பினர் அலிகான் ஷரீபுக்கு பதவியை விட்டுக்கொடுக்கும் நோக்கிலேயே பதவியை விட்டுவிலகத் தயாராக உள்ளார் என்றும், இந்த விடயத்தில் தாம் ஒரு முன்மாதிரியாகச் செயற்பட விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சபையின் 107ஆவது அமர்வு அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 30 வருடகால போரால் ஏற்பட்ட துயரங்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை. இந்தப் போராட்டங்களின் விளைவினாலும் பிரதிபலிப்பினாலும் இந்த வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டில் முஸ்லிம்களின் வெளியேற்றமானது இன்னும் மறக்க முடியாத நிகழ்வாக இருக்கின்றது. இரண்டு தசாப்தத்துக்கு மேலாக சொல்லொணா வேதனைகளிலும் துன்பத்திலும் இந்த மக்கள் வாழ்ந்தனர்.

அமைதி ஏற்பட்ட பின்னர் ஏதிலி மக்கள் தமது பாரம்பரிய பூமிகளில் மீளக்குடியமர்ந்து வாழ்வதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்ட மக்களின் மீள்குடியமர்வுக்கான காணிப் பிரச்சினைக்கு முதலமைச்சரும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இணைந்து தீர்வுகாண வேண்டும்.

இதன்மூலம் வடக்கு மாகாணசபை தனது இன்னொரு சிறுபான்மையின மக்களின் பிரச்சினையை நேர்மையாகத் தீர்த்து வைத்த நற்பெயரைப் பெற்றுக்கொள்ளலாம் - என்றார். (ய-8)

---

## மாகாணசபை உறுப்பினர்களின் சொத்து விவரங்களை சமர்ப்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.7

வவுனியா மாவட்டத்தின் மாகாணசபை உறுப்பினர் அனைவரினதும் சொத்து விவரங்களைக் கோரி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மாவட்டச் செயலகத்துக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்கு தேர்வு செய்யப்பட்ட வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் அனைவரினதும் சொத்து விவரங்கள் 2013ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்பு இருந்த நிலவரத்தையும், இன்றைய நிலவரத்தையும் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதில், மாகாண சபைக்கு தேர்வான சகல கட்சியினரதும் சொத்து விவரங்களும் கோரப்பட்டுள்ளன.

இதேநேரம், வவுனியா மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிய மற்றும் போனஸ் ஆசனங்கள் மூலம் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ய-101)

---

## வடக்கு முதலமைச்சரால் மக்களுக்கு நீதி கிட்டவில்லை!

### எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் குற்றம்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக் 7

"வடக்கு மாகாணத்துக்கு முன்னாள் நீதியரசர் முதலமைச்சராக நியமிக்க ப்பட்டார். அவர் தமது பிரச்சினைகளுக்கு நீதிவழங்குவார் என தமிழ்மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களுக்குக் கிடைத்ததோ வெறுமனே ஏமாற்றமே" இவ்வாறு வடக்கு மாகாண எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் குற்றஞ்சாட்டினார்.

வடக்கு மாகாண சபையின் 107 ஆவது அமர்வு நேற்றையதினம் அவைத்தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

அமர்வில் அவைத்தலைவரால் அரசியல்கைதிகள் பிரச்சினை தொடர்பான பிரேரணை கொண்டுவரப்பட்டது. இதுதொடர்பாக கருத்துக்களை முன்வைக்கும் போதே தவநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணசபை மிகப் பெரிய அளவிலே எதிர்பார்ப்புடன் ஆரம்பிக்கப்பட்டது. முன்னாள் நீதியரசர் ஒருவர் முதலமைச்சரானதால் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பும் எதிர்பார்ப்பும் இருந்தது.

வடக்கு முதல்வர் சட்ட நுணுக்கங்கள் தெரிந்தவர். பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அரசியல்கைதிகள் விடயத்திலோ அல்லது தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினையிலோ முதலமைச்சர் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

அரசியல்கைதிகள் பலதடவைகள் போராட்டங்களை மேற்கொண்டனர். ஏராளமான உறுதிமொழிகளைக் கேட்டு மிகவும் சலிப்படைந்துள்ளனர். இப்போது உயிரைத் துறக்கும் வகையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஏனைய போராட்டங்களைப் போல இதில் அக்கறையில்லாமல் இருக்கக்கூடாது. அவர்களின் உயிர்களைக் காப்பாற்றி காத்திரமான தீர்வை வழங்க மாகாணசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ய-8)

---

## தாமதமாக வந்து கருத்துக் கூறிய அனந்தி மீது சி.வி.கே. பாய்ச்சல்

யாழ்ப்பாணம், ஒக் .7

வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன் நேற்றுச் சபைக்குத் தாமதமாகவந்து கருத்துக்கூற முற்பட்டதால் அவைத்தலைவர் அவருக்கு எச்சரித்தார். சபை அமர்வுகள் ஆரம்பிக்கும்போது அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் இருக்கவேண்டும் என்பது கட்டாயம் என்று அவைத்தலைவர் வலியுறுத்திக் கூறினார்.

மாகாணசபையின் 107ஆவது அமர்வு அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்த அமர்வின் ஆரம்பத்தில் அவைத் தலைவரால் அரசியல் கைதிகள் தொடர்பான பிரேரணை கொண்டுவரப்பட்டது. உறுப்பினர்கள் அதுதொடர்பில் கருத்துகளை முன்வைத்துக் கொண்டிருந்தனர். கருத்துகளைக் கேட்டறிந்த பின்னர் பிரேரணை ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது. அரச தலைவருக்கு அது மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைப்பதாக முடிவெடுக்கப்பட்டது. அவ்வேளை சபைக்குள் நுழைந்தார் வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன். அவர் சடுதியாக எழுந்து கருத்துகளைப் பதிவிட முயன்றார். அப்போது அவைத்தலைவர்,

"பிரேரணை தொடர்பான கருத்துகள் உள்வாங்கப்பட்டு அந்த விடயம் முடிவுறுத்தப்பட்டுவிட்டது. நீங்கள் இனி கருத்துத் தெரிவிக்கமுடியாது. சபை ஆரம்பிக்கப்பட்டு இவ்வளவு நேரம் கழித்துவந்துள்ளீர்கள். நீங்கள் நினைத்தவாறு கருத்துகளைக் கூறமுடியாது" - எனக் காட்டமாகத் தெரிவித்தார்.

இதனால் சபையில் சிறிது நேரம் இருவருக்கும் இடையில் சூடான விவாதம் இடம்பெற்றது.

"நான் சபைக்கு வெளியே தொண்டர் ஆசிரியர்களை சந்தித்தமையாலேயே சபைக்கு பிந்தி வந்தேன்" என அனந்தி தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பேசிய அவைத்தலைவர், "தொண்டர் ஆசிரியர்கள் பிரச்சினை சம்பந்தமாக கதைக்க கல்வி அமைச்சர் இருக்கின்றார். நீங்கள் உங்கள் கடமைகளைவிட்டு வேறு தேவையில்லாத விடயத்துக்குச் சென்றுவிட்டு இங்குவந்து சாக்குப்போக்குச் சொல்லாதீர்கள்" எனத் தெரிவித்தார். (ய-8)

# தேர்தலில் போட்டியிட முடிவு செய்யவில்லை

## புடின் தெரிவிப்பு

மொஸ்கோ, ஒக். 7
"அடுத்தாண்டு நடைபெறவுள்ள ரஷ்ய அதிபர் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை" என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்தார்.
ரஷ்ய அதிபராக இருந்துவரும் புடின், அடுத்த வருடம் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலிலும் போட்டியிடுவார் என்று தொடர்ச்சியாகத் தகவல்கள் வெளிவந்த நிலையில், அவற்றை புடின் மறுத்துள்ளார்.
"இது தொடர்பில் இன்னும் முடிவு செய்யவில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார். புடின் அடுத்த வருடம் நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடமாட்டார் என்றும் அறிவிக்கப்படவில்லை. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் வெளியிடப்படும் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)





ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து

# நூறு சதவீதம் மீண்டது ஈராக்

பக்தாத், ஒக். 7
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து நூறு சதவீதம் விடுபட்டுள்ளது ஈராக்.
ஈராக், சிரிய நாடுகளின் சில நகர்களைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனி நாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்த ஈராக்கின் முக்கிய நகரங்கள் இந்த வருடத்தின் மத்திய பகுதியில் மீட்கப்பட்டிருந்தன. ஈராக்கின் ஹவியா நகரம் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்தது. இந்த நகரை மீட்கும் போர் நடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் கடும் முனைப்புடன் ஆரம்பித்தது ஈராக்.
இந்நிலையில் ஹவியா நேற்றுமுன்தினம் முற்றுமுழுதுமாக ஈராக் படையின் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. ஹவியா மீட்கப்பட்டதை அடுத்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் முழுவதுமாக விடுபட்டுள்ளது.

### சிரியாவுக்கு உதவுமா ஈராக் அரச படைகள்

தமது நாட்டில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் விரட்டப்படுவதுடன் தாம் நின்றுவிடப் போவதில்லை. ஈராக்கில் இருந்து உயிருடன் தப்பிக்கும் ஆயுததாரிகள் சிரியா வுக்குள்ளேயே செல்ல முடியும்.
எனவே சிரியாவுக்குள் புகுந்தும் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளைக் கொல்லுவோம் என்று ஈராக் ஏற்கனவே அறிவித்திருந்தது.
இதனால் ஈராக், தனது எல்லையைப் பலப்படுத்துவதுடன் நின்றுவிடப்போகிறதா அல்லது சிரியாவுக்குள்ளும் உட்சென்று தாக்குதல் நடத்துமா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. (ம)



# தலைமை நீதிபதியை நீக்குகிறது பிலிப்பைன்ஸ்



மணிலா, ஒக். 7
பிலிப்பைன்ஸ் நாட்டின் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி மரியா லூர்து செரீனோ மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதால் அவரை தகுதி நீக்கம் செய்யும் நடவடிக்கைக்கு அந்த நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.
பிலிப்பைன்ஸ் நாடாளுமன்றத்தின் முடிவுக்குக் கட்டுப்பட்டு, தலைமை நீதிபதியை பதவி நீக்கம் செய்யும் நடவடிக்கைக்கு, பிலிப்பைன்ஸ் அதிபர் டுடேர்தே ஆதரவு தெரிவித்தார். எனினும், தன் மீதான குற்றச்சாட்டுக்களை செரீனோ மறுத்துள்ளார். (ம)

# தனிநாடாகச் செல்வது தொடர்பில் காட்டலோனியா நாளைமறுதினம் அறிவிப்ப



மட்ரிட், ஒக். 7
ஸ்பெய்னிடம் இருந்து பிரிந்து தனிநாடாகச் செல்வது தொடர்பில், காட்டலோனியாவின் இறுதி அறிவிப்பு நாளை மறுதினம் திங்கட்கிழமை வெளிவரவுள்ளது.
ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஸ்பெய்ன் மிகவும் செல்வச் செழிப்பான நாடாக உள்ளது. இந்த நாட்டின் முக்கிய மாநிலங்களில் ஒன்றுதான் காட்டலோனியா.
ஸ்பெய்னின் வருவாய் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் காட்டலோனியாவின் பங்களிப்பு அதிகம். இதனால் அந்த மாநில மக்கள் காட்டலோனியா வைத் தனிநாடாக அங்கீகரிக்க வேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றனர்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் சுமார் 90 வீதமான வாக்குகள் காட்டலோனியா பிரிந்து செல்வதற்கு ஆதரவாகப் பதிவா கின.
இந்த நிலையில் பிரிந்து செல்வதா இல்லையா என்பது தொடர்பிலான இறுதி அறிவிப்பை நாளைமறுதினம் திங்கட்கிழமை வெளியிடுகிறது காட்ட லோனியா. (ம)



# பரோலில் வந்தார் சசிகலா

பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலாவுக்கு 'பரோல்' வழங்கப்பட்டதை அடுத்து, அவர் நேற்று வெளியே வந்தார்.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா. சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றவாளி என்று அடையாளம் காணப்பட்டு பெங்களூரிலுள்ள பரப்பன அக்ரஹாரா மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவரது கணவர் நடராஜன் உடல்நிலை பாதிக்கப்பட்டு சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதையடுத்து சசிகலா தனது கணவரை சந்திக்கச் செல்வதற்கு 15 நாள்கள் 'பரோல்' கேட்டு விண்ணப்பித்திருந்தார்.



சசிகலாவுக்குப் 'பரோல்' வழங்குவது தொடர்பில் கடந்த மூன்று தினங்களாக பரிசீலிக்கப்பட்டு வந்த நிலையில், அவருக்கு நேற்று அனுமதி கிடைத்தது. எனினும், 15 நாள்களுக்கு அல்லாமல் 5 நாள்களுக்கே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சசிகலா பரோலில் வருவது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, தினகரன் பெங்களூர் சிறைக்குச் சென்று அவரை அழைத்துச் சென்றார். (ம)



போர்த்துக்கலில் உள்ள சொ்டா நகரில் மிகப்பெரும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. ஏராளமான மரங்கள், வீடுகள் எரிந்து சாம்பராகியுள்ளன. நூற்றுக் கணக்கான வனவிலங்குகளும் காட்டுத் தீயில் சிக்கி மடிந்துள்ளன என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிடப்பட்டது. (ம)

# பிரிட்டனின் இசிகுரோவுக்கு இலக்கியத்துக்கான நோபல்



லண்டன், ஒக். 7

உலகின் உயர்ந்த விருதான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டு வருகிறது. இதில் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பிரிட்டனின் கசுவோ இசிகுரோவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இயற்பியல், மருத்துவம், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் உள்ளிட்ட துறைகளில் மகத்தான சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு, அறிவிக்கப்பட்டு வருகிறது. இதுவரை மருத்துவம், இயற்பியல் மற்றும் வேதியலுக்கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இலக்கியத்துக்கான நோபல் பரிசு நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. பிரட்டனைச் சேர்ந்த எழுத்தாளரான கசுவோ இசிகுரோவுக்கு இந்தப் பரிசு அறிவிக்கப்பட்டது.

# தலாய் லாமாவின் அரண்மனையினை சீரமைக்கிறது சீனா



பீஜிங், ஒக். 7

திபெத்தில் உள்ள தலாய் லாமாவின் பழைய அரண்மனையை சீன அரசு சீரமைக்க உள்ளதாக அந்த நாட்டு அரசு செய்தி நிறுவனம் தெரிவித்தது.

திபெத் தன்னாட்சிப் பகுதியிலுள்ள பொட்டலா அரண்மனை, 1959ஆம் ஆண்டு வரையில் தலாய் லாமாவின் வசிப்பிடமாக இருந்தது. இப்போது இது நூதன காட்சிச்சாலையாகவும் உலகப் பாரம்பரியச் சின்னமாகவும் உள்ளது. அரண்மனை 3 ஆயிரத்து 700 மீற்றர் உயரத்தில், லகாசா பள்ளத்தாக்கின் மத்தியில் சிவப்பு மலையின் பக்கத்தில் கட்டப்பட்டுள்ளது.

**1959ஆம் ஆண்டு திபத்திய புரட்சிக் காலத்தில் இந்த அரண்மனை சேதப்படுத்தப்பட்டது. கடந்த 1994 ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பு இந்த அரண்மனையை உலகப் பாரம்பரியத் தளமாக அறிவித்தது.**

1959ஆம் ஆண்டு திபத்திய புரட்சிக் காலத்தில் இந்த அரண்மனை சேதப்படுத்தப்பட்டது. கடந்த 1994ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பு இந்த அரண்மனையை உலக பாரம்பரிய தளமாக அறிவித்தது. அதன்பின்னர் இந்த அரண்மனை அதிக அளவிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருகிறது.

சென்ற ஆண்டு சுமார் 13 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இந்த அரண்மனைக்குச் சுற்றுலா வந்துள்ளனர். இந்த நிலையில், சேதமடைந்த அந்த அரண்மனைப்பகுதிகளை சரிசெய்ய சீன அரசு முடிவெடுத்துள்ளது. அதற்காக இலங்கை மதிப்பில் சுமார் 25 கோடி ரூபா செலவிட இருப்பதாக சீன அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ம)

# ரஷ்யச் சிப்பாய்கள் வலைத்தளங்கள் பயன்படுத்த வந்தது தடை

மொஸ்கோ, ஒக். 7

பாதுகாப்பு உள்ளிட்ட காரணங்களுக்காக ரஷ்ய இராணுவச் சிப்பாய்கள் மற்றும் அதிகாரிகள் சமூக வலைதளங்களைப் பயன்படுத்தத் தடை விதிக்கும் வகையில் புதிய சட்டத்தை ரஷ்யா அறிமுகப்படுத்தியுள்ளது. இராணுவச் சிப்பாய்கள் இணையத்தளங்களில் பதிவேற்றும் ஒளிப்படங்கள், காணொலிகள் மற்றும் இதர அம்சங்கள் எதிரிக்கு விவரங்களை அளிக்கக்கூடும். முக்கியமாக இராணுவச் சிப்பாய்கள் ஓரிடத்தில் இருந்து கொண்டு பதிவுகள் இடும்போது, அது எங்கிருந்து பதிவிடப்பட்டது என்பதை மற்றவர்கள் எளிதாக அறிந்து கொள்ளமுடியும் என்று குறிப்பிட்டே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# முல்லைத்தீவை மீட்டெடுப்போம் வாரீர்!

வடக்கு மாகாணம் எந்தளவு தூரத்துக்கு இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளது என்கிற அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டம் இந்த இராணுவமயப்படுத்தலால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கு இரு பொதுமக்களுக்கு ஓர் சிப்பாய் என்கிற நிலையில் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். இது உலகில் எங்குமே நடைபெற்றிருக்காத அதிர்ச்சியூட்டும் படைக்குவிப்பு.

நல்லாட்சி, நல்லிணக்கம் என்று கூறிக்கொண்டு ஆட்சிக்குவந்த மைத்திரி ரணில் அரசும்கூட வடக்கில் இருந்து படைப் பரம்பலைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காதமை கண்டனதுக்கும் விசனத்துக்கும் உரியது.

யாழ்ப்பாணத்தைத்தலைமையகமாகக் கொண்ட அடையாளம் என்கிற கொள்கை ஆய்வு நிலையமும் அமெரிக்கத் தலைநகரமான வோஷிங்ரனைத் தலைமையமாகக் கொண்டு இயங்கும் 'பேர்ள்' எனப்படும்தமிழர் ஆலோசனைக் குழுவும் இணைந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினரின் பரம்பல் மற்றும் அதனால் ஏற்படுகின்ற பாதிப்பு என்பவை குறித்து ஆய்வு செய்துள்ளன. அதன் அறிக்கை இந்த மாத ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் 2 லட்சத்து 43 ஆயிரம் தரைப் படையினர் இயங்கு நிலையில் உள்ளனர், அவர்களில் 60 ஆயிரம் பேருக்குக் குறையாதவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே உள்ளனர் என்கிறது இந்த ஆய்வு அறிக்கை. அதாவது இலங்கையின் மொத்தப் படையினரில் 25 சதவீதத்தினர், மொத்தச் சனத்தொகையில் வெறும் 0.6 சதவீதமான மக்கள் வாழும் பகுதியில் நிலைகொண்டுள்ளனர். இது உலகில் எங்குமே ஏற்றுக்கொள்ளப்பட முடியாத இராணுவமயமாக்கல்.

இலங்கை இராணுவத்தின் அளவுக்கு மீறிய இந்தப் பரம்பலால் முல்லைத்தீவு மாவட்டம் பல வழிகளிலும் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றது என்பதும் ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மாவட்டத்தின் சுற்றுலாத்துறை, மக்களின் நிலம், கலாசாரம், வர்த்தகம், வாழ்வாதாரம் என்ற பல துறைகளிலும் படைகளின் தாக்கம் உள்ளது என்பதையும் ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது.

மாவட்டத்தில் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலப் பகுதி குறித்து பல தரப்பட்ட தகவல்கள் உள்ளன என்பதையும் ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளதுடன், குறைந்தது 25 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலப் பகுதி படைகளின் வசம் உள்ளது என்பதையும் புள்ளிவிவரங்களுடன் வெளியிட்டுள்ளது. வடக்கில் உள்ள எந்தவொரு மாவட்டத்துடன் ஒப்பிடும்போதும் அதிகளவான நிலப் பகுதியை இலங்கைப் படைகள் பிடித்து வைத்திருப்பதும் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே என்பது தெளிவாகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, முல்லைத்தீவு முதல் கொக்கிளாய் வரையான கரையோரப் பகுதிகளில் எண்ணற்ற படை முகாம்கள் நிறுவப்பட்டுள்ளமையை ஆய்வின் வரைபடங்கள் காண்பிக்கின்றன. இவை மற்றொரு அச்சத்தையும் தோற்றுவிக்கத் தவறவில்லை.

தமிழர்களின் தாயகமான வடக்கு கிழக்குப் பகுதியைத் துண்டாடும் நோக்கத்துடன் ஏற்கனவே மணலாறுப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், முல்லைத்தீவு முதல் கொக்கிளாய் வரையான கரையோரங்கள் படை முகாம்களால் நிரப்பப்பட்டிருப்பது அந்தக் குடியேற்றங்களின் நீட்சிக்கான முன்னறிவிப்போ என்கிற அச்சமே அது.

கொக்கிளாயில் ஏற்கனவே சிங்கள மீனவர்கள் நிரந்தரமாகக் குடியேறுவதற்கான ஏற்பாடுகள் மும்முரப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், கரையோரம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டிருக்கும் படைகளின் நோக்கத்தை அவ்வளவு இலகுவாக ஒதுக்கிவிட முடியாது.


முல்லைத்தீவு மாவட்டம் புலிகளின் கோட்டையாக இருந்தது என்பதற்காக அங்கு படைகளை அதிகளவில் வைத்திருப்பதாகச் சொல்லிக்கொண்டு தப்பிக்க அரசு முயன்றால், அது தமிழர்களை ஏமாற்றும் செயலே. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அனைத்து அரசியல் கட்சிகளும் இது விடயத்தில் தமது முழுமையான கவனத்தைச் செலுத்தி இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தை மீட்க முன்வரவேண்டும்.

# சிறுபான்மையின மக்கள் இணைந்து போராடுவதற்கான காலம் கனியுமா?

சேரலாதன்

இலங்கையின் சிறுபான்மையின மக்கள் தமக்குள் ஒற்றுமையைப் பேணாது வெவ்வேறான பாதைகளில் பயணிப்பதால் இனப்பிரச்சினைக்கான தீர்வு இழுபறியாகிச்செல்கிறது. சிறுபான்மையின மக்கள் எனக் குறிப்பிடும்போது அதில் நாட்டில் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்ற தமிழர்கள், இந்தியாவிலிருந்து வந்து குடியமர்ந்த இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

பூர்வீகத் தமிழர்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பரந்து வாழ்கின்றனர். வடக்கு மாகாணத்தில் இவர்கள் பெரும்பான்மையினர். கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட வகையில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள் தமிழர்களின் இன விகிதாசாரத்தைப் பின்தள்ளி விட்டன. ஆனால் ஒட்டு மொத்த வடக்கு, கிழக்கு ரீதியில் தமிழர்கள் தான் பெரும்பான்மையினராக காணப்படுகின்றனர்.



### அரசுடன் மோதிக் கொள்வோரில் ஈழத் தமிழர்களே முக்கியமானவர்கள்

இனப்பிரச்சனை தொடர்பாக அரசுடன் முட்டி மோதிக் கொள்பவர்கள் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழர்கள் தான். இவர்கள் இந்த நாட்டின் இரண்டாவது பெரிய இனத்தவர்கள். தமக்கென தனியான கலாசாரம், பண்பாடு, நாகரீகம், ஆகியவற்றைக் கொண்டிருப்பவர்கள். மொழிக்கான போராட்டங்களில் ஈடுபட்டுப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டவர்களும் இவர்கள்தான். ஆரம்பத்தில் அகிம்சை வழியில் போராடிய இவர்கள், அது வெற்றி அளிக்காததால் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். இன உரிமைக்கான நீண்ட ஆயுதப் போராட்டம், பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு பன்னாடுகளது உதவியுடன் மௌனிக்கப்பட்டது.

இந்த மக்கள் மேற்கொண்ட போராட்டங்களுக்கு முஸ்லிம் மக்களோ அல்லது மலையகத்தில் வாழ்கின்ற இந்திய வம்சாவளித் தமிழ் மக்களோ தமது ஆதரவை வழங்கவில்லை. தமிழர்கள்தனித்துநின்றுதான் போராடினார்கள்.

சிங்கள இனவாதிகளால் முஸ்லிம் மக்களும் இனரீதியான நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். அவர்களது வணக்க ஸ்தலங்கள் கூட இனவாதிகளால் அழிக் கப்பட்டன. முஸ்லிம் மக்களின் வர்த்தக நடவடிக்கைகள் முடக்கப்பட்டன. ஆனால் இதற்கெல்லாம் இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. ஆனால் இனவாதிகளின் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்றே வருகின்றன. மியன்மாரில் இருந்து இடம்பெயர்ந்து இலங்கையில் தஞ்சமடைந்த ரொஹிங்ய முஸ்லிம் அகதிகள் தங்கியிருந்த இடத்தைச் சுற்றி வளைத்த பௌத்த பிக்குகள் அடங்கிய இனவாதக் குழு ஒன்று அவர்களைத் தாக்கவும் முயற்சி செய்துள்ளது. இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயலுக்குக் காரணமானவர்கள் சுதந்திரமாக உலாவுகின்றனர். அரசு அகதிகளைக் காப்பாற்றுவதற்கு தவறி விட்டது. இதனால் கண்டனங்களுக்கு ஆளாகியுள்ளது.

### முஸ்லிம் தலைவர் அஸ்ரப்புக்குப் பின்னர் முஸ்லிம்கடையே பிளவு

முஸ்லிம் மக்களின் தனித்துவத்தைப் பேணுவதற்கென மறைந்த முஸ்லிம் தலைவர் அஸ்ரப்பினால் உருவாக்கப்பட்ட அரசியல் கட்சிதான் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இதற்குக் கிழக்கு மாகாணத்தில் அதிக செல்வாக்குக் காணப்பட்டது. ஆனால் அஸ்ரப்பின் மறைவுக்குப் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ். பல துண்டுகளாக உடைந்து காணப்படுகின்றது.

மலையகத்தில் வசிக்கின்ற இந்திய வம்சாவழித் தமிழர்கள் மலையகத் தோட்டங்களில் தொழில் புரிவதால் அங்கேயே வாழவேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு. நாட்டில் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் இடம்பெறும் போதெல்லாம், இந்த இந்திய வம்சாவழித் தமிழர்களும் பா திப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தேயிலைத் தோட்டங்களில் கூலிகளாக வேலை செய்ய இந்தியாவின் தமிழ் நாட்டில் இருந்து அழைத்து வரப்பட்ட இவர்கள், தேயிலைத் தோட்டங்களில் கடுமையாகப் பாடுபட்டு உழைத்திருக்கின்றார்கள். பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள இவர்கள் தமது அன்றாடத் தேவைகள் தொடர்பாகவே சிந்திக்க முடிகின்றது. தமது உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு இவர்களிடம் மிகக் குறைவு.

> இனவாத பௌத்த பிக்குகள் தம்மை அரசினால் கூடக் கட்டுப்படுத்த முடியாதெனக் கூறுகின்றனர். பொதுபல சேனாவின் பொதுச் செயலாளரான ஞானசாரதேரர் எவருக்குமே அடங்காதவராக மாறிவிட்டார்.

### சிறுபான்மை அரசியல் தரப்புக்கள் ஒருபோதும் ஒன்றிணைந்து செயற்பட்டதில்லை

இந்த மூன்று முக்கியமான சிறுபான்மை இனத்தவர்களின் தலைவர்கள் ஒன்றிணைந்து தாம் சார்ந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அக்கறை காட்டிச் செயற் பட்டதில்லை. மலையகத்தின் முக்கிய தலைவராக விளங்கிய தொண்டமான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவராக குறுகிய காலம் இருந்திருப்பினும், மலையக மக்களுக்கும் ஏனைய தமிழ் மக்களுக்குமிடையே பிணைப்பு ஏற்பட்டுவிடவில்லை.

நாட்டில் நாளுக்கு நாள் இனவாதிகளின் அத்துமீறிய செயற்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றன.

இனவாத பௌத்த பிக்குகள் தம்மை அரசினால் கூடக் கட்டுப்படுத்த முடியாதெனக் கூறுகின்றனர். பொதுபல சேனாவின் பொதுச் செயலாளரான ஞானசாரதேரர் எவருக்குமே அடங்காதவராக மாறிவிட்டார். பௌத்த துறவிகளுக்கு சிங்கள மக்கள் மத்தியில் அதிக மதிப்பும் செல்வாக்கும் இருந்து வருகின்றது.

இந்த நிலையில் மூவின மக்களும் தங்களுக்கு இடையிலான வேற்றுமைகளை மறந்து தமது உரிமைக் கான குரலை ஒன்றாக ஒலிக்கச் செய்ய வேண்டும். அது இனவாதிகளது மனங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.



# போதையில் இருந்து விடுபட வாய்ப்பு

ந.லோகதயாளன்

வட மாகாணமே போதைக்கு அடிமையான மாகாணமாக ஆக்கப்படுமா? என்ற அச்சம் மனதில் எழும் இன்றைய நிலையில், அதிலிருந்து எம்மவர்களை மீட்கவேண்டிய பொறுப்புணர்ந்து வடமாகாணசபைமேற்கொண்டதொரு முயற்சி போதைக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வு சிகிச்சை மையத்தை நிறுவுதலாகும். இதனை முன்னுதாரணமாகக் கொண்டு வடக்கின் சகல மாவட்டங்களிலும் அத்தகைய சிகிச்சை மையங்களை நிறுவுவதற்கு மீள்குடியேற்ற அமைச்சு முன் வந்துள்ளமை ஒரு முன்னேற்றகரமான திட்டமாகக் காணப்படுகின்றது.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் இவ்வாறு அமைக்கப்பட்ட போதைக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வு சிகிச்சை மையம்கடந்தஓகஸ்ட்மாதம்31ஆம்திகதியன்று உத்தியோகபூர்வமாக முன்னாள் வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தினால்திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிலையமானது முன்னாள் வட மாகாண சுகாதார அமைச்சரின் கோரிக்கையின் பெயரில் கனடாவில் வாழும் அன்பர்களின் நிதிப் பங்களிப்பில் சுமார் 20 மில்லியன் ரூபா செலவில், 2015ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அது ஒரு மாதிரிச் சிகிச்சை மையமாக இயங்கி வந்திருந்த நிலையில், தற்போதுதான் அது உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**மாதிரிச் சிகிச்சை மையத்தின் சாதனை**

குறித்த புனர்வாழ்வு மையத்தில் மாதிரிச் செயல்பாட்டுக் காலத்தில் சுமார் 290பேர் புனர்வாழ்வு பெற்று வெளியேறியுள்ள நிலையில் குறித்த புனர்வாழ்வுநிலையம் ஒன்று கிளிநொச்சியில் அமைக்கப்பட வேண்டும் என கடுமையாக உழைத்த மருத்துவக் கலாநிதி கணேசன் இது தொடர்பில் விபரம் தெரிவிக்கையில்;

போருக்குப் பின்னர் வடக்கில் இளைஞர்களின் தடம்புரள்வுற்கு முக்கிய காரணமாகத் திகழ்வது போதைப் பழக்கமே. அதில் இருந்து எமது இளைஞர் சமூகத்தை மீட்க வேண்டிய பொறுப்பு எம்மவர்க்கு உண்டு. அதனால் இதுதொடர்பில் மருத்துவர் ஜெயராசா மற்றும் கனடாவில் வாழும் விரிவுரையாளரான அருண் ரவீந்திரன் ஆகியோர் கூடி ஆராய்ந்தோம். அந்தவேளையிலேயே இது விடயத்தில் அவ்வேளைய வட மாகாண சுகாதார அமைச்சரின் உதவியையும் நாடினோம். அந்தவகையிலே குறித்த சிகிச்சை மையம் செயற்பட்ட இரண்டு ஆண்டுகள் காலத்தில் மொத்தமாக 290பேர் இங்கு தங்கிப் புனர்வாழ்வு பெற்று வெளியேறியுள்ளனர்.

**சிகிச்சை மையத்தின் செயற்பாடுகள்**

குறித்த கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்கான செலவுக்கு, முன்னாள் வட மாகாண சுகாதார அமைச்சர் ஊடாக, கனடா வாழ் மருத்துவர்கள், பொதுமக்கள் ஆகியோரிடம் இருந்தே முழுப் பணமும் அன்பளிப்பாகக் கிடைத்தது. அந்தப் பணமானது எமது நாட்டுப் பெறுமதியில் 13 மில்லியனுக்கும் அதிகமாகும். இன்று இங்கே வைத்தியர்களுடன் இரண்டாம் நிலை ஊழியர்களாக நன்கு பயிற்றப்பட்ட ஊழியர்கள் 6 பேர் உள்ளனர். இந்தப் புனர்வாழ்வு சிகிச்சை நிலையத்தின் வெற்றியே இந்த ஊழியர்களின் கையில்தான் தங்கி உள்ளது. ஏனெனில் சிகிச்சை நிலையத்தில் மருத்துவர்களைவிட இந்த இரண்டாம் நிலை ஊழியர்களின் பங்களிப்பே அதிகமாகத் தேவைப்படுகிறது.

இலங்கையில் இன்று இது போன்ற மூன்று புனர்வாழ்வு சிகிச்சை நிலையங்கள் இயங்குகின்றன. இதேநேரம் இதுவரை தர்மபுரத்தில் 290 பேர் புனர்வாழ்வுச் சிகிச்சை பெற்று போதையில் இருந்து மீண்டிருந்தாலும், அவர்கள் ஒரே மாவட்டத்தை சேர்ந்தவர்கள் அல்ல. வடக்கின் பல பாகங்களில் இருந்து மட்டுமன்றி, தெற்கைச்சேர்ந்த சிலரும் இங்கு சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

குறித்த புனர்வாழ்வு சிகிச்சை நிலையத்தில் ஒரேவேளையில் சுமார் 20பேர் தங்கிச் சிகிச்சைபெறும் வாய்ப்புக்கள் உள்ளதோடு, இங்கே புனர்வாழ்வு பெற்று போதையில் இருந்து விடுபடுவதற்கு உச்சபட்சமாக 15 தினங்கள் தங்கிச் சிகிச்சை பெறுவதே போதுமானது எனவும் தெரிவித்தார்.

**வடக்கின் முன்னாள் சுகாதார அமைச்சரது கருத்து**

இதேநேரம் இந்தப் புனர்வாழ்வு சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்படுவதற்கு பெரிதும் முன்னின்று செயற்பட்டவர்களில் ஒருவரான வடமாகாணத்தின் முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்திடம் இது தொடர்பில் கேட்டபோது:

மருத்துவர்களின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுக்கவேண்டியது அமைச்சர்களின் கடமை என்ற வகையில் நான் குறித்த பதவியில் இருந்த சமயம் கனடாவில் வசிக்கும் மருத்துவ நண்பர்கள் மற்றும் ஏனைய மருத்துவர்கள் விரிவுரையாளர் அருண் ரவீந்திரன் ஆகியோரின் ஒத்துழைப்புடன் முதலில் பரீட்சார்த்த முயற்சியாக ஆரம்பித்து, பின்னர், முழுமையான பங்களிப்பில் இன்று ஒரு நாட்டின் புலம்பெயர் உறவுகளின் முயற்சியால் ஒரு மருத்துவமனை நிமிர்ந்து நிற்கின்றது. மனதுவைத்து முயன்றால் புலம்பெயர் உறவுகளினால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு இதுவோர் உதாரணம்.

இதேவேளை, இந்தப் புனர்வாழ்வு சிகிச்சை மையத்தில் தங்கிச் சிகிச்சை பெற்று வெளியேறிய கிளிநொச்சி மாவட்டம், புன்னைநீராவியை சேர்ந்த இந்திரதாஸ் என்பவர் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) சிகிச்சை குறித்த தமது அனுபவம் தொடர்பில் தெரிவிக்கையில்;

1980ஆம் ஆண்டு பிறந்த நான், 1999ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்தேன். போர்க்களத்தில் 3 தடவைகள் காயமடைந்து அதன் காரணமாக ஏற்பட்ட சோர்வின் காரணமாக 2004ஆம் ஆண்டில் அமைப்பில் இருந்து விலகி 2005ஆம் ஆண்டு திருமணம் செய்திருந்தேன்.


இரு பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ்ந்த நேரம், இறுதிப் போரின்போது 2009 ஆம் ஆண்டுஏப்ரல்மாதம்11ஆம்திகதியன்று மாத்தளன் பகுதியில் கப்பல் துறையில் இடம்பெற்ற செல் தாக்குதலில் எனது மனைவி, ஒரு பிள்ளை மற்றும் எனது தாயார் ஆகியோர் அந்த இடந்திலேயே கொல்லப்பட்டனர். ஒரு மகனும் நானும் மட்டுமே எஞ்சினோம்.

இதன் பின்னர் செட்டிகுளம் முகாமில் தங்கி, மீள்குடியேற்றத்தின் பின்னர், கஷ்டப்பட்டு உழைத்தும் எனது பிள்ளைக்கும் எனக்கும் போதிய உணவோ பராமரிப்போ கிடைக்கவில்லை. இதனால் எனது மகன் 5 வயதில் எனது வீட்டிலும் பேர்த்தியார் வீட்டிலுமாக மாறி மாறி வசிக்க நேர்ந்தது. பேர்த்தியார் வீட்டில் இருந்தும் போதிய ஒத்துழைப்பு கிட்டவில்லை. இதனால் 2011ஆம் ஆண்டில் மெல்ல மெல்ல மது அருந்த ஆரம்பித்தேன். 2013ஆம் ஆண்டில் அதிலிருந்து மீள இயலாத நிலைக்கு ஆளானேன். இதனால் நானும் தொழில் இழந்தேன். அப்போது எனது பிள்ளையைப் பாடசாலையில் இணைத்திருந்தேன்.

எனது மகனை பாடசாலைக்கு ஏற்றி இறக்குவதும் நானே. இவ்வாறு செயற்பட்டு வந்த சந்தர்ப்பத்தில் 2014 ஆம் ஆண்டில் அவனது தரம் 3 பரீட்சை வேளையில் முதல்நாள் அளவுக்கு அதிகமாக மது அருந்தியகாரணத்தால்மறுநாள்மகனை பரீட்சை எழுதப் பாடசாலைக்குக் கூட்டிச் செல்ல என்னால் இயலாதுபோய்விட்டது. பாடசாலை அதிபர் என்னை அழைத்து ஏசினார். இதனால் மது அருந்துவதைக் குறைக்கமுயற்சித்தேன். முடியவில்லை. அதன் பின்பே கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்றநேரம், குறித்த புனர்வாழ்வு சிகிச்சைமையத்தைப்பற்றியும் தெரிவித்தனர்.

அதன்பிரகாரம் 2015 ஆம் ஆண்டு அங்கு சென்று சிகிச்சை பெற்றேன். அது ஒரு சிகிச்சை மையம் என்பதை விட, எம் போன்றோரை அரவணைத்து ஆறுதலளிக்கும் நிலையம் என்று கூற முடியும். அதன் பின்னர் குடிப்பழக்கத்தை முற்றாக மறந்து நானும் எனது மகனும் என வாழ்ந்து வந்தேன். இதன் பிரகாரம் 2016ஆம் ஆண்டில் மீண்டும் திருமணம் செய்து எனது மூத்த பிள்ளையுடன் தற்போது நாள் ஒன்றுக்கு சராசரியாக ஆயிரம் ரூபா முதல் 1500 ரூபா வரையில் உழைத்து வாழ்கின்றேன் என்று தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி அதிலிருந்து மீள இயலாது சிரமப்படுவோருக்கு இந்தச் சிகிச்சை மையம் ஒரு வரப்பிரசாதம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.



## ஆசிரியருக்கான கடிதம்

### பானைக்குள் இருப்பதுதான் அகப்பைக்குள் வரும்

'பானைக்குள் இருப்பதுதான் அகப்பைக்குள் வரும்' என்றொரு முதுமொழி தமிழில் வழக்கில் உள்ளது. புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான இடைக்கால அறிக்கை வெளிவந்ததுதான் வந்தது, அது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் அனல் பறக்கும் வேகத்தில் நாட்டை ஒரு புரட்டுப் புரட்டி வருகின்றன. ஒரு புறத்தில் கூட்டு அரசின் தலைவர்கள் இரண்டு பேருமே நாட்டு மக்கள் மத்தியில் புரிந்துணர்வு, நல்லிணக்கம் ஏற்படுத்த தாம் தலையால் கிடங்கு கிண்ட முயற்சிப்பதாகக் காட்டிக் கொள்கிறார்கள். அதேசமயம் மறுபுறத்தில் பேரினவாதச் சிந்தனையில் மூழ்கிப் போயுள்ள அரசுக்கு எதிரான அணியினர், கூட்டு அரசின் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியைத் தடுத்தே ஆவோமென்ச் சூளுரைத்து நிற்கின்றனர். இத்தனைக்கும் அப்பால், சிங்கள புத்திஜீவிகள் தரப்பென தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் ஒரு தரப்பினரும் கூட, தாம் வகித்து வரும் கௌரவமான உயர் பதவிகளுக்குச் சற்றும் பொருத்தமில்லாத வகையில்,புதிய அரசமைப்பு யோசனைகள் சிங்கள பௌத்த மேலாண்மைக்கு ஆபத்தை ஏற்படுத்தப் போவதாக கூப்பாடு போடத் தலைப்பட்டுள்ளனர். அந்த வகையில் தமிழ் மக்களுக்கெதிராக கடும் இனவாதக் கருத்து நிலைப்பாட்டை,தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வரும் விமல் வீரவன்ச, நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பு யோசனை முன்வைக்கப் படுமானால் அதன் பிரதியைத் தீயிட்டுக் கொளுத்துவோம் எனவும் ஆக்ரோசமாக முரசறைந்துள்ளார். இனவாதத்தையே தமது அரசியல் இருப்புக்கு ஆதார மாகக் கொண்டு செயற்படும் விமல் வீரவன்ச'மற்றும் அவரது தரப்பினர்களிடமிருந்து வேறு எதைத்தான் எதிர்பார்க்க முடியும்? இத்தனைக்கும் புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை தமிழ் மக்களது எதிர்பார்ப்பைத் திருப்திப்படுத்துவதாக அமையவில்லை என்பதே பெரும்பாலான தமிழர் தரப்புக்களது கருத்து. அந்த வகையில், தமிழ் மக்களுக்கு உரித்துடைய உரிமைகளை வழங்கும் வகையில் தயாரிக்கப்படாத, புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை குறித்து எதற்குத்தான் சிங்கள கடுங்கோட்பாளர்கள் தரப்புக்கள் இந்த அளவுக்குக் 'குத்தி முறிகின்றன' என்பது அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

த.அ.ரவி
பருத்தித்துறை.

# ஈ.எஸ்.பிறிண்டேர்சின் புதிய கிளை அலுவலகம் சாவகச்சேரியில்



உதயன் குழுமத்தின் மற்றொரு நிறுவனமான ஈ.எஸ்.பிறிண்டேர்சின் புதிய கிளை அலுவலகம் சாவகச்சேரி நவீனசந்தை கட்டடத் தொகுதியில் நேற்றையதினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. உதயன் குழும நிர்வாக இயக்குநர் திருமதி யசோதை சரவணபவன் புதிய கிளை அலுவலகத்தைத் திறந்து வைத்தார். (ஒ)

## சிறந்த தொழில்நுட்ப சேவை வழங்குநராக அபான்ஸ்

### *நாடு முழுமையுமான சேவை வலையமைப்பை அமைத்துக்கொண்டது*

நவீன உலகத்தின் வாழ்க்கை முறைகளுக்கும்தேவைகளுக்கும் ஈடுகொடுத்து ஒத்திசைவாக்கம் பெறும் வகையில் அபான்ஸ் சேவைப்பிரிவானது உயர் தரத்திலான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சேவை வலையமைப்பினை நாடளாவிய ரீதியில் வாடிக்கையாளர்களுக்கென அறிமுகம் செய்துள்ளதாக அபான்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது 24 மணிநேர சேவையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த வலையமைப்பின் மூலம் வாடிக்கையாளர்கள் தமக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் தொலைபேசி வாயிலாக பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் வாடிக்கையாளர்களுக்கு ஏதேனும் அவசரத்தேவைகள் ஏற்படும் பட்சத்திலே உரிய இலக்கங்களோடு தொடர்பு கொண்டு அபான்ஸ் சேவைப் பிரிவின் தொழில் நுட்பப் பணியாளர் ஒருவரை வரவழைத்து தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

> “வாடிக்கையாளர்கள் தேவையான ஆலோசனைகளையும்,வழிகாட்டல்களையும் பெற முடியும். இவைதவிர இணையத்தளமூடான வாடிக்கையாளர் தொடர்பு சேவை,புதுப்பித்தல் தொடர்பான புதிய விவரங்களை அறிதல்,சேவைக்கான கட்டணத்தை செலுத்துதல்,உற்பத்தியின் மேம்படுத்தல்கள் தொடர்பான தகவல்களை அறிய முடிகிறது

இவைதவிர இணையத்தளமூடான வாடிக்கையாளர் தொடர்பு சேவை,புதுப்பித்தல் தொடர்பான புதிய விவரங்களை அறிதல்,சேவைக்கான கட்டணத்தை செலுத்துதல்,உற்பத்தியின் மேம்படுத்தல்கள் தொடர்பான தகவல்களை அறிதல்,நடமாடும் சேவைகள் மற்றும் துரித சேவைகள் மூலம் சேவைகளையும் தேவைகளையும் விரைவாகவும் துரிதமாகவும் செய்யக்கூடிய வாய்ப்புக்கள் என பலதரப்பட்ட சேவைகளை அபான்ஸ் வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவருகிறது.

மேலும் வாடிக்கையாளருக்கான சகல வசதிகளையும் அதியுயர் சேவைகளையும் வழங்குவதற்கு அபான்ஸ் சேவைப்பிரிவு நாடளாவிய ரீதியிலே 17 சேவை நிலையங்களையும் மற்றும் அங்கீகாரம் கொண்ட 100 சேவை முகவர்களையும் கொண்டுள்ளதாகவும் வாடிக்கையாளர்களுக்குத் தேவையான சகல சேவைகளையும் உயர்தர உதிரிப்பாகங்களை கொண்டு விரைவான,செயற்திறன் மிக்க சேவைகளாக வழங்கி வருவதாகவும் அபான்ஸ் தெரிவித்துள்ளது.

(ஒ)

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மாதிரி அசைவுகளில் அதிக மாற்றங்கள் பதிவு

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது கடந்த மே மாதத்தில் 7.1 வீதத்திலிருந்துடன் ஜூன் மாதத்தில் 6.3 வீதமாகக் ஆக குறை வடைந்துள்ளது என்ற தகவலை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

ஜூன் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே 3.9 வீதமாகவும், 2.4 வீதமாகவும் இருந்ததுடன் 2016 ஆண்டு இதேகாலப்பகுதியில் பணவீக்கத்திற்கான மேற்படி இரு பிரிவுகளில் இருந்தான பங்களிப்புகள் முறையே 3.4 வீதமாகவும், 3.1 வீதமாகவும் பதிவாகியுள்ளன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிட்டு நோக்குகையில் கடந்த ஜூன் மாதத்தில் பதிவாகிய 123.4 என்ற மாற்றமானது மே மாதத்தில் 121.8 ஆக அதிகரித்துள்ளது. குறிப்பாக மே மாதத்துடன் ஒப்பிடுகையில் அதன்பின்பான ஜூன் மாதத்தில் 1.6 சுட்டெண் புள்ளி அல்லது 1.3 சதவீத அதிகரிப்பினை வெளிக்காட்டியுள்ளது.

உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதியானது 1.30 வீதத்தாலும் மற்றும் உணவல்லாப்பொருள்களின் செலவுப் பெறுமதியானது 0.03 வீதத்தாலும் அதிகரித்துள்ள தன்மைகளே இந்த மாதாந்த மாற்றங்களுக்கான காரணங்களாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

தவிர உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்கு காரணம் மரக்கறி, சின்ன வெங்காயம், புதிய மீன், அரிசி, தேங்காய், கருவாடு, வெள்ளைப் பூடு மற்றும் உருளைக்கிழங்கு., ஆகியவற்றின் விலை நிர்ணயங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே எனவும், வாழைப்பழம், பப்பாசி, முட்டை, சீனி மற்றும் அன்னாசி போன்ற உணவுப் பொருள்கள் குறித்து சுட்டெண்ணில் குறைந்த செலவுப் பெறுமதி பதிவாகியுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

## விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் 'தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும்' சான்றிதழ் கற்கை நெறியினை 2017/2018 கல்வியாண்டில் தொடர்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதென யாழ் பிராந்திய நிலையத்தின் உதவிப் பதிவாளர் கி.கந்தவேள் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.கற்கை நெறியை தொடர விரும்புவோர் தங்களுடைய விண்ணப்பங்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்பாக www.ou.ac.lk என்ற இணைத்தள முகவரி ஊடாக சமர்ப்பிக்க முடியும்.

(ஒ)

ශ්‍රී ලංකා විවෘත විශ්ව විද්‍යාලය
The Open University of Sri Lanka

## வேலைவாய்ப்புக்கான நேர்முகத்தேர்வு யாழில்

கார்கில்ஸ் நிறுவன சிறப்பு வர்த்தக வலையமைப்பு நடத்தவுள்ள வேலை வாய்ப்புக்கான நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும் என்ற தகவலை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் க.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர்,

“க.பொ.த சாதாரண தரம்,க.பொ.த உயர்தரம் சித்தியடைந்தோர்,பட்டதாரிகள்,பல்கலைக்கழகத்தில் பட்டக் கற்கை நெறியை தொடர்வோர் மற்றும் மருந்தாளர்கள் என தற்போது தொழில் வாய்பற்றிருக்கும் அனைத்து இளைஞர் யுவதிகளும் இந்த நேர்முகத் தேர்வில் கலந்து பயன்பெற முடியும். பரீட்சார்த்திகள் உரிய கல்வித் தகைமை ஆவணங்களுடன் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள வேண்டும்.நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ள பதவி நிலை,சம்பள விவரம் மற்றும் கிடைக்கப்பெறும் வேறு நன்மைகள் தொடர்பான விடயங்களை ஒவ்வோர் பிரதேச செயலகத்திலும் இணைப்புப் பெற்றுள்ள சமுர்த்திப் பிரிவுகளில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.” - என்றார்.

கார்கில்ஸ் நிறுவனம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் என்பன இணைந்து முன்னெடுத்துள்ள உத்தேச கூட்டிணைந்த தொழில் மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழாக இந்த வேலை வாய்ப்பு நேர்முகத் தேர்வுகள் இடம்பெறவுள்ளன.

(ஒ)


CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தைத் தகவல்கள்

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

6/10/2017 — www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | ↑ 21.96 | 6,529.05 | 6,507.09 |
| S&P SL20 | ↑ 15.79 | 3,797.43 | 3,781.64 |
| வியாபாரப்புரள்வு | | 922,003,780 | 2,444,049,150 |
| உள்நாடு:- கொள்வனவு | | 520,344,768 | 460,352,512 |
| விற்பனை | | 438,055,264 | 2,373,437,180 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 401,658,976 | 1,983,696,770 |
| விற்பனை | | 483,948,480 | 70,612,056 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| சம்பத் வங்கி | SAMP.N | 326 | 933,789 | 304,111,638 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.N | 70.1 | 2,880,899 | 204,336,340 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 165 | 329,227 | 54,392,438 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 146.5 | 313,022 | 45,935,095 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 250 | 170,229 | 42,053,158 |
| மிலேனியம் கவுசிங்ஸ் டெவலப்மென் | MHDL.N | 13.7 | 2,123,597 | 27,517,851 |
| எல்பிட்டிய பெருந்தோட்டம் | ELPL.N | 33.3 | 646,778 | 21,486,316 |
| மல்வத்தை பிளான்டேசன் | MAL.N | 12.4 | 1,233,243 | 15,127,280 |
| ஜட்கென் ஸ்பென்ஸ் | SPEN.N | 59.7 | 203,529 | 11,850,652 |
| நேஷனல் டெவலப்மென்ட் வங்கி | NDB.N | 131 | 83,620 | 10,956,712 |

அறிவித்தல்கள் -

பங்குலாபம்

மெர்க்கன்டைல் முதலீடுகள் (MERC)- Rs. 7.00
பிஆர்ஏசி லங்கா பினான்ஸ் (NIFL)- Rs. 0.04

| சந்தைக் குறிகாட்டிகள். | | |
|---|---|---|
| கம்பனிகள் | ↑ | 295 |
| பரிமாற்றத்தில் | ↑ | 246 |
| விலை உழைப்பு | ↓ | 10.9 |
| புத்தகப்பெறுமதி | ↓ | 1.4 |
| பங்குலாப விளைவு | ↓ | 2.9 |



# கல்விப்புலத்தில் மாணவர்கள் காணும் சாதனையை பாராட்டுதல் தவறாகுமா...?

## ஓர் உளவியல் நோக்கு

ஸ்ரீ நதிபரன்

சாதனை என்பது செயற்கரிய செயலைச் செய்தல் என்பதாகப் பொருள்படும். சமகாலத்தில், சாதனை புரிபவர்களை பாராட்டுதலென்பது வழமையான நடைமுறைப்பாங்காக அமைந்துவிட்டது. பொதுவில், சிறியவர்கள் முதற்கொண்டு பெரியவர்கள் ஈறாக பாராட்டு மழையில் நனைவதற்கு ஏங்கித் தவித்தல் என்பது வெளிப்படை உண்மை. செய்த நற்செயல்களை, செயற்கரிய செயல்களை பிறர் பாராட்டுகையில் மனம் அகமகிழ்வு கொள்ளும் என்பது பொதுமையுடைய உளவியல் உண்மை. புரட்சியை ஏற்படுத்துகின்ற சாதனை மனிதர்களை பாராட்டுதல் இயல்பானது. அவை நிகழ்த்தப் பட்ட சாதனைகள் சமூகத்திற்கும் நாட்டிற்கும் நன்மை தருபவையாக அமைய வேண்டும். பாராட்டுதல்கள் வருங்கால தலைமுறைக்கு ஊக்கியாக அமைவதை உறுதிப்படுத்துதல் அவசியம்.

**உலகமயமாதலும் மாற்றங்களும்**

உலகமயமாக்கல் செயன்முறையில் உலகம் இன்று எங்கோ சென்றுகொண்டிருக்கின்றது. தற்கால அறிவியல் யுகத்தில் பல புதிய கண்டுபிடிப்புகள் உயர்வு கண்டு நிற்கின்றன. இத்தகைய கண்டுபிடிப்புகளை மேற்கொள்வோர் சமூக நன்நோக்கம் கருதியே தமது ஊழியத்தை மேற்கொள்கின்றனர். பாராட்டுதல்கள் பெறவேண்டும் என்பதற்காக மட்டும் தமது சாதனைகளை ஒருபோதும் இவர்கள் நிகழ்த்துவதில்லை. தமது முயற்சியினால் மக்கள் நன்மையடைய வேண்டும் என்ற இலட்சியக் கனவு இவர்களது சாதனைகளில் இழையோடியிருப்பதைக் காணமுடியும்.
ஆனால் எம்மவர்களோ சுயலாபம் கருதி நடைபயில்கின்றனர். பாராட்டுப்பெறுவதற்காக குறுக்குவழிகளில் ஆதாயம் தேடி நகர்கின்றனர். இத்தகு செயல்நிலைகள் துரதிஷ்டவசமானவை. இதற்கான ஆரம்பங்களைத் தேடின், சிறுபராயத்தில், வளரிளம் பருவத்தில் அவர்களது ஆளுமையில் பெற்றோர், உறவுகள் மற்றும் வாழும் சமூகத்தினால் ஏற்படுத்தப்பட்ட எதிர்வினைகளின் பிரதிபலிப்பு தொக்கி நிற்பதைக் காணமுடியும். இதுவே உளவியலாளர்களின் கருத்தாகவும் அமைந்துள்ளது.

**கல்விமுறையில் உள்ள குறைபாடு**

நாட்டில் நடைமுறையிலுள்ள கல்விமுறையின் சமகாலப் போக்குகளை அவதானிக்கையில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதனை அவதானம் கொள்ளலாம். கல்வியியலாளர்களும், கல்விக்கொள்கை வகுப்பாளர்களும் காலத்திற்கேற்ற (வேலை உலகிற்கேற்ப) கல்விக்கொள்கைகளை வகுக்காமை பெருங்குறைபாடாகும். மாணவர் கற்றலுக்கான சுதந்திரம் மறுக்கப்பட்டு திணிக்கும் கல்வி ஊட்டலே முதன்மை பெறுகின்றது. பரீட்சையில் உயர்பெறுபேற்றைப் பெறுதல் என்ற நோக்கின் அடிப்படையில் பெற்றோர்களின் கனவு மெய்ப்பட வேண்டும், ஆசிரியர்களின் ஆசைகள் நிறைவேற வேண்டும், எல்லோரும் பாராட்ட வேண்டும் போன்ற சிறுமைத்தனமான நோக்கங்கள் முனைப்புப் பெறுகின்றன. தூரநோக்கற்ற கல்விமுறையாக அமைந்து சமூகத்தின் சாபக்கேடாக மாற்றம் தர எத்தணிக்கின்றன.

**மாணவர் உடல் உள வளர்ச்சியை பரிபாலனம் செய்தல்**

பொதுவாகப் பரீட்சைக் களநிலமைகளின் போது மாணவர்களைப் பாராட்டுவது இயல்பு. ஆனாலும் ஆசிரியர்கள் சிலர் தம்மிடம் கல்வி கற்ற மாணவர்கள் உயர்ந்த பெறுபேற்றினைப் பெறும்போது அவர்களை சமூக வெளியில் கருத்தூட்டும் பத்திரிகைகள் வாயிலாகப் பிரசுரித்து பாராட்டி வாழ்த்துகின்றனர். இந்த நிலைமைகள் ஆசிரியர்கள் தமக்கான புகழை மறைமுகமாக தேடுவதற்கான செயல்நிலையே. இதற்கு மாணவர்களை பகடைக்காய்களாக பயன்படுத்துகின்றனர் அவ்வளவே. எதுவாகினும் மாணவர்களை பாராட்டுகையில் அவர்களது ஆளுமைகள் பாதிப்புறாதிருப்பதில் கவனமெடுக்க வேண்டியது அவசியம். குறிப்பாக, பதின்ம வயதிற்கு கீழுள்ள வயதுப்பிரிவினரின் ஆளுமைகள் வளர்ச்சிக் கட்டத்தை எட்டியுள்ள தருணத்தில் அவர்களை நேரிடையான முறையில் பாராட்டும் போது அவர்களது ஆளுமைகளில் பிறழ்வு ஏற்பட வாய்ப்பிருப்பதாக தற்கால உளவியலாளர்கள் கருதுகின்றனர். தவிர பிள்ளைகளின் உளப்பாங்கில் தாக்கத்தை ஏற்படுவதுடன் எதிர்காலத்தில் அவர்களது சிந்தனைகளிலும், பழக்கவழக்கங்களிலும், நடத்தைகளிலும் பாதிப்பை ஏற்படுவதற்கான அதிக பட்ச சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் எதிர்வு கூறியுள்ளனர்.
நிலத்தை நன்கு கொத்திக் கிளறி பண்படுத்தி வளம் நிறைந்ததாக மாற்றும்போதே அது விதைகளின் முளைதிறன் வீதத்தை அதிகரித்து பயிர்வளர்ச்சியை பரிபாலனம் செய்கின்றது. ஒரு விதையானது, முளையாகி செடியாகி மரமாவதற்கு தனியே விதையின் தரத்தினை மாத்திரம் மதிப்பீடு செய்ய முடியாது. ஆரம்பத்தில் மரத்தின் வளர்ச்சியில் நிலம், சூழல் எத்தகைய பங்களிப்பை வழங்குகின்றன என்பதைப் பொறுத்தே எதிர்காலத்தில் மரத்தின் சிறப்பான வளர்ச்சி தங்கியுள்ளது. இதனை மாணவர்களின் சிறுபராய வளர்ப்பு முறைக்கும் பொருத்துடையதாக எடுத்துக்கொள்ளலாம்.

**பிள்ளைகளின் உளவளர்ச்சியில் சமூகத் தனிமங்களின் பங்கு**

பிள்ளைகளின் உளவளர்ச்சிப் படிநிலையில் பெற்றோர், ஆசிரியர்கள், வாழும் சமூகம் ஆகிய காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. இயல்பாக எல்லாப் பிள்ளைகளும் ஒரே திறமையுடையவையாக இருப்பதில்லை. ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வோர் விதமான திறமைகள் ஒளிந்திருக்கின்றன. இந்தநிலையிலே வளரிளம் பராயத்தினராகிய மாணவர்களை பாராட்டுகையில் ஏனையவர்களுடன் ஒப்பீடுசெய்து பாராட்டுதல் தவறான அணுகுமுறை. அது மாணவர்கள் மத்தியில் பாரதூரமான எதிர்வினைகளை ஏற்படுத்தும். 'நீ அவனை விடவும் கெட்டிக்காரன், நல்லவன், அமைதியானவன், ஒழுக்கமுள்ளவன், திறமைசாலி....." என்றவிதமான பாராட்டுரைகள் பிள்ளைகளின் மனநிலையில் எதிர்மறையான பிறழ்வு நிலையை ஏற்படுத்திவிடுகின்றன. இதனால் தன்னைவிடச் சிறந்தவர்கள் ஒருவரும் இல்லை என்ற அகந்தை இயல்பாகவே உருவாகும். இத்தகைய சுய கர்வம், சக தோழர்கள் மீது வெறுப்பு, காழ்ப்புணர்ச்சி, குரோதம், வன்மம், பொறாமை, அபிப்பிராய பேதம் முதலான பல எதிர்மறை எண்ணங்களை மனதளவில் தோற்றுவிக்கின்றன. பிறரை மதிக்கும் பண்பு, சகிப்புத்தன்மை, பிறருக்கு உதவும் மனப்பாங்கு, அன்பு, இரக்கம் முதலான நற்குணங்கள் அருகி மறைந்து போகத் தூண்டுகோலாக அமைந்துவிடுகின்றன.

> இன்றைய காலத்தில் மாணவர்களை பாராட்டுவது தொடர்பில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் விழிப்புடன் செயற்படுவது என்பது மிகவும் அவசியமாகிறது. ஆசிரியர்களின் பணி கற்பித்தல் செயன்முறையுடன் மட்டும் நின்றுவிடாது மாணவர்களின் அடிப்படை நலன்களிலும் கரிசனை கொள்வதாக நகர்வுற வேண்டும். இது ஆசிரியத்துவத்தின் அடிப்படைகளில் ஒன்று என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**உளவியலாளர் கருத்துநிலை**

பாராட்டுதல்கள் பிள்ளைகளின் மன்தில் எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன என்பது பற்றிய சமகால உளவியலாளர்கள் கருத்துக்களை நோக்குகையில், அவை "ஒரு பிள்ளையின் ஆளுமை குறித்த நேரடிப் பாராட்டுதலை அந்தப் பிள்ளையால் அப்படியே ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.
தன்னைப்பற்றியதான சுயபார்வை, சுய மதிப்பிடல், சுயஅபிப்பிராயம் வேறானதாக இருப்பதை உணரும்போது அவற்றை உண்மையென நிரூபிப்பதற்காக சில வேளைகளில் மோசமாக நடந்துகொள்கிறது. தன்பார்வையில் தான் நல்லபிள்ளையில்லை என்று உணரத்தலைப்படுகையில் பிற்காலத்தில் தனது உள்ளக விம்பத்தை வெளிப்படுத்துவதற்கு இயல்புக்குமாறான செயற்பாடுகளில் ஈடுபடத்தூண்டப்படுகின்றது.
தற்சார்புள்ள புகழ்ச்சிகள் ஒருவித மனமருட்சியையும், அங்கலாய்ப்பையும், எதிர்பார்ப்புகளையும் எதிர்காலத்தில் தோற்றுவிக்கின்றன. இந்தநிலையில் தனது இயல்பான உளச்சொருபம் உடைந்து தனது உண்மையான இயல்பு கள் வெளிப்பட்டுவிடுமோ என்ற ஒருவித அச்சம் அவர்கள் மனங்களில் எப்போதும் நிறைந்திருக்கும்" என்பதாக அமைவுபெறுகின்றது.

**மாற்றங்காண வேண்டிய மனோபாவம்**

மேலும், பரீட்சைகளில் சித்தியடைந்து உயர் பெறுபேறு பெற்றுச் சாதனைபடைத்த மாணவர்கள் ஊடகங்களுக்கு பேட்டியளிக்கும் போது அவர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களில் கற்பனாவாதத்தின் உச்சத்தை காணமுடியும். குறிப்பாக, 'நான் வைத்தியனாவேன், பொறியியலாளனாவேன், விஞ்ஞானியாவேன். இதுவே எனது எதிர்கால இலட்சியம்" என்றவிதமாக கருத்துரைக்ள் நீளும். இத்தகையதான இலட்சியக்கனவுகள் அனைத்துமே அவர்கள் கூறியபடி பிற்காலத்தில் நிறைவேற்றப்படுகின்றனவா..? என்பது சந்தேகமே. இப்படியான கருத்துக்களைப் பகிரும் எந்தவொரு மாணவனும் "நான் மனிதநேயமுள்ளவனாக, ஒழுக்க விழுமியப்பண்புகளுடன் ஒழுகி வாழ்வேன்" என்றுரைப்பதில்லை. இவ்வித மனப்பாங்கே அவனது எதிர்கால வாழ்வியலிலும் எதிரொலிக்கின்றது. பிற்காலத்தில் சிலவேளை அவன் கூறியபடி ஒரு துறையில் உயர்பதவிக்கு வந்தாலும், மனித தர்மத்துடனான வாழ்க்கையை அவனால் வாழ முடிவதில்லை. மனித மிருகமாகவே வாழத் தலைப்படுகின்ற அவலங்கள் எம்மிடையே அரங்கேறுகின்றன. அதனை அவதானம் கொள்கிறோம்.

**வேண்டப்படும் மாற்றங்கள்**

ஆக, இன்றைய காலத்தில் மாணவர்களை பாராட்டுவது தொடர்பில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் விழிப்புடன் செயற்படுவது என்பது மிகவும் அவசியமாகிறது. ஆசிரியர்களின் பணி கற்பித்தல் செயன்முறையுடன் மட்டும் நின்றுவிடாது மாணவர்களின் அடிப்படை நலன்களிலும் கரிசனை கொள்வதாக நகர்வுற வேண்டும். இது ஆசிரியத்துவத்தின் அடிப்படைகளில் ஒன்று என்பதை புரிந்துகொள்ள வேண்டும். கல்வியானது ஒருவரின் சுயத்துவத்தை அழித்து அறிவை, மனப்பான்மையை, திறமையை மழுங்கடிக்கக்கூடாது. தற்பேரதைய பரீட்சையை நோக்காகக்கொண்ட திணிப்புமுறையிலான கல்விமுறையினால் வெற்றிபெறுபவர்களை பாராட்டுவதானது மாணவர்களுக்கு இருக்கின்ற இயல்பான திறமையையும் அறிவையும் மழுங்கடித்து விடுகிறது. ஏனைய மாணவர்களின் மனப்பாங்கில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தி விடுகின்றன.
பதின்ம வயதிற்குட்பட்டோரைப் பாராட்டுகையில், நேரடியான தனிநபரின் இயல்பு, ஆளுமை குறித்த புகழ்ச்சியை விட மேம்பட்டதாக இருக்க வேண்டும். அவர்கள் அபிப்பிராயப்படும்படியான அவர்கள் நிகழ்த்திய சாதனைகள், செயல்கள் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் குறித்துப் பாராட்டுவதாக அமைவது நன்று. இதன் மூலம் எதிர்கால மாணவ சமூகம் ஆரோக்கியமான திசையில் பயணிக்கச் செய்யலாம். அந்த அடைவை நிச்சயித்துக் கொள்ளலாம்.

# காகத்தின் சகுன பலன்கள்



காகம் எந்த உணவையும் தனக்கென்று சேர்க்காமல், பிற காகங்களுக்கும் கொடுத்து பகிர்ந்து உண்ணும் சிறப்பியல்பைக் கொண்ட பறவையாகும்.
எமது அன்றாட வாழ்வில், தினமும் காணும் பறவையாக உள்ள காகத்தை இறந்த நம் முன்னோரின் அம்சமாகக் கருதுகின்றனர்.
அந்த வகையில் எமது வாழ்வில் காகத்தினால் ஏற்படும் ஒருசில சகுனங்களைப் பற்றிக் காண்போம்.

**பயணத்தின் போது ஏற்படும் காகத்தின் சகுனம் என்ன?**

ஒருவரின் பயணத்தின்போது, காகம் வலமிருந்து இடம் போவது தன இலாபத்தையும், இடமிருந்து வலம்போனால் அது தனநஷ்டத்தையும் உண்டாக்குமாம்.
வெளியில் பயணிக்கும் ஒருவரை நோக்கிக் காகம் கரைந்து கொண்டே பறந்து வந்தால், அந்த பயணத்தைத் தவிர்த்துவிட வேண்டுமாம்.
ஒருவர் பயணிக்கும்போது ஒரு காகம் மற்றொரு காகத்திற்கு உணவூட்டும் காட்சி தென்பட்டால், அவர்களின் பயணம் இனிதாகுமாம்.
வெளியில் செல்லும் போது, ஆண் மற்றும் பெண் காகங்கள் ஒன்றாக இருந்து கரைந்து கொண்டிருந்தால், அவர்களின் வீட்டில் பெண்களின் சேர்க்கை ஏற்படுமாம்.
ஒருவருடைய பயணத்தின் போது, அவரது வாகனம், குடை, காலணி அல்லது அவருடைய உடல் மற்றும் நிழல் ஆகியவற்றை காகம் தன் சிறகால் தீண்டினால், அகாலச் சாவு அவருக்கு நேரிடலாம்.
ஒருவரின் வாகனம், குடை, காலணி ஆகியவற்றின் மீது காகம் எச்சம் விட்டால், அவர்களின் பயணத்தின் போது, உணவுக்குப் பஞ்சம் இருக்காதாம்.
ஒருவர் யாத்திரைக்கு புறப்படும்போது, காகம் எந்தப் பொருளைத் தன் அலகால் கொண்டு வருகிறதோ, அந்தப் பொருளின் வகையிலான இலாபம் பயணத்தில் கிட்டும்.

**காகம் கரைதலினால் ஏற்படும் சகுனம்?**

ஒருவருடைய வீட்டின் தென்கிழக்குத் திசையை நோக்கிக் காகம் கரைந்தால், தங்கம் சேரும்.
வீட்டின் தெற்கு திசையை நோக்கி, கரைந்தால், உளுந்து, கொள்ளு போன்ற தானிய லாபம் கிடைக்கும்.



தென்மேற்குத்திசையைநோக்கிகரைந்தால், குதிரை, தயிர், எண்ணெய், உணவு போன்ற உணவுகள் சேரும்.
மேற்கு திசையை நோக்கி காகம் கரைந்தால், மாமிச உணவு, மது வகைகள், நெல் முதலான தானியங்கள், முத்து, பவளம் போன்று கடலில் விளையும் பொருள்கள், உலர்ந்த பழ வகைகள் கிடைக்கும்.
வடக்குத் திசையை நோக்கி காகம் கரைந்தால் ஆடைகள், நல்ல உணவு மற்றும் வாகனங்கள் ஆகியன கிடைக்கும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 07.10.2017

1933 - ஐந்து வானூர்தி நிறுவனங்கள் இணைந்து ஏயார்பிரான்ஸ் வானூர்தி சேவை தொடங்கப்பட்டது.




1826 - அமெரிக்காவில் முதலாவது ரயில் பாதையான கிறனைற் ரயில்வே நடவடிக்கைகளைத் தொடங்கியது.
1840 -. இரண்டாம் வில்லியம் நெதர்லாந்தின் அரசரானார்.
1879 - ஜேர்மனி, ஆஸ்திரியா மற்றும் ஹங்கேரி ஆகியன கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
1918 - ஜேர்மனியிடம் இருந்து சுதந்திரம் பெற்றது போலந்து.
1919 - நெதர்லாந்தின் கே.எல்.எம். வானூர்தி சேவை உருவாக்கப்பட்டது. இன்றளவிலும் பெயர் மாற்றமின்றி செயற்படும் வானூர்தி சேவை நிறுவனமாக இது உள்ளது.
1959 - சந்திரனின் மறுபக்கத்தின் படங்கள், லூனா 3 விண்கலத்தால் அனுப்பி வைக்கப்பட்டன.
1977 - சோவியத் யூனியனின் நான்காவது அரசமைப்பு நடைமுறைக்கு வந்தது.
1992 - கிளாலி ஆலங்கேணியில் வானூர்தி குண்டுவீச்சு. 6 பேர் காயம், 2 படகு நாசம்.
2016 - தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாகத் தலைநகரிலும் வெடித்தது போராட்டம்.

**நாளை**
**08.10.2017**
ஞாயிற்றுக்கிழமை
**புரட்டாதி 22**

திதி: திருதியை மு.இ. 07.46 வரை
நட்சத்திரம்: பரணி மு.இ. 07.17 வரை
சுபநேரம்: 09.02–10.32 வரை
ராகுகாலம்: 04.32–06.02 வரை

## பத்தி எழுத்து

## வேண்டும் மாற்றம்!

கடந்த 2015ஆம் ஆண்டு புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா, கூட்டு வன்புணர்வின் பின்னர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். சுமார் இரண்டு வருடங்களுக்கும் மேலாக நடைபெற்ற இந்த வழக்கின் தீர்ப்பு தற்போது வெளிவந்துள்ளது. சந்தேக நபர்களான 9 பேரில் 7 பேர் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டு தூக்குத் தண்டனைக்கு தீர்ப்பிடப்பட்டுள்ளது. ஏனைய இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். குற்றவாளிகள் தலா 10 லட்சம் தண்டம் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பிடப்பட்டுள்ளது.
வடபகுதி மக்கள் மட்டுமல்லாமல் இலங்கை முழுவதுமாக வித்தியா கொலை வழக்குத் தீர்ப்பு பெரிய அளவில் எதிர்பார்க்கப்பட்டது. தமிழக ஊடகங்களும் இந்தத் தீர்ப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டிருந்தன. தீர்ப்பு வெளியானதும் யாழ்ப்பாண மாவட்டத்தினர் பட்டாசுக்களை வெடித்து மக்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். இத்தகைய பின்னணியில் இந்த வழக்கின் தீர்ப்பு பெண்கள் மீதான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவந்திடுமா என்றால் மிகப்பெரும் ஐயப்பாடே மனதில் எஞ்சி நிற்கிறது.
ஏனெனில் வித்தியா ஒருவரே இலங்கையில் அதிலும் வடக்குப் பகுதியில் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டவர் அல்லர். அதற்கு முன்பும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கிரிசாந்தி கொலை வழக்கை மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகக் கொள்ள முடியும். கிரிசாந்தியின் வழக்கிலும் குற்றவாளிகள் என்று அடையாளம் காணப்பட்ட இராணுவத்தினருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தூக்குத் தண்டனைக்குப் பின்னரேயே வித்தியாவுக்கு இத்தகைய பெரும் அவலம் இடம்பெற்றது. எனவே வித்தியாவுக்கான தீர்ப்பும் இறுதியாக இருந்துவிடும் என்று உறுதியாக எதிர்பார்க்க முடியாது.
மொத்தத்தில் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் குற்றங்களுக்கான தண்டனைகளை வழங்குகின்றனவே தவிர, அவை குற்றங்களைக் கட்டுப்படுத்தும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது, உறுதியாகச் சொல்லிவிட முடியாது. இதற்கு கிருசாந்தி, வித்தியா இருவரும் எம்மிடையே உள்ள ஆகச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள்.
பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தவிர்க்கப்பட வேண்டுமாயின், குறைந்த பட்சம் குறைக்கப்படவாவது வேண்டுமாயின் பெரியளவில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த மாற்றங்கள் ஒவ்வொரு தனி மனிதனிடத்தில் ஏற்பட வேண்டும். அத்தகைய மாற்றங்களே ஆக்கபூர்வமானதை ஏற்படுத்தும். அதைச் செய்யாத பட்சத்தில் பெண்ணியம் பற்றிய வாதங்களும், இதுபோன்ற பதிவுகளும் பெரிளயவில் மாற்றத்தை உண்டு பண்ணா.

**டெய்லி லேட்டா வரியேனு மனேஜர் கேக்கும்போது..**



டேய் நீ லேட்டா வந்தா நான் ஏதாச்சும் கேக்கிறனாடான்னு திருப்பிக் கேக்கனும்னு தோனுது. ஆனா...


**மனைவியுடன் தீபாவளி ‘ஷாப்பிங்’**



புறப்பட்ட போது...

திரும்பிய போது...

**வேகமாகச் சென்றால் ‘கெத்து’ என்று நினைப்பவர்கள்**



‘டெத்’ என்பதையும் நினைவில் கொள்க...

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். இலாபம் பன்மடங்கு உயரும்.

**இடபம்:** மனதில் சஞ்சலம் வந்து விலகும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணிகளை நிறைவேற்றுவது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** தவறைத் திருத்திக் கொள்ள முயல்வீர்கள். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும்.

**கடகம்:** புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் உண்டாகும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும்.

**சிங்கம்:** சிலர் சுயநலத்துடன் உங்களை அணுகலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**கன்னி:** உங்கள் பேச்சில் வசீகரம் உண்டாகும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பைப் பயன்படுத்துவீர்கள். ஆதாயம் உயரும்.

**துலாம்:** பேச்சு, செயலில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் குறைகளை உடனடியாகச் சரிசெய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** ஆன்மிக சிந்தனையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி கிடைக்கும். வருமானம் உயரும்.

**தனுசு:** சவால்களை ஏற்று தடைகளை தகர்த்தெறிய முயல்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் சாதனை படைப்பீர்கள். வருமானம் பன்மடங்கு உயரும்.

**மகரம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முயல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**கும்பம்:** மனதில் அதிருப்தி உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சீராக இருக்கும். பிறருக்காகப் பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**மீனம்:** புத்தி சாதுர்யத்தால் முயற்சியில் வெற்றி கிடைக்கும். பெண்களால் குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். வியாபாரத்தில் அலைச்சல் இருக்கும்.

# இந்தியாவில் பரவலாக இசை நிகழ்ச்சிகளை நடத்துகிறார் ரகுமான்



ரோஜா படத்தில் இசையமைத்து 25 ஆண்டுகள் கடந்த நிலையில் இந்தியாவெங்கும் பரவலாக இசை நிகழ்ச்சிகளை நடத்துகிறார் ரகுமான்.

இரண்டு ஒஸ்கார், கிராமி, கோல்டன் குளோப் உள்ளிட்ட முக்கிய விருதுகளையும், 6 ‘டொக்டர்’ பட்டங்களையும் பெற்று இசைத்துறையில் முடிசூடா மன்னனாகத் திகழ்கிறார் ரகுமான்.

1992ஆம் ஆண்டில் இவர் முதன்முதலாக இசையமைத்த ரோஜா திரைப்படம் வெளியாகி 25 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இசையுலகில் தனது வெள்ளிவிழா ஆண்டை கொண்டாடும் வகையில் இந்தியாவில் பரவலாகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இசை நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளார் ரகுமான். எனினும், இந்த இசைப் பயணத்தில் சென்னை நகரை ரகுமான் சேர்க்வில்லை என்றும் தகவல்கள் வந்துள்ளன. (ம)

அதிகாரம்
செய்யும்
இடத்தில்
இருந்தாலும்
அனைவரிடமும்
அன்பாய்
பேசலாமே...
எவருக்கும் எந்த
இடமும்
நிரந்தரம்
இல்லை...!!!



## உப்பைக் குறையுங்கள்

வாழ்க்கையில் நாம் குறைக்க வேண்டி ய உப்புகள் சில

**கணவர்கள் - படபடப்பு**
**மனைவிகள் - நச்சரிப்பு**
**பதின்ம வயதினர் - பரபரப்பு**
**மாணவர்கள் - ஏய்ப்பு**
**மாமியார்கள் - சிடுசிடுப்பு**
**மருமகள்கள் - கடுகடுப்பு**
**வக்கீல்கள் - ஒத்திவைப்பு**
**மருத்துவர்கள் - புறக்கணிப்பு**
**அரசியல்வாதிகள் - ஆர்ப்பரிப்பு**
**வயதானவர்கள் - தொணதொணப்பு**

ஆனால்,


எவரும் குறைக்கத் தேவையில்லாத
ஒரே உப்பு

**சிரிப்பு**

இது உடம்புக்கு மிகச்சிறப்பு

ஆற்றின் குறுக்கே பாலம்
கட்டாத காலத்தில் தண்ணீர்
மட்டும்
ஓடிக்கொண்டிருந்தது...

பாலம் கட்டிய பிறகு
வாகனங்கள் மட்டுமே
ஓடிக் கொண்டு
இருக்கின்றன......!!



## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | | | | 8 | |
| 1 | | 4 | 2 | | | | | 6 |
| | | | | | 6 | 9 | 2 | |
| | | | | | | | | |
| 6 | 5 | | | | 7 | 2 | 1 | |
| | 9 | | | 5 | | | | |
| | | 8 | | | 1 | 6 | | |
| | | | | | | 3 | 5 | |
| 3 | | | 4 | | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 8 | 9 | 1 | 5 | 4 | 6 | 7 |
| 9 | 1 | 6 | 7 | 2 | 4 | 8 | 3 | 5 |
| 7 | 4 | 5 | 6 | 3 | 8 | 1 | 9 | 2 |
| 1 | 6 | 2 | 4 | 8 | 7 | 9 | 5 | 3 |
| 3 | 7 | 9 | 2 | 5 | 1 | 6 | 8 | 4 |
| 8 | 5 | 4 | 3 | 9 | 6 | 7 | 2 | 1 |
| 5 | 9 | 7 | 1 | 6 | 2 | 3 | 4 | 8 |
| 6 | 8 | 1 | 5 | 4 | 3 | 2 | 7 | 9 |
| 4 | 2 | 3 | 8 | 7 | 9 | 5 | 1 | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை




# கறுவா

கறுவா என்பது கறுவா மரத்தின் பட்டை. இந்த மரம் இலங்கை மலையாளக் கரை, கூர்க்கு, மேற்கிந்திய தீர்வுகள் பிரேசில் முதலிய நாடுகளில் பயிரிடப்படுகிறது. இது காட்டு மரமாக வளரும்போது 20 முதல் 30 அடிவரை உயரும். பட்டைக்காகப் பயிரிடும் போது இதனைப் பத்தடிக்கு மேல் வளர விடுவதில்லை. கறுவா மரத்தின் குருத்து சிவப்பாக இருக்கும். பின் அது வெண்மையடைந்த மஞ்சளாக மாறி, இருண்ட பச்சை நிறமடையும். ஒன்பது ஆண்டுகளின் பின் மரத்தின் பட்டை உரித்தெடுக்கப்படும். தாய் மரத்தை வெட்டிய பின் அடியிலிருந்து கூட்டமாக முளைத்தெழும் செடிகளிலிருந்து உரித்தெடுக்கப்படும். பட்டை உயர்ந்த ரக கறுவாவாகும். இம்முளைகள் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நிலமட்டத்துக்கு வெட்டப்படும். இலவங்கம் பட்டையும் கறுவாப் பட்டை மணத்தை ஒத்தது. கறுவாப்பட்டையில் இருந்து தைலம் எடுக்கப்படுகிறது. அது மருந்தாகப் பயன்படுகிறது. கறுவா சீரணத்துக்கு நல்ல மருந்தென்று சொல்லப்படுகிறது. இந்தப் பட்டையைத் தண்ணீரில் ஊறவிட்டு அந்தத் தண்ணீரை வடித்துக் கறுவாத் தைலம் எடுப்பர்.

# சிந்தனைத் துளிகள்

1. மலையளவு உபசாரம் செய்தாலும் கடுகளவு அபகாரம் செய்யாதே.
2. தீயோனுக்கு நல்லோனாக இருந்தாலும் இரு;
நல்லோருக்கு மட்டும் தீயோனாக இராதே!
3. அறிவாளி ஒருவன் கெட்டதையும் ஏற்று சிந்திக்கத் தொடங்குகிறான்.
4. ஓர் ஆளைப் பார்த்தவுடன் புரிந்து கொள்பவன் ஞானி; பழகாமல் புரிந்து கொள்பவன் அறிவாளி; அவனுடன் பழகிப் பார்த்து புரிந்து கொள்பவன் ஏமாளி.
5. உன்னை விட மேலானது எல்லா வகையிலும் உண்டு என்பதை மறக்காதே; நானே எல்லாவற்றிலும் உயர்ந்தவன் என்பதை மறந்துவிடு.
6. ஏற்காதவனுக்கு அறிவுரை வழங்காதே;
அது உனக்கே ஆபத்தைக் கொண்டு வரும்.
7. பலவழிகளிலும் வருமானத்தைத் தேடும் ஒருவனால் தான் அனேகர் ஏமாற்றப்பட்டிருப்பார்கள்.
8. உன்னால் சாதிக்க இயலாத காரியம் எதுவும் உன்னிடம் இருப்பதாக ஒரு போதும் நினைக்காதே.



# அன்பைத் தேடினால்....

அம்மா வீட்டில் இருந்து கதவைத் திறந்து கொண்டு வந்தார். வெளியே மூன்று பெரியவர்கள் வெள்ளை நிறத் தாடியுடன் நின்றிருந்தனர். "உங்களுக்கு உணவு வேண்டுமா? உள்ளே வாருங்கள்" என்று அந்த அம்மா அழைத்தார். நாங்கள் உங்கள் வீட்டிற்கு உணவருந்த வரவில்லை. ஆனால் வரப் போகிறோம். அவர் பெயர் வெற்றி. இவர் பெயர் செல்வம். நான் அன்பு. எங்கள் மூவரில் ஒருவர்தான் உங்கள் வீட்டிற்கு வரப்போகிறோம். யார் வரவேண்டும் என்பதை நீங்கள் உங்கள் குடும்பத்தாருடன் கேட்டு விட்டு வந்து சொல்லுங்கள்" என்றார். அந்த அம்மாவும் கணவரிடம் சென்று நடந்த விவரத்தைச் சொன்னார். கணவர் "செல்வத்தைக் கூப்பிடுவோம். அப்போதுதான் நமது வீடு முழுவதும் செல்வம். கொட்டிக் கிடக்கும் நாம் சந்தோஷமாக செலவு செய்யலாம்" என்றார். மனைவி அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டு "வெற்றியைக் கூப்பிடுவோம்" என்றாள். இதையெல்லாம் கவனித்துக்கொண்டு இருந்த அவர்களுடைய மகள்" இல்லையம்மா. அன்பைக் கூப்பிடுவோம்" அப்போது தான் எமது இல்லம், எமது மனம் எல்லாம் அன்பால் நிறைந்திருக்கும்" என்றாள். அவள் விருப்பத்துக்கு அப்பாவும் அம்மாவும் சம்மதிக்கவே அந்த அம்மா வெளியே வந்து "எங்கள் வீட்டிக்கு அன்பு வர வேண்டும்" என்றாள் அன்பு வீட்டுக்குள் நுழைத்தார். பின்னால் வெற்றியும் செல்வமும் உள்ளே வந்தனர். "ஒருவர் தானே வருவதாகச் சொன்னீர்கள் இப்போது மூவரும் வருகிறீர்களே" என்று அந்த அம்மா கேட்டார். "நீங்கள் செல்வம் கேட்டு இருந்தால் நான் மட்டும் வந்திருப்பேன். நீங்கள் வெற்றி கேட்டிருந்தால் அவர் மட்டும் வந்திருப்பார். ஆனால் நீங்கள் அன்பு வேண்டுமென்று கேட்டதால் நாங்களும் வந்து விட்டோம் என்றனர். அன்பு எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் நாங்களும் இருப்போம்" என்று மற்ற பெரியவர்கள் இருவம் கூறினர்.

**எல்லோரும் அன்பாக இருங்கள், அன்பு இருக்கும் இடம் சொர்க்கம்.**



# எமது ஆசிரியர்

- நான் நான்காம் வகுப்பில் படிக்கிறேன்
- எனது வகுப்பாசிரியர் பெயர் லட்சுமி
- அவர் எங்கள் எல்லோரிலும் மிகவும் அன்பாக இருப்பார்.
- எங்களுடன் அன்பாக மட்டுமல்ல இனிமையாகவும் உரையாடுவார்.
- அவர் காலையில் எம் எல்லோருக்கும் முன்னதாகவே பாடசாலைக்கு வந்து விடுவார்.
- தினமும் தூய ஆடையை அணிந்திருப்பார்.
- கையில் பிரம்பு இருக்காது; ஆனால் அவர் எங்களில் காட்டும் அன்புக்கு நாம் கட்டுப்பட்டு வகுப்பறையில் அமைதி பேணுவோம்.
- அவர் எந்த சிரமமான பாடத்தையும் மிக இலகுவாக விளங்க வைப்பார்.
- தமிழ்ப் பாடமென்றால் பழமொழிகள் உவமைகள் கூறி பாடத்தை கலகலப்பாகவும் இலகுபடவும் கற்பிப்பார்.
- பெரும்பாலும் பாட விடயங்களை விளையாட்டுகள் ஊடாகவே கற்பிப்பார்.
- கடினமான கணித பாடத்தைக் கற்கண்டு போன்று இனிமையாகவும் இலகுவாகவும் நமக்கு விளங்கும் படியும் கற்பிப்பார்.
- சுற்றாடல் பாடமென்றால் எம்மை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் சென்று நேரடி அனுபவங்கள் மூலம் கற்பிப்பார்.
- உரையாடல் நாடகம் என்றால் எம்மை நாடகத்தில் வரும் பாத்திரங்களாகவே மாற்றிவிடுவார்.
- கதைகூறும் போது கதையில் வரும் பாத்திரங்களாகவே மாறிவிடுவார்.
- சமய பாடமெனில் இறை பக்தியையும் நல்ல ஒழுக்க நெறிகளையும் கற்றுத் தருவார்.
- எமது ஆசிரியர் பரந்த அறிவும் இரக்க சுபாவமும் உடையவர்.
- படிப்பில் இடர்படும் பிள்ளைகளுக்கு மேலதிகமாக அவர்கள் கூட இருந்து கற்பிப்பார்.
- எங்களுக்கு நல்ல வழிகாட்டியான, இவரை நாம் எமது ஆசிரியராக அடைந்ததில் பெருமை கொள்கிறோம்.

# அதிகாலையில் எழுந்திருக்கவேண்டும்

அதிகாலையில் சுற்றுப்புறச் சூழல், காற்று முதலானவை எல்லாம் மிகவும் தெளிவாக இருக்கும். அந்தத் தூய்மையான காற்றைச் சுவாசிப்பதால் உடல் ஆரோக்கியம் கூடும். பொழுது விடிந்து போக்குவரத்து மிகுந்து விட்ட தென்றால் சூரியனின் வெப்பம் பட்டு பல சக்திகள் ஆவியாகிப் போய் விடும். போக்குவரத்து வாகனங்களின் நச்சுப் புகை காற்று மண்டலத்தில் பரவி ஆக்கிரமித்துக் கொள்ளும் அதன் பின்னர் தூய்மையான காற்று எங்கே கிடைக்கும்? அதிகாலையில் எழுந்திருக்க வேண்டுமென இதற்காகவே சொல்லி வைத்தார்கள் எமது முன்னோர்கள். அப்படி எழுந்திருக்கும் போது எமது உடலில் இரண்டு விதமான காந்த வளையங்க்ள் இருக்கின்றன. ஒன்று காலில் இருந்து தலைக்கும், தலையில் இருந்து காலுக்கும் வலம் வந்து கொண்டிருக்கும். இரண்டாவது இடது பக்கம் இருந்து முன் பக்கம் வழியாக வலது பக்கத்துக்கும் வலது பக்கத்தில் இருந்து பின் பக்கம் வழியாக இடது பக்கத்துக்கும் வலம் வந்து கொண்டிருக்கும். அந்த வளையங்களின் திசைக்கு ஏற்றபடி உடம்பு அசையும் போது வளையங்களின் சுருள்கள் இறுகும். அதற்கு எதிராக அசையும் போது காந்தச் சுருள்கள் தொய்வடைந்து போகும். அதனால் உடம்பின் செயற்றிறன் தளர்வடைந்து போகும்.



இதனால் படுக்கையில் இருந்து எழுந்து கைகளால் தரையைத் தொட்ட பின் நிமிர்ந்து எழ வேண்டும். ஏனெனில் இரவு முழுவதும் உடலை நீட்டிப் படுத்திருப்போம். உடம்பு சமநிலையில் இருந்திருக்கும். எழுந்தவுடன் காலால் தரையைத் தொட்டால் சக்தி வீணாகும். ஏனென்றால் படுத்திருக்கையில் குருதி ஓட்டமும் உடம்பின் செயற்பாடுகளும் வேறு. ஆகவே எழுந்தவுடன் காலால் தரையைத் தொட்டால் சக்தி பெருமளவில் கீழ்நோக்கி பாய்ந்து வீணாகும். கையால் தரையைத் தொட்டு நிமிரும் போது சக்தி மேல் நோக்கிப் பரவிப் பாய்ந்து நலம்தரும். இதை எண்ணியே காலையில் எழுந்ததும் கையால் தரையைத் தொட்டு எழ வேண்டும் என்று எம் முன்னோர் கூறிவைத்தனர்.

## இரு படங்களுக்கும் இடையில் 5 வித்தியாசங்கள் உள்ளன; கண்டு பிடியுங்கள்



# வழிப்பறி கொள்ளையர்கள் தென்மராட்சியில் கைவரிசை

யாழ்ப்பாணம், செப்.7

மோட்டார் சைக்கிளில் வீதியில் பயணித்தவரை வழிமறித்த கொள்ளையர்கள் அவரின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டிப் பணம் பறிக்கப்பட்டதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் ஏ9 சாலையில் தச்சன் தோப்புக்கு திரும்பும் வளைவில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக கைதடி மத்தியைச் சேர்ந்த பொ. கதிரன் என்பவரே பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

கைதடி, தச்சன் தோப்பில் உள்ள உறவினர்களின் வீட்டுக்குச் சென்று மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பும் போது சம்பவம் இடம்பெற்றது. குறித்த வளைவில் மறைந்திருந்த கொள்ளையர்கள் திடீரென குறுக்கே வந்து வழிமறித்தனர். மோட்டார் சைக்கிளில் இருந்த திறப்பை பிடுங்கி எடுத்தார்கள். பின்னர் கழுத்தில் கத்தியைவைத்துபணப்பையில்இருந்த20ஆயிரம்ரூபா பணத்தைப் பறித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பித்துச் சென்றார்கள்" என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் தப்பித்துச் சென்ற மோட்டார் சைக்கிளின் இலக்கம் அவதானிக்கப்பட்டு முறைப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பானவிசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (வ-21, 288)

# வல்லிபுரக் கோவில் சென்றவரை காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப்.7

வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத் தீர்த்தத் திருவிழாவுக்குச் சென்றவரைக் காணவில்லை என அவரது குடும்பத்தினரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கைதடி கிழக்கு கள்ளிநகர்ப் பகுதியைச் சேர்ந்த கந்தையா நகுலேஸ்வரன் (வயது- 54) என்பவரே காணாமற் போனார் என குடும்பத்தினர் தெரிவித்தனர்.

"வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத் தீர்த்தத் திருவிழாவுக்கு நேற்று முன்தினம் சென்ற அவர் நேற்றுவரை வீடு திரும்பவில்லை.

ஆலயத்தில் வழங்கப்பட்ட அன்னதான நிகழ்வில் கலந்து கொண்டு உணவு உட்கொண்டிருந்தார். பின்னர் துவிச்சக்கர வண்டியில் அங்கிருந்து புறப்பட்டார். எனினும் நேற்று இரவு வரை அவர் வீடு திரும்பவில்லை" என அவரது குடும்பத்தினர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையம், பருத்தித்துறை பொலிஸ் நிலையம் இரண்டிலும் முறையிடப்பட்டுள்ளது. (வ-21,288)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### நீதி அமைச்சர்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் இந்தப் பேச்சுக்களை இன்று முன்னெடுக்கவுள்ளார்.

அமெரிக்காவால் நாடு திரும்பியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்காவுக்குச் செல்வதற்கு முன்னரும், நீதி அமைச்சருடன் இந்த விடயம் தொடர்பில் பேச்சு நடத்தியிருந்தேன். தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை இடமாற்ற வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருந்தேன்.

தமிழ் அரசியல் கைதிகள் மூவரும் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். நீதி அமைச்சரையும், சட்டமா அதிபரையும் இன்று சந்தித்து இது தொடர்பில் பேச்சு நடத்தப்படும் - என்றார். (வ-5)

### இளவாலை...

முதல் கோலைப் பதிவுசெய்தார் றூபன் ராஜ். 18ஆவது நிமிடத்தில் அன்ரனிராஜ், சென். ஹென்றிஸின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். மேரிஸ்ரெலாக் கல்லூரியின் சார்பாக ஒரு கோல் பதிவாக முதல் பாதியின் முடிவில் 2:1 என்று ஆதிக்கம் செலுத்தியது சென். ஹென்றிஸ்.

இரண்டாவது பாதியின் 11ஆவது, 22ஆவது நிமிடங்களில் அன்ரனிராஜ், ஹென்றிஸின் சார்பாக மேலும் இரண்டு கோல்களைப் பதிவுசெய்தார். முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று தேசியச் சம்பியனானது சென். ஹென்றிஸ் கல்லூரி. (ம-23-422)

### தீர்வு...

மைப்புத் தொடர்பில் இலங்கைக் குழுவினரிடம் சரமாரியாகக் கேள்விகளை எழுப்பியுள்ளனர். புதிய அரசமைப்பு ஊடாக தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கப் பெறுமா? என்பதே அவர்களின் முக்கிய கேள்வியாக இருந்துள்ளது. இந்தக் கேள்விகளுக்கு புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் வழிநடத்தல் குழுவிலிருந்த நிமல் சிறிபால டி சில்வாவே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பதில் வழங்கியுள்ளார். கேட்கப்பட்ட மேலதிக கேள்விகளுக்கே, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பதிலளித்ததாகத் தெரியவருகின்றது. (வ-5)

கோமகன்



# விண்வெளித் தொழில்நுட்பங்கள்

## வான் அசைவிகளின் நலன் தருவிகள்

ரோபோக்கள் அறுவைச் சிகிச்சை செய்வது முதல் வயலின் கட்டுவதற்கு பட்டுக்கூடுகளைப் பின்னும் சிலந்திகள் வரை எதிர்கால அறிவியல் புதிய வடிவம் கண்டுள்ளன.

பொதுப்பயன்பாட்டுக்கு வரக்கூடிய வாய்ப்புள்ள அதி நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் அறிவியல் தீர்வுகள் தொடர்பான உதாரணங்கள் குறித்து லண்டனில் உள்ள ரோயல் சொசைட்டி புதிய அறிமுகங்களைத் தருகிறது.

அவர்களுடைய 2016 ஆம் ஆண்டு பட்டியலில் ஆர்வத்தைத் தூண்டும் ஐந்து படைப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை ஆய்வு கூடங்களைத் தாண்டி மனித வாழ்க்கையில் சோதித்துப் பார்க்கத் தயாராகிவிட்டன. அதில் ஒன்று விண்வெளியில் குப்பைகளை சேகரித்தல்.

**விண்வெளியில் குப்பைகளைச் சேகரித்தல்**

காலியான ரொக்கெட் ஏவுகலன்கள், செயலிழந்து போன பெரும் செயற்கைக் கோள்கள், கண்ணாடி மற்றும் பெயின்ட் சிதிலங்கள் போன்றவை விண்வெளியில் மிதந்து கொண்டிருக்கின்றன. 7 ஆயிரம் தொன் விண்வெளிக் குப்பைகள் மூலம் இந்த மெய்நிகர் குப்பைத் தொட்டி உருவாகியுள்ளது. விண்வெளிக் காலம் தொடங்கியது முதல் இப்படித்தான் விண்வெளிக் குப்பையாக்கப்பட்டிருக்கிறது.

**விண்வெளிப் பயண ஆபத்து**


விண்வெளிக்கு அனுப்பப்பட்ட பல கலன்கள் இன்னமும் பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கின்றன. பயன்பாட்டில் இருக்கும் செயற்கைக் கோள்களுடன் மோதக்கூடிய ஆபத்தான நிலையில் அவை உள்ளன. ஆனாலும் அந்தச் செயற்கைக் கோள்கள் எமது இணையத்தளம் மற்றும் தொலைபேசித் தொடர்புகளுக்கு அத்தியாவசியமானவை. இது ஏற்கனவே நடந்துவிட்டது. மணிக்கு ஆயிரக்கணக்கான மைல் வேகத்தில் பூமியை சுற்றி வரும் பயனற்றுப் போன விண்கலத்தின் சிறிய பாகங்கள் கூட பெரும் சேதத்தை விளைவிக்கக் கூடியவை என்பதைக் காட்டியிருக்கின்றன. விண்வெளிக் குப்பைகளுடன் மோதல் ஏற்படாமல் தவிர்க்க பன்னாட்டு விண்வெளி நிலையம் அடிக்கடி தனது நிலையை மாற்றிக் கொள்ள வேண்டிய நிலை காணப்படுகிறது.

**விண்வெளியில் குப்பைகளைச் சேகரித்தல்**

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண கொண்டுவரப்பட்டதே குப்பைகளை அகற்றும் திட்டம். இவ்வாண்டின் ஆரம்பத்தில் இந்தத் திட்டம் தொடங்கியது. விண்வெளிக் குப்பைகளை பூமிப்பாதைக்குள் இழுத்து வரும் இந்தத் திட்டம் புதிய தொழில்நுட்பத்தின் முதல் முயற்சி எனச் சொல்லப்படுகிறது.

"இது அறிவியல் கதை அல்ல. நிஜமான பிரச்சினை. விண்வெளிக் குப்பைகள் அனைத்தும் புவியீர்ப்புத்தன்மை காரணமாக பூமிக்கு வந்துவிடும். ஆனால் சில குப்பைகள் அல்லது துண்டுகள். பூமியில் இருந்து ஆயிரம் கிலோ மீற்றர் உயரத்தில் உள்ளன. அந்த உயரத்தில் இருந்து பூமிக்கு வர ஆயிரம் ஆண்டுகள் ஆகலாம். ஆனால் அவ்வளவு காலம் எம்மிடம் இல்லை. விண்வெளிக் குப்பைகளால் பெரும் பிரச்சினை ஏற்படுவதற்கு இன்னும் 10 அல்லது 20 ஆண்டுகள்தான் இருக்கின்றன" என்று விண்வெளி மையத்தில் உள்ள விண்வெளிக் குப்பைகளை அகற்றும் அணியைச் சேர்ந்த 'ஜேசன் போர்ஷா' கருத்துரைத்துள்ளார்.

பழைய குழாய்கள் மூலம் சூரியப் புயலைக் கண்டறியும் தொழில்நுட்பத்தை உருவாக்கும் உதகை ஆய்வகம் சோதனை ரீதியாகப் பயன்படுத்தப்படும் குப்பைகளை அகற்றும்



தொழில்நுட்பம் என்பன ஆச்சரியப்படத்தக்க வகையில் சாதாரண தத்துவங்களின் அடிப்படையிலானவை.

**விண்வெளி வலை**

மீன் பிடி வலையைப் போன்று இந்த வலையை விண்வெளியில் வீச வேண்டும். வலையில் விண்வெளிக் குப்பை சிக்கியவுடன் கயிற்றால் கட்டப்பட்ட லொறியைப் போல அவை விண்கலத்துக்குப் பின்னால் இழுக்கப்பட்டு பூமிக்குக் கொண்டுவரப்படும்.

பூமிக்குத் திரும்பும்போது அதனால் ஏற்படும் வெப்பத்தால் குப்பைத் துண்டுகள் எரிந்துவிடும். அவ்வாறு முழுமையாக எரிந்துபோகாத துண்டுகள் பசுபிக் கடலில் விழும் வகையில் கட்டுப்படுத்தப்பட்டுச் செலுத்தப்படும்.

**பட்டம்**

இது பாய்மரப்படகில் கட்டப்படும் வெள்ளிப் பாய் போன்று அமைந்திருக்கும். மெல்லிய சவ்வினால் உருவாக்கப்பட்ட இது காற்றுக்குப் பதிலாக சூரிய ஒளியின் மூலம் செலுத்தப்படும். விண்வெளியில் உள்ள குப்பைகளை இழுத்துப் பூமிக்கு அனுப்புவதுதான் இதன் பணி.


உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 606 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 06.10.2017
வெற்றி இலக்கங்கள்
14 45 49 56 N
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 11,555,356/-
தொ.பே: 011 4052002 / 0114052062 Web: www.dlb.lk

கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 198
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 06.10.2017
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 104,331,452/-
N 02 19 29 49
தொ.பே: 011 4052002 / 0114052062 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 37
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2017.10.06
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 60,324,710/-
வெற்றி இலக்கங்கள்
17 30 37 65 M
தொ.பே: 011 4052002 / 0114052062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 06.10.2017 | வெற்றி வாரம் 2194 | வர்ணம் சிவப்பு
மிதுனம்
வெற்றி இலக்கங்கள்
12 34 36 52
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2, 000, 000/=
08.10.2017ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## மரண அறிவித்தல்



பிறப்பு 30 . 03 . 1942

இறப்பு 05 . 10 . 2017

### கனகசபாபதி கனராஜா

நுவரெலியா, ராகலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, பம்பலப்பிட்டி மற்றும் சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி கனராஜா 05.10.2017 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - மனோன்மணி தம்பதிகளின் அன்பு புதல்வரும், காலஞ்சென்றவர்களான கனகராஜா - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், ரதிமலரின் (ரதி) பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கணேசலிங்கம் (கணக்காளர்) மற்றும் சாந்தாதேவி (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரரும், ஸ்ரீ பத்மினி (கொழும்பு), காலஞ்சென்ற செல்வரட்ணம் (அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனரும், சுமதி (வைத்தியர்), சுதன் (கணக்காளர்), குகன் (பொறியியலாளர்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.10.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோயில் வீதி,
சித்தங்கேணி.

தகவல்: மனைவி
ரதிமலர் (ரதி)

ஓம் விராட் விஸ்வப்ப்ரம்மனே நமஹ

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 23.08.1939

மறைவு 15.09.2017



கடந்த 15.09.2017 இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி

### இலங்கைநாயகி இராசரத்தினம்

(ஓய்வு பெற்ற நெசவுப் போதனாசிரியர்)

அவர்களின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இன்று (07.10.2017) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் மண்டபத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(அழைப்பு கிடைக்காதவர்கள் தயவு கூர்ந்து இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

86, தலங்காவல் பிள்ளையார் கோயிலடி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்
சு. இராசரத்தினம்

## மரண அறிவித்தல்



### திருமதி ஞானம்மா முருகையா

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் பொன்னையா வீதி, ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானம்மா முருகையா 06.10.2017 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்- பொன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை- கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் இராஜினிதேவி (தேவி), உதயசூரியன் (மாலைதீவு) ஆகியோரின் அன்புத்தாயும் லோகேந்திரன், மகேஸ்வரி ஆகியோரின் அன்புமாமியும் கஜலக்ஷி (கொழும்பு பல்கலைக்கழகம்), தயாலக்ஷி (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), லக்ஷிகா (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சுவேதா (இந்தியா), தீபிகா (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிஷ்யகள் நாளை (08.10.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வண். வடமேற்கு,
பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை.
077 6679 526, 021 320 9108

தகவல்:
குடும்பத்தினர்.

### வடக்கு...

மாகாணப் பாடசாலைகளில் 446வரையான பாடசாலைகள் மூடப்படவேண்டும் என கல்வி அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

வடக்கு மாகாண சபையின் 107ஆவது அமர்வு அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது. அமர்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், "கல்வி அபிவிருத்தி சார்பாக வடக்கு மாகாணப் பாடசாலைகளின் பின்னடைவுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் சமச்சீரற்ற ஆளணிப் பங்கீடும் அதற்கு மிக முக்கிய காரணியாகும். எனவே பின்தங்கிய கிராமப்புற பாடசாலைகளுக்கு இடையே சமச்சீரான ஆளணியைப் பேணுவதை உறுதிப்படுத்த மாகாணக் கல்வி அமைச்சு காத்திரமான நடவடிக்கையை எடுக்க வேண்டும்" என பிரேரணை ஒன்றை முன்மொழிந்தார். இந்தப் பிரேரணை மீது கருத்துத் தெரிவிக்கும் போதே வடக்கு மாகாண விவசாய அமைச்சர் மேற்கண்ட யோசனையை முன்வைத்தார்.

"வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் நியமனத்தை சமச்சீராக நடைமுறைப்படுத்துவது தற்குச் சாத்தியமில்லை.நியமனம் பெற்ற அன்றைய தினமே சில ஆசிரியர்கள் தமக்கு வேண்டிய இடங்களுக்கு இடமாற்றத்தைப் பெற்றுச் செல்கின்றனர். இவ்வாறான நிலையில் நாம் எப்படி சமச்சீரான நியமனத்தை வழங்க முடியும்.எனவே கிராமப்புற பாடசாலைகளை மூடிவிட்டு நகரப்புற பாடசாலைகள் அல்லது ஆசிரியர்கள் பணியாற்றக் கூடிய பாடசாலைகளைத் தெரிந்து நாம் அபிவிருத்தி செய்வதே சிறந்த தீர்வாக இருக்கும்" என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்தார். (வ-8)

**Win Repair**
சகல விதமான குளிர்சாதனப்பெட்டிகளும் A/C களும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.
-077 964 8942

**உயிரியல் வகுப்புக்கள்**
(A/L) 2018.2019 மாணவர்களிற்கு உயிரியல் தனியாகவோ, குழுவாகவோ பல்கலைக்கழக உதவி விரிவுரையாளரால் கற்பிக்கப்படும்.
தொடர்பு :- 076 928 6861

**கணக்கு லிகிதர் தேவை**
பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணக்கு லிகிதர் தேவை.(பெண்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு : 076 732 1572 / 077 374 0773

**விதைநெல் விற்பனைக்கு**
விவசாயத்திணைக்களத்தினால் சுத்திகரிக்கப்பட்ட BG 406 மற்றும் 34.6 மூன்று அரை மாத இன விதைநெல்லும் நல்லின தென்னம் பிள்ளைகளும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 659 2044

**கருத்தரங்கு**
இளமையை மீண்டும் பெறவும் / நீடிக்கவும் விருப்பமா? விரும்புகிறீர்களா? இந்த இரகசியத்தைச் சொல்லித்தரும் கருத்தரங்கு.
காலம் - 08.10.2017 நேரம் - காலை 8.00- பி.ப. 1.30
இடம் - மனவளக்கலைமன்ற நிலையம்
14/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(U.S.Restourant முன் ஒழுங்கை)
076 699 3906/ 078 469 0785
முன்பதிவு செய்து கொள்ளலாம்.
கட்டணம் ரூ.1000/- மட்டுமே

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### மார்க்கண்டு இரவீந்திரன்

(முன்னாள் குடிவரவு குடியகல்வு திணைக்களம் மொழிபெயர்ப்பாளர்,
பரியோவான் கல்லூரி ஆங்கில ஆசிரியர்,
யாழ்.பல்கலைக்கழக ஆங்கில போதனாசிரியர்)

தோற்றம் 18.10.1954

மறைவு 10.10.2014

அன்பால் எம்மை அரவணைத்த
எம் தெய்வம், மூன்றாண்டு அல்ல
மூவாயிரம் ஆண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எங்களை
விட்டு அகலாது
ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப்
பிரார்த்திக்கின்றோம்.

61/6, பாரதி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 674 7541

## அந்தியேட்டி அறிவித்தல்



தெல்லிப்பழையை பிறப்பிடமாகக் கொண்ட

### தட்சணாமூர்த்தி உருத்திரமூர்த்தி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் (08.10.2017) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

பார் மணியம் லேன், தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.

## மகிந்த...

தெரிவித்துள்ளது.

நீதிமன்றின் உத்தரவைமீறி ஆர்ப்பாட்டம் நடத்திய குற்றச்சாட்டில் 28 பேரை பொலிஸார் கைதுசெய்தனர்.

அம்பாந்தோட்டை, மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்வதற்கு அரசு எடுத்திருக்கும் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று காலை 10.30 மணியளவில் அம்பாந்தோட்டை கடற்கரையோர பூங்காவுக்கு அருகில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடினர்.

முன்னாள் சபாநாயகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சமல் ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாமல் ராஜபக்ச, டலஸ் அழகப் பெரும,செஹான் சேமசிங்க, காஞ்சன விஜயசேகர, பிரசன்ன ரணவீர, மஹிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்ட மகிந்த அணியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், இளைஞர், மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள், தேரர்கள் உள்பட ஆயிரக்கணக்கானோர் அங்கு கூடி அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆரப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டம் நடத்தியோர் பின்னர் அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள இந்திய கொன்சியூலர் அலுவலகம நோக்கி ஊர்வலமாகச் செல்வதற்குத் தயாராகினர். ஊர்வலத்தின் போது அரசுக்கு எதிரான குரல்களை எழுப்பியதுடன் அரசைக் கண்டிக்கும் வகையிலான பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

"நல்லாட்சி அரசே தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யாதே", "இந்திய காலனித்துவம் எமக்கு வேண்டாம்", "சீன காலனித்துவமும் எமக்கு வேண்டாம்", "எங்கள் காணிகளை எமக்கே வழங்கு", "செயற்றிறனற்ற அரசே பதவி விலகு" போன்ற குரல்களை எழுப்பியவாறு முன்னேறிச் சென்றனர்.

**பாதுகாப்பு நடவடிக்கைகள்**

இதேவேளை ஆர்ப்பாட்டம் தொடர்பில் அம்பாந்தோட்டைப் பொலிஸார் ஏற்கனவே நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்ததற்கமைவாக அம்பாந்தோட்டை நீதிவான் மன்றம் தடையுத்தரவொன்றையும் வழங்கியிருந்தது. எனவே அந்தப் பிரதேசத்தில் அதிகளவான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், சிறப்பு அதிரடிப்படையினர், பொலிஸ் கலகம் அடக்கும் பிரிவினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அத்துடன் இந்திய கொன்சியூலர் அலுவலகம், மத்தள வானூர்தி நிலையம் உள்பட குறித்தி இடங்களில் நீர்பாச்சியடிக்கும் வாகனம், கண்ணீர்ப்புகையடிக்கும் வாகனம் என்பனவும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. ஊர்வலமாகச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் இந்திய கொன்சியூலர் அலுலகத்தை அண்மித்தபோது அங்கு பொலிஸார் வீதித் தடைகளை அமைத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் இந்திய கொன்சியூலர் காரியாலய வளாகத்துக்குள் நுழைய முடியாத வகையில் தடுத்தனர்.

**மனுக் கையளிப்பு**

எனினும் பத்தேகம சமித தேரர் உள்ளிட்ட சிலர் இந்திய கொன்சியூலர் காரியாலத்துக்குச் செல்வதற்குச் சந்தர்ப்பமளிக்கப்பட்டது. அவர்கள் அங்கு சென்று தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை இந்திய அதிகாரிகளிடம் கையளித்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்தும் அங்கு நின்றுகொண்டு கடுமையான எதிர்பைத் தெரிவித்தனர். மேலும் பொலிஸார் ஏற்படுத்தியிருந்த வீதித்தடைகளுக்கு அருகில் அம்பாந்தோட்டை மாவட்ட முக்கிய அரசியல்வாதிகள் சிலரின் கொடும்பாவிகளையும் எரித்தனர்.

**இரு தரப்புக்கிடையில் வாக்கவாதம்**

கொடும்பாவியை எரித்ததுடன் தொடர்ந்தும் அங்கு தீ மூட்டும் நடவடிக்கைகளிலும் சிலர் ஈடுபட்டனர். வீதித் தடைகளின் உயரத்துக்கு தீ கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. அதனால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த இரு தரப்புகளுக்கு இடையே வாக்குவாதமும் ஏற்பட்டது. ஒரு தரப்பினர் தீ மூட்டும் நடவடிக்கையை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்தே அங்கு வாக்குவாதம் வலுத்தது.

**களேபரம்**

மேலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதித் தடைகளைத் தகர்த்துக்கொண்டு முன்னேறுவதற்கு எத்தனித்த வேளை அங்கு நிலமை மோசமானது. விதித்தடைகளை சீர்செய்து ஆர்பாட்டக்காரர்கள் உள்நுழைவதைத் தடுக்க பொலிஸார் முயன்றபோதும் அது முடியாமல் போனது.

எனவே கலகம் அடைக்கும் பிரிவினர் களத்தில் இறங்கியதுடன் தண்ணீர் பீய்ச்சியடிக்கப்பட்டது. இருந்தபோதிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒரு தொகையினர் அதற்கும் ஈடுகொடுத்துக்கொண்டு அங்கு நின்றுகொண்டிருந்தனர். கண்ணீர்ப்புகை அடித்து அவர்களையும் கலைப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

"மத்தளவானூர்திநிலையத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கைக்கு எதிராக நாம் இன்று (நேற்று) நீதிமன்றின் தீர்ப்புக்கு மதிப்பளித்து அமைதியான முறையிலேயே ஆர்ப்பாட்டம் நடத்தினோம். எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் சிலரினால் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தமது அடாவடி நடவடிக்கையைக் கட்டவிழ்த்தனர்" என்று அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

(வ -31)

## சரத்...

தாக்கல் செய்திருந்தார்.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் [illegible]ற்கு எதிரான மனுத் தாக்கல் செய்துள்ளார். நாடாளுமன்றத்தை கேள்விக்கு உட்படுத்த நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் இல்லை என்று அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

2003ஆம் ஆண்டு சரத் என்சில்வா தலைமை நீதியரசராக இருந்தபோது, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்த மனுவில், நாடாளுமன்றத்தில் சபாநாயகர் கையெழுத்திட்டு நிறைவேற்றிய சட்டத்தை கேள்விக்கு உட்படுத்தும் அதிகாரம் நீதிமன்றுக்கு இல்லை என்று தீர்ப்பு வழங்கியிருந்தார். இதைச் சுட்டிக்காட்டியே, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று மனுத் தாக்கல் செய்துள்ளார். (வ-5)

## நுண் நிதி...

இலங்கை மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி, வடக்குக்கு இரண்டு நாள்கள் பயணமாக நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். திருநெல்வேலியில் உள்ள திண்ணை ஹோட்டலில் அவர் சிறப்புக் கலந்துரையாடல்களை நடத்தினார். இதன்போதே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்ட அரச அதிகாரிகள் நேற்றுக் காலை இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்கேற்றனர். பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்று மாலை இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்கேற்றனர். மத்திய வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ள நிதி நிறுவனங்களால் வடக்கில் ஏற்படும் நெருக்கடிகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

"வடக்கு மாகாணத்தில் இயங்கும் நிதி நிறுவனங்கள் நுண் கடன் என்ற பெயரில் மக்களுக்கு அதிக வட்டிக்குக் கடனை வழங்கி அதனை அறவிடுவதற்காக பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றனர்.

சில நிறுவனங்கள் கடனை மீள அறவீடு செய்வதற்காக வாடிக்கையாளரின் வீட்டுக்கு இரவில் சென்று பெரும் தொல்லை கொடுக்கின்றன.

இதனால் பல குடும்பங்கள் பிரிவைச் சந்தித்துள்ளன. சிலர் மன அழுத்தத்துக்கு உள்ளாகி தவறான முடிவை எடுத்து உயிரைத் துறக்கவும் வழி வகுத்துள்ளது. இவ்வாறான நிதி நிறுவனங்களின் அனுமதிகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.

மேலும் பிரமிட் வணிகத்தை ஒத்த வியாபாரமும் வடக்கில் மிகப் பெரிய அளவில் இடம்பெறுகின்றது. கேட்டால் அனுமதி உண்டு என்கின்றனர். அதனால் குறித்த வியாபாரத்தை பொலிஸாரும் கட்டுப்படுத்துவதில்லை" என்று பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மத்திய வங்கி ஆளுநரிடம் விளக்கமாக எடுத்துரைத்தனர்.

"வடக்கின் பொருளாதார மேம்பாடு குறித்து அரசு கரிசனையோடு உள்ளது.போரின் பின்பான அபிவிருத்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளது.அந்தவகையிலே வடக்கில் நிதி சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்ற நிறுவனங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

நிதி நிறுவனங்கள் மீது உடன் நடவடிக்கை எடுப்பது இந்தப் பயணத்தின் நோக்கம் அல்ல. ஆனால் வடக்கு மக்கள் மீதான கடன் சுமை அதிகரித்துள்ளது. குறிப்பாக, நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் மக்களிடையேயான நிதிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பல விடயங்களைத் திட்டமிடலோடு முன்னெடுக்க வேண்டியுள்ளது. அதற்கு அரச திணைக்களங்களின் அதிகபட்ச உதவி தேவை. மக்களுக்கு நிதி கையாளுகை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளின் தேவைப்பாடு உணரப்பட்டுள்ளது. அது குறித்து அனைவரும் சிந்திக்க வேண்டும்.

மிரமிட் வணிகத்தை ஒத்த வகையில் இடம்பெறும் வியாபாரம் தொடர்பில் உடனடியாகவே பொலிஸார் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி தெரிவித்தார். (வ-ஒ-101)

## 12ஆவது...

மானம் உடனடியாகவே மின்னஞ்சல் ஊடாக சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக அவைத்தலைவர் அறிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 107ஆவது அமர்வு அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது.இந்த அமர்வில் அவைத்தலைவரால் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

"கடந்த 11 நாள்களாக அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொண்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை மனித உயிர் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் ஆராய்ந்து அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு ஆகியோர் உடனடியாகத் தீர்வைக் காணவேண்டும்" என பிரேரணையில் வலியுறுத்தப்பட்டது.

"கருணா,பிள்ளையான் போன்றவர்கள் போரின் பின்னர் சுதந்திரமாக வெளியில் இருந்தனர். இப்போது பிள்ளையான் மட்டும் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளார்.மேலும் பலர் வெளியில் இருக்கும் போது அப்பாவி தமிழ் இளைஞர்கள் மட்டும் பல ஆண்டுகளாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.எனவே அவர்களை விடுதலை செய்ய காத்திரமான நடவடிக்கையை மாகாண சபை எடுக்க வேண்டும்" என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் வலியுறுத்தினார்.

"அரசியல் கைதிகளின் விடயத்தில் நாம் இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது. அவர்களின் விடுதலை மற்றும் வழக்கு விசாரணைகளைத் துரித்தப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்" என வடக்கு மாகாண சபையின் அனைத்து உறுப்பினர்களும் ஒருமித்த கருத்துகளை பதிவு செய்தனர். அதனையடுத்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"தீர்மானம் உடனடியாகவே சிங்கள மொழிக்கு மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு அரச தலைவர், தலைமை அமைச்சர், இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சிறைச்சாலை மறு சீரமைப்பு அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கபட்டது" என அவைத்தலைவர் சபையில் அறிவித்தார்.

(வ-8)

## மின்சாரம்...

முந்தார். உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போ.நா மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது. இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். விசாரணைகளின் பின் சடலம் நேற்றிரவு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-101)

## உள்ளூராட்சி...

யாழ்ப்பாணம், ஒக். 7

உள்ளூராட்சித் தேர்தலுக்கான நடவடிக்கைகளில் தேர்தல்கள் ஆணைக்குழு மும்முரமாக ஈடுபட்டுள்ளதாக, தேர்தல்கள் மேலதிக ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டவரைவுக்கு அமைவாக, புதிய முறையில் தேர்தலை நடத்துவது தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் முகவர்களுக்கு அறிவூட்டும் நடவடிக்கைகளை தேல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

ஹெல உறுமய மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முகவர்களுக்கு அறிவூட்டும் நடவடிக்கைகள் முற்றுப்பெற்றுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் முகவர்களுக்கு அறிவூட்டும் நடவடிக்கை இன்று முன்னெடுக்கப்படவுள்ளது. தொடர்ந்து ஏனைய கட்சிகளுக்கு அறிவூட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்தினதும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர், பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோருக்கு மூன்று நாள் வதிவிடப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. புதிய தேர்தல் சட்டம், வாக்கெடுப்பு போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பான மதிப்பீடுகள் மாவட்ட மட்டத்தில் நிறைவடைந்துள்ளன. வாக்குச்சாவடிகள் பற்றிய வெளிக்களப் பரிசோதனைகள் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச அலுவலர்கள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு அவை கணினி மயப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் டிசெம்பர் மாதம் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடவுள்ளதால் அவர்களுக்கு தேர்தல் சட்டம் தொடர்பான பயிற்சி இந்த மாதம் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது -என்றார். (வ-5)

## கஞ்சா...

ளம் பகுதியில் பயணித்த கார் ஒன்று வழிமறித்துச் சோதனையிடப்பட்டது.

அந்தக் காரில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ கிராம் எடைகொண்ட கஞ்சா மீட்கப்பட்டது. கஞ்சா போதைப் பொருளை கடத்திச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் காரில் இருந்த குடும்பத்தலைவரும், அவரது மனைவியும் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளில் குறித்த கஞ்சா அநுராதபுரம் நோக்கிக் கொண்டு செல்லப்படுவததாக தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காகவும், நீதிமன்ற நடவடிக்கைக்காகவும் மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்" என கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் சிறப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (வ-21,6)

## 182 தொண்டர்...

அமர்வு அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்த அமர்வில் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் குருகுல ராஜா, "தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் குளறுபடிகள் உள்ளன. நியமனம் வழங்குவது என்றால் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்" என வலியுறுத்தி கவனவீர்ப்பு பிரேரணையை கொண்டு வந்தார்.

அவரின் பிரேரணை தொடர்பாக ஆராயப்பட்டது. உறுப்பினாகள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

"மாகாணத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்த நியமனத்தை இடைநிறுத்த வேண்டும் என்ற முன்னாள் கல்வி அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க அனைவருக்கும் நியமனத்தையும் வழங்குவது தொடர்பாக ஆராயப்படவேண்டும். நியமனம் வழங்கலில் தகவல் திரட்டு புத்தகத்தை கருத்தில் எடுக்காது விடுவது தொடர்பில் ஆராயப்படவுள்ளது. எனவே இந்த நியமனத்தை இடைநிறுத்தி வைப்பதுடன் இது தொடர்பாக முழுமையாக மீள்பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே நியமனங்களை வழங்குவது" என வடக்கு மாகாண சபையால் தீர்மானிக்கப்பட்டது. (வ-8)

## அமைதிக்கான...

விருதுக்கா கப் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர். அமெரிக்கா மற்றும் வட கொரியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் நிலவி வரும் அசாதாரண சூழலைத் தடுக்கவும், அணு ஆயுதப் பயன்பாட்டை முற்றிலுமாக ஒழிக்கவும் போராடியதற்காக இந்த நோபல் விருது ஐகான் அமைப்புக்கு வழங்கப்பட உள்ளது. ஆஸ்திரேலியாவில் 2007ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பின் தலைமையகம் சுவிற்ஸர்லாந்து தலைநகர் ஜெனிவாவில் அமைந்துள்ளது.

(வ-5)

# பாசையூர் சென். அன்ரனிஸ் பளுதூக்கலில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 7

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கலில் பாசையூர் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயம் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

கொழும்பு டொறின்ரன் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை, கடந்த புதன்கிழமை என்று இரண்டு தினங்கள் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

இதில் பாசையூர் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலய அணி இரு தங்கப்பதக்கம், ஒரு வெள்ளிப்பதக்கம், நான்கு வெண்கலப்பதக்கங்கள் என 7 பதக்கங்களைச் சுவீகரித்தது.



17 வயதுப் பிரிவில் 53 கிலோ எடைப்பிரிவில் அ.ஆன்பியூலா 90 கிலோ பளுவைத்தூக்கி தங்கப் பதக்கத்தையும், 75 கிலோவுக்கு மேற்பட்ட பிரிவில் ஜெ.சுகன்யா 115 கிலோ பளுவைத்தூக்கி தங்கப் பதக்கத்தையும், 48 கிலோ எடைப் பிரிவில் அ.திசாளினி 79 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும், அதே எடைப் பிரிவில் ச.டியானா 81 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும், 58 கிலோ எடைப் பிரிவில் ஏ.கிருசாந்தி 78 கிலோ பளுவை தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

20 வயதுப் பிரிவில் 58 கிலோ எடைப்பிரிவில் பா.மேரி ரதீசனா 103 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், 90 கிலோ எடைப் பிரிவில் யூ.மேரி லக்சனா 94 கிலோ பளுவை தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

17 வயதுப் பிரிவிலும், ஒட்டுமொத்த வயதுப் பிரிவும் பாசையூர் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயம் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

(ம-23-422)

## சிவானந்தா அணி போராடி வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 7

உரும்பிராய் திருக்குமரன் விளையட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சிவானந்தா அணி போராடி வெற்றிபெற்றது.

திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கீரிமலை சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பை ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து, சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 1:0 என்ற கோல் கணக்கில் சிவானந்தா அணி வெற்றிபெற்றது.

(ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 7

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)

## விஷ்ணுகாந்துக்கு மற்றொரு தங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 7



இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பளுதூக்கல் போட்டியில், 20 வயது ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வீரர் விஷ்ணுகாந்த் தங்கப் பதக்கம் வென்றார்.

இசுறுபாய கல்வி அமைச்சின் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான பளுதூக்கல் தொடரில், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை பிரதிநித்தும் செய்த ச.விஷ்ணுகாந்த் 77 கிலோ எடைப் பிரிவில் 225 கிலோ பளுவைத் தூக்கி தங்கப்பதக்கம் வென்றார். கடந்த வருடமும் இவர் தங்கப் பதக்கத்தை வென்றிருந்தார்.

(ம-23)

## மத்தி வென்றது வெள்ளி

யாழ்ப்பாணம், ஒக். 7

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பளுதூக்கல் தொடரில், 20 வயது ஆண்கள்பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.



இசுறுபாய கல்வி அமைச்சின் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்தும் செய்த ச.சிவப்பிரியன் 69 கிலோ எடைப்பிரிவில் 185 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

(ம-23)

## ஞானம்ஸ் கலையொளி அணிகள் இறுதியில் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 7

இருபாலை விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2 மணிக்கு குறித்த கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து இணுவில் கலையொளி அணி மோதவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் கா.சுதாகரன் கலந்து கொள்ளவுள்ளார்.

(ம-422)



## பளுதூக்கலில் யாழ். இந்துவுக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 7

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கலில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் யு.சுஜந்தன் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

கொழும்பு டொறிங்ரன் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான பளுதூக்கலில் 62 கிலோ எடைப் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த யு.சுஜந்தன் 195 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

(ம-422)

## கால்பந்தாட்டத்தில் லூசியாக் கல்லூரி தேசியச் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 7

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில், 16 வயது ஆண்கள் பிரிவில் மன்னார் சென். லூசியாக் கல்லூரி அணி தேசியச் சம்பியனானது. வெள்ளவத்தை கூரே பார்க் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் சென். லூசியா மகாவித்தியாலய அணியை எதிர்த்து அல் ஹமிடியா உசையினியக் கல்லூரி அணி மோதியது.

ஆட்டத்தின் 5ஆவது நிமிடத்தில் சென். லூசியாக் கல்லூரியின் முதல் கோலைப் பதிவுசெய்தார் தயன்சன். 8ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலைப் பதிவு செய்தார் றோச். 2:0 என்று லூசியாவின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது சென். லூசியாக் கல்லூரி.

(ம-23-422)



# டோனி... டோனி...

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதலாவது ரி-20 ஆட்டம் இன்று நடைபெறவுள்ளநிலையில், இன்றைய ஆட்டத்தில் இந்திய அணியின் நட்சத்திர வீரர் டோனிக்கு மகத்தான வரவேற்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
டோனியின் சொந்த மாநிலமான ராஞ்சியிலேயே இன்றைய ஆட்டம் நடைபெறுகிறது. ராஞ்சியில் டோனிக்கு ரசிகர்கள் அதிகம். இதனாலேயே அவருக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)





# ஆர்ஜென்ரீனாவுக்கு மேலும் நெருக்கடி

ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில், களமிறங்குவதில் மேலும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது ஆர்ஜென்ரீனா. 1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆர்ஜென்ரீனா இல்லாத உலகக்கிண்ணத் தொடரையும், மெஸ்ஸி இல்லாத உலகக்கிண்ணத் தொடரையும் காணத்தான் வேண்டுமா என்று தற்போதிருந்தே ஏங்கத் தொடங்கியுள்ளனர் கால்பந்து ரசிகர்கள்.
உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் தற்போது பரவலாக நடைபெற்று வருகின்றன. தென்ன மெரிக்க நாடுகளுக்கு இடையிலான சுற்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெரு - ஆர்ஜென்ரீனா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இதையடுத்தே ஆர்ஜென்ரீனா உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெறுவதில் சிக்கல்கள் எழுந்துள்ளன.
தென்ன மெரிக்கக் கண்டத்தில் இருந்து முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் மட்டுமே உலகக்கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதிபெறும். 5ஆவது இடத்தில் உள்ள அணி நியூசிலாந்துக்கு எதிராக அடுத்த மாதம் இரண்டு ஆட்டங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். ஆர்ஜென்ரீனா அணி தற்போது ஆறாவதுஇடத்தில்உள்ளது. இதனால்நியூசிலாந்தை வீழ்த்தி முன்னேற்றம்காணும் வாய்ப்பும் அந்த அணிக்கு கிடைக்காமல் போகலாம். தகுதிச் சுற்றில் ஈக்குவடோருக்கு எதிரான ஆட்டம் மட்டுமே ஆர்ஜென்ரீனாவுக்கு எஞ்சியுள்ளது. இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா மிகப்பெரும் வெற்றியைப் பெறவேண்டியது தவிர்க்க முடியாததாக மாறியுள்ளது. (ம)

# இந்தியா - ஆஸி. ரி-20 தொடர் இன்று



இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் இன்று ஆரம்பமாகிறது. ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் ஏற்கனவே முடிவடைந்துள்ளது. இந்தத் தொடரை 4:1 என்ற அடிப்படையில் இந்தியா கைப்பற்றியது. இந்த நிலையில் இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் இன்று ஆரம்பமாகிறது. ராஞ்சியில் இன்றைய ஆட்டம் நடைபெறவுள்ளது. இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 10ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 13ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

**இந்திய அணி விவரம்**
விராட் கோக்லி (தலைவர்), ரோகித் சர்மா, தவான், கே.எல். ராகுல், மணிஷ் பாண்டே, கேதர் ஜாதவ், டினேஸ் கார்த்திக், டோனி, பாண்டியா, குல்தீப் யாதவ், சாகல், பும்ரா, புவனேஷ்வர் குமார், நெக்ரா, அக்சர் பட்டேல்.

**ஆஸ்திரேலிய அணி**
சிமித் (தலைவர்), வோர்ணர், ஜேசன், கிறிஸ்ரியன், கட்டர் நைல், கம்மின்ஸ், பின்ஞ், ஹெட், ஹென்றிக்ஸ், மக்ஸ்வெல், பெயின், ரிச்சட்டசன், சாம்பா. (ம)

## மைலோ கிண்ண கால்பந்தாட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 7
மைலோ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் கிளிநொச்சி மாவட்டத்துக்கான ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன. உதய தாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி இந்த ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. (ம-23)



இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான கபடித் தொடரில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி. (ம-422)

## இலங்கை அணி சிறந்த ஆரம்பம்

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் சிறந்த ஆரம்பம் கண்டது இலங்கை அணி.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களாக கருணாரத்ன மற்றும் சில்வா. 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சில்வா. மென்டிஸ் ஒரு ஓட்டத்துடன் ஏமாற்றினாலும் மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் கருணாரத்ன. நேற்றையதின இரவு உணவு இடைவேளையின்போது இலங்கை அணி 3 இலக்குகளை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (ம)

## மெத்டிஸ்த பெண்களுக்கு கிடைத்தது வெள்ளி

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கலில் பெண்கள் பிரிவில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ரி.சுவகர்ணசீலி வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்தார். கொழும்பு டொறிங்ரன் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான பளுதூக்கலில்,



சுவகர்ணசீலி 63 கிலோ எடைப் பிரிவில் 83 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளி பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார். (ம-422)

# ஆறு ஆட்டங்களில் விளையாடுவதற்கு குணதிலகவுக்கு விதிக்கப்பட்டது தடை

இலங்கை அணியின் சகலதுறை வீரர் குணதிலகவுக்கு, ஆறு ஒருநாள் ஆட்டங்களில் விளையாடத் தடை விதித்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்துள்ளது இலங்கை கிரிக்கெட் சபை.
இந்திய அணி, இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது குணதிலக, முதல் இரண்டு ஒருநாள் ஆட்டங்களிலும் விளையாடினார். அதன் பின்னர் தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக ஏனைய ஆட்டங்களில் விளையாடவில்லை. காயம் குணமடைந்த பின்னர் உடற்தகுதியை நிரூபிக்க வேண்டிய பயிற்சி ஆட்டங்களில் களமிறங்கவில்லை, திட்டமிட்டுப் பயிற்சியைப் புறக்கணித்தமை, களத்துக்கு வெளியே ஒழுங்கீனமாக நடந்துகொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் குணதிலகவின் மேல் சுமத்தப்பட்டுள்ளன.
இதையடுத்து ஆறு ஆட்டங்களில் விளையாடத் தடை விதித்து நடவடிக்கை எடுத்துள்ளது இலங்கை கிரிக்கெட் சபை. அது மட்டுமல்லாது அவரது ஒப்பந்த ஊதியத்தில் இருந்து 20 சதவீதம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.
இந்தத் தடை உடனடியாக நடைமுறைக்கு வருகிறது. இதனால் இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகும் ஒருநாள் தொடரில் இருந்து குணதிலக முழுவதுமாக நீக்கப்பட்டுள்ளார். (ம)



# ஹென்றிஸ்க்கு வெண்கலம்



யாழ்ப்பாணம், ஒக். 7

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில், 16 வயது ஆண்கள் பிரிவில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி வெண்கலப் பதக்கத்தினைக் கைப்பறியது.

நேற்று நடைபெற்ற வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் ஆட்டத்தில் களுத்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியலய அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது. இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)

# முதல் நாளில் 428 ஓட்டங்கள் தெ.ஆபிரிக்கா மிரட்டலாட்டம்



பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில், நேற்றைய முதல் நாளில் மட்டும் 428 ஓட்டங்களைக் குவித்து வியக்க வைத்துள்ளது தென்னாபிரிக்க அணி. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. தென்னாபிரிக்க அணியின் ஆரம்ப வீரர்களாக எல்கர் மற்றும் மார்க்ரம். கடந்த ஆட்டத்தைப் போலவே இந்த ஆட்டத்திலும் அடித்தளம் சிறப்பாக அமைந்தது. ஆரம்ப வீரர்கள் இருவரும் சதம் கடந்தனர். இலக்குச் சரிவில்லாமல் 200 ஓட்டங்களைத் தொட்டது தென்னாபிரிக்க அணி. அணி 243 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 113 ஓட்டங்களுடன் எல்கர் ஆட்டமிழந்தார். 143 ஓட்டங்களுடன் மார்க்ரம் பவிலியனுக்குத் திரும்பினார். பவுமா 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் அம்லா, பிளாசிஸ் இருவரும் இணைந்து நேர்த்தியான இன்னிங்ஸைக் கட்டமைத்தனர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். நாள் முடிவில் தென்னாபிரிக்க அணி 3 இலக்குகளை இழந்து 428 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அம்லா 89 ஓட்டங்களுடனும், பிளாசிஸ் 62 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

(ம)

**தேவை**

பற்சிகிச்சை நிலையத்துக்கு பெண் தாதிய உதவியாளர் தேவை. சுயவிவரக் கோவையுடன் 07.10.2017 சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நேரில் வருகை தரவும்.

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
076 878 8148

**Immediate Vacancy**

யாழ் நகரில் இயங்கும் பிரபல பல்பொருள் அங்காடிக்கு (Food City) முகாமையாளர் (Supermarket - Manager) உடன் தேவை. ஆக குறைந்தது உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ இரண்டு வருட முன் அனுபவம் தேவை. சுயவிவரக்கோவையை பின்வரும் மின்அஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்.
afccolombo@sltnet.lk மேலதிக தகவல்களுக்கு
077 477 3481

**After O/L A/L Study Abroad**

UK Collaboration
* University of East London
* Bedfordshire University
* CRIC - Anglia Ruskin University
* EIC - Edinburgh Napier University
* HIBT - University of Hertforshire
* ICP - University of Portsmouth
* LIBT - Brunel University
* PDIC - Plymouth University

Study Hotel Management in Singapore & Malaysia with part time job

Malaysia Collaboration
* APU (APIIT)
* Taylor's University
* INTI University
* SEGI University
* KDU University

Australia Collaboration
* James Cook University
* Curtin University
* Macquarie University
* MIBT - Deakin University
* ACN - La Trobe University
* PIBT - Edith Cowan University
* SIBT - University of South Australia

Apply Now For 2017/18 Intake

Singapore Collaboration
* James Cook University
* Curtin University * MDIS * LSBF

Latvia, Poland, Lithuania, Cyprus
(Europe Countries ,Low Countries)

Swiss Collaboration
* HTMi - Hotel Tourism Management Institute
* European University

New Zealand Collaboration
* UCIC - University of Canterbury
* NTEC
* Quantum College

Study MBBS
China | Malaysia | Russia | Latvia
Belarus | Bangladesh | India
Approved by SLMC
UK, ECFMG-USA , IMED
WHO & UNESCO


வெளிநாட்டில் படிக்க, உழைக்க எமது இலவச சட்ட ஆலோசனை மூலம் பலர் பயன் பெற்றுள்ளனர் .......

iCS DREAM BEYOND BOARDERS
Foreign Education Services
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
021 4926222 , 077 3013060
107 B 1/1, Galle Road, Colombo-06

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**
உடனடியாக பதிவு செய்யுங்கள்
இறுதி சந்தர்ப்பம்
யாரும் இலவசமாக அமெரிக்கா போகலாம்
அமெரிக்கா செல்லும் 51 வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
0768226243
**V2 TRAVELS**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 |
| சாவகச்சேரி 0768226242 | நெல்லியடி 0776699892 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

## மரண அறிவித்தல்



தோற்றம்
22 . 09 . 1930

மறைவு
06 . 10 . 2017

### திருமதி மனோன்மணி சண்முகலிங்கம்

திருநெல்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சண்முகலிங்கம் 06.10.2017 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் V.S.ரத்தினம்(கோண்டாவில்) காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பொன்னம்பலம் சண்முகலிங்கத்தின் அன்பு மனைவியும் லோகேஸ்வரன் (சுவிஸ்), சொர்ணேஸ்வரி, ஞானேஸ்வரி(ஜேர்மனி), சிவனேஸ்வரி (நெசவு போதனாசிரியர்), கோணேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிரமிளா (சுவிஸ்), திருஞானம், கந்தையா(ஜேர்மனி), ஆனந்த கேதீஸ்வரன்(ஈசன்), குமுதினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சத்தியவாணி, வாகீசன், கஜானி, திலானி, ஸ்னேகா, விண்ணகன், நாவலினியன் ஆகியோரின் பேர்த்தியும் யதுக்ஸ்ஷா, அநஸ்கா, அஜீசன், அஸ்விக்கா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முத்துமாரி அம்மன் கோயில் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 605 0199/ 021 790 0227

**வாடகைக்கு**
இல.98, ஜின்னா வீதியில் அமைந்துள்ள வீடு, மேல்மாடி மட்டும் வாடகைக்கு சிறிய குடும்பத்திற்கு பொருத்தமானது.
077 636 5926

**விற்பனை முகவர் தேவை**
ஸ்நாக்ஸ் மற்றும் முறுக்கு 20ரூபா, 60ரூபா பைக்கற்கள் விற்பனை செய்ய அனுபவமுள்ள விற்பனை முகவர் தேவை. (கடன் கிடையாது)
தொடர்பு-075 777 7372

**வீடு, காணி விற்பனைக்கு**
நல்லதண்ணீர் கிணற்றுடன் வீடு, காணி விற்பனைக்குண்டு.
இடம் : கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு . யாழ்ப்பாணம்.
076 785 1067

**English Literature - Class**
H.N.D.E. Syllabus
By an Expert in Literature
Week days & Weekend days
தொடர்பு - 076 697 3040/ 021 221 2410
ELAS Sir Pon. Ramanathan Rd, Thirunelvely, Jaffna.
(பல்கலை எதிரில்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.